சேலம் மாவட்ட திருக்கோயில்கள் வழிகாட்டி

திருக்கோயில்கள் வழிகாட்டி

சேலம் மாவட்டம்

தமிழ்நாடு அரசு
இந்து சமய அறநிலையத்துறை

சேலம் மாவட்ட திருக்கோயில்கள் வழிகாட்டி

திருக்கோயில்கள் வழிகாட்டி

சேலம் மாவட்ட
திருக்கோயில்கள் வழிகாட்டி

தமிழ்நாடு அரசு
இந்து சமய அறநிலையத்துறை

முதற்பதிப்பு	:	ஆகஸ்ட் 2014
முன் அட்டை	:	அருள்மிகு சுகவனேஸ்வரர் அருள்மிகு ஸ்வர்ணாம்பிகையம்மன் சேலம் நகர்.
பின் அட்டை	:	அருள்மிகு கோட்டை மாரியம்மன் கோட்டை, சேலம் நகர்.
உள்அட்டை	:	அருள்மிகு இராஜகணபதி சேலம் நகர்.
பக்கங்கள்	:	212 (அட்டை, வரைபடம் உட்பட)
அச்சிடுவோர்	:	ஸ்ரீ கௌரி ஆப்செட் பிரிண்டர்ஸ், சேலம்
விலை	:	₹ 120.00
உரிமை	:	ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை தமிழ்நாடு அரசு

அமைதி – வளர்ச்சி – வளமை

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள்

பூ.செந்தூர்பாண்டியன்
இந்து சமயம் மற்றும்
அறநிலையத்துறை அமைச்சர்

தலைமைச்செயலகம்
சென்னை – 600 009.

வாழ்த்துச் செய்தி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆட்சியின் சாதனைகளின் வைரக்கல்லில் ஒன்றாக, வண்ணமும் எண்ணமும் இணைத்து எழில் சேர்க்கும் விதமாக இவ்வழிகாட்டி புத்தகம் அமைந்துள்ளது.

“ஆலயம் தொழுவது சாலவும் நன்று” என்பது ஆன்றவிந்து அடங்கிய ஆன்றோர் கூறிய அமுத மொழியாகும். அந்த அமுத மொழியை தம் வாழ்க்கையில் கடைப்பிடித்து ஆலய வழிபாடுகளை முறையாகச் செய்து மேன்மை பெற்றவர்கள் நம் முன்னோர்கள்.

மன்னவர்களும் அவர்களை அருள்வழியில் செலுத்திய இறையருள் பெற்ற முன்னவர்களும் இப்பெருமக்களைப் பின்தொடர்ந்த பின்னவர்களும் பக்தியுடன் எழுப்பிய இறைமாளிகைகளே திருக்கோயில்களாக மிளிர்கின்றன, ஒளிர்கின்றன. நமது தமிழகத்தில் ஆயிரக்கணக்கில் திகழும் திருக்கோயில்கள் நம்பிக்கையின் சின்னங்கள்.

சீலம் நிறைந்த **சேலம் மாவட்டம்** ஞாலம் போற்றும் திருக்கோயில்கள் பலவற்றைப் பெற்றுள்ளது. இத்திருத்தலங்களை பற்றிய ”திருக்கோயில்கள் வழிகாட்டி” ஒரு சிறந்த கருத்துப்பெட்டகமாகும்.

இந்நூலை நேர்த்தியான முறையில் உருவாக்கம் செய்த அனைத்து நல்உள்ளங்களுக்கும் என் அன்பும், மனம்கனிந்த வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி.

(பூ.செந்தூர்பாண்டியன்)

முனைவர் ரா.கண்ணன்.இ.ஆ.ப.,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

சுற்றுலா, பண்பாடு மற்றும்
அறநிலையங்கள் துறை
தலைமை செயலகம்,
சென்னை – 600 009.
தொலைபேசி : 044 25670820

வாழ்த்துரை

தமிழ்நாட்டில் உள்ள திருக்கோயில்களைப் பற்றிய வரலாறுகளை மாவட்ட வாரியாக எழுதி வெளியிடுவது காலத்தின் தேவையாக உள்ளது. இதனை ஆன்மீக அன்பர்கள் பெரிதும் எதிர்நோக்கியுள்ளனர். தமிழக நாகரிகம் திருக்கோயில் நாகரிகமே.

"கோவிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்"
"திருக்கோவிலில்லாத திருவிலூர்
..... ஊரல்ல அடவி காடே"

என்னும் கருத்தாழம் தமிழக மக்களிடையே அழுந்தி உள்ளது. வாழ்க்கை சூழல் மற்றும் காலவளர்ச்சியில் பல்வேறு சிக்கல்களை எதிர்கொள்ளத் துணியும்போது ஏற்படும் மனச்சலனங்கள் ஆன்மீகத் தேடல்களை அதிகரித்துள்ளன. பாடல் பெற்ற தலங்கள், பரிகாரத்தலங்கள், மங்களாசாசனம் செய்யப்பெற்ற திருக்கோயில்கள், இராசித்தலங்கள் என மக்கள் தங்களின் தேவைகளுக்கேற்ற திருத்தலங்களை நோக்கி பயணிக்கத் தொடங்கியுள்ளனர்.

ஒரு கோயிலைப் பார்க்கும்போது அதில் உள்ள கற்சிற்பங்கள், மரச்சிற்பங்கள் மற்றும் பண்டைய ஓவியங்கள் என அக்கோயிலின் தல வரலாற்றை எடுத்துரைக்க அங்கு எவரும் இலர். பல கோயில்களில் இராமாயணம், மகாபாரதம், திருவிளையாடல் புராணம் போன்ற காப்பியங்களில் வரும் புராண வரலாற்றுக்காலத்தில் இறைவன் நடத்திய திருவிளையாடல்கள் காட்சிப்படுத்தவதன் மூலம் எடுத்துரைக்கப் படுகின்றன. உதாரணமாக திருப்புடைமருதூர் இராஜகோபுரம் ஓவியங்கள், திருக்குற்றால சித்திரசபை ஓவியங்கள் போன்றவை. அதனால் அதிகாரப்பூர்வமாக வெளியிடப்படும் வழிகாட்டி நூல் செல்லும் கோயில்களைப் பற்றி அறிவதற்கு இன்றியமையாததாக இருக்கிறது.

மேலும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் குறிப்பாக இந்து மதத்தின்மீதும், இந்துவின் பண்டைய கலாச்சாரத்தை அறியவும், தங்கள் பயணத்திட்டங்களை வகுக்கவும் இவ்வழிகாட்டிநூல் நல்ல உறுதுணையாக அமையும்.

மாவட்டந்தோறும் இவ்வழிகாட்டி நூல்கள் இந்து சமய அறநிலையத்துறையினரால் வெளியிட்டமைக்கு என் மனமார்ந்த வாழ்த்துக்கள். எல்லா மாவட்டங்களையும் அடக்கிய மாநில அளவிலான ஒரு வழிகாட்டி நூலையும், மாவட்ட நூல்களைச் சுருக்கி வெளியிட வேண்டுமென்று பிரார்த்தித்துக்கொண்டு வாழ்த்துகிறேன்.

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்பது அவ்வை பிராட்டியாரின் நல்லுரையாகும். அறம் காத்த பண்டைத்தமிழ் மன்னர்கள் அற சின்னங்களாக ஆலயங்களை எழுப்பி தத்தம் இயல்பிற்கேற்றவாறு பொன்னும், பொருளும் வழங்கி அவைகளை பண்புக் களஞ்சியங்களாக உருவாக்கி வைத்துள்ளனர். அண்டை நாட்டார் வந்து வியந்து போற்றும் கவின்கலை சிற்பங்களையும், ஓவியக் கலைகளையும், ஒவ்வொருவரும் கண்டு பேருவகை கொள்ள வேண்டிய ஒன்றாகும். திருக்கோயிலின் தொன்மை கருதி மாவட்டந்தோறும் உள்ள திருக்கோயில்களுக்குச் சென்று கண்ணாரக் கண்டு நெஞ்சுருகி நின்று நினைந்தேத்தி வழிபட ஏதுவாக மாவட்டக் கையேடு தல வரலாற்றோடு வெளியிடுவது பக்தர்களுக்கு உள்ளங்கை நெல்லிக்கனியாகும்.

இக்கையேடு வெளியிடுவதற்கு தலவரலாறு முதல் அப்பகுதி திருக்கோயில்களின் தனிச்சிறப்புகள் வரை கொடுத்துதவி, மாவட்டந்தோறும் இந்நூல் வெளியிட உறுதுணை புரிந்த அத்துணை அன்பர்களுக்கும் வாழ்த்துக்கள்.

ரா கண்ணன்
28/05/2014

(முனைவர் ரா.கண்ணன்)

ப.தனபால், எம்.ஏ.,பி.எல்.,
ஆணையர்,
இந்து சமய அறநிலையத்துறை

119, உத்தமர் காந்தி சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை 600 034.
அலுவலகம் : 044–28334815
நிகரி : 044–28334816
மின்னஞ்சல் : tn.endowments@tnhrce.org

வாழ்த்துரை

'கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்பது திருக்கோயில்கள் தொடர்பான பழமொழி ஆகும்.

கோயில்களை மையமாகக் கொண்டே தம்முடைய வசிப்பிடங்களை நம் முன்னோர்கள் அமைத்துக்கொண்டனர்.

'இரையைத் தேடுவது இவ்வுலக வாழ்க்கைக்கு'
'இறையைத் தேடுவது அவ்வுலக வாழ்க்கைக்கு'

என்னும் இவ்வரிகளை தம் இரு கண்களாகக் கொண்டு வாழ்ந்தவர்கள் நம் முன்னோர்கள். இறைவன் எல்லா இடங்களிலும் நிறைந்திருப்பவன். அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் விளங்குபவன் அவன். அவனது திருவருளை திருக்கோயில்களின் வழியே பெற்றனர் நம் மூதாதையர்கள்.

பசுவின் உடல் முழுவதும் பால்சத்து பரவியிருப்பினும் அப்பால் சத்தினைப் பசுவின் திருமடியிலிருந்தே நாம் பெறுகிறோம் அல்லவா ? நம் திருக்கோயில்களின் தத்துவம் இதுவே.

''வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யான்எனது என்றவ ரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே! ''

என்ற மணிவாசகரின் மணிமொழிக்கேற்ப எல்லாம்வல்ல அந்த இறைவனை திருக்கோயில்களில் கண்டுகளித்தனர்; வாழ்த்தினர்; வழுத்தினர்.

திருக்கோயில்களில் எழுந்தருளியிருக்கும் கடவுளர் மீது இப்பெருமக்கள் கொண்டிருந்த அன்பிற்கு எல்லையே இல்லை.

தங்களது வசிப்பிடங்களாகிய இல்லங்களை அழியக் கூடிய தென்னங்கீற்றுகளையும், பனையோலைகளையும், செங்கற்களையும் கொண்டு அமைத்த நம் முன்னோர்கள் இறைவனின் வசிப்பிடமான கோயில்களை மட்டும் அழிவில்லாத கருங்கற்களால் அமைத்துள்ளனர். அதனால்தான் அரசன்முதல் சாமானியன்வரை அவரவர் அரண்மனைகளையும், இல்லங்களையும் காப்பதைவிட, ஆலயங்களைக் காத்து வந்தனர். ஆலயங்களைக் காத்துவரும் அரசர்கள் வரிசையில் **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்** காத்துவரும் தமிழகத் திருக்கோயில்கள் காலத்திற்கும் நிலைபெறுபவைகளாக உள்ளன.

அழிவில்லாத ஆதிக்கு அழிவில்லாத கற்றளிகள்; கற்கோயில்கள்!

இத்தகு சிறப்பு மிக்க திருக்கோயில்களைப் பற்றிய விவரங்கள் அடங்கிய திருக்கோயில்கள் வழிகாட்டி நூல் வெளியிடுவது சாலச்சிறந்த ஒரு பணியாகும்.

இவ்வழிகாட்டி நூல் வெளிவர உதவிய நல்உள்ளங்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்து அனைவரும் இறைவன் திருவருளால் எல்லா வளமும் பெற்று பல்லாண்டு வாழ வாழ்த்துகிறேன்.

ப.தனபால்

(ப.தனபால்)

முகவுரை

“நீலத் திரைக்கடல் ஓரத்திலே – நின்று
நித்தம் தவம் செய்யும் குமரிஎல்லை – வட
மாலவன் குன்றம் இவற்றிடையே – புகழ்
மண்டிக் கிடக்கும் தமிழ்நாடு”

என்றார் மகாகவி பாரதியார். வடவேங்டம் தென்குமரியாம் இவ்விரண்டிற்கும் இடைப்பட்ட தீந்தமிழ்நாட்டின் பெருமைக்கு மேலும் பல பெருமைகளை நல்கி நிற்பவையே நம் தமிழகத் திருக்கோயில்கள் ஆகும்.

அங்கிங்கெனாதபடி எங்கும் பரந்து நிறைந்து உள்ள அருவப் பரம்பொருளை உருவப் பரம்பொருளாகக் காட்டுவனவே நம் திருக்கோயில்களாகும்.

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய் கதியாய் விதியாய்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே !

என்று இதனை விஞ்சுதமிழில் விளக்குவார் அருணகிரிநாதர்.

"நான் வணங்கும் நாரணன் தூணிலும் இருக்கிறான், துரும்பிலும் இருக்கிறான்." என்று பதில் தருவான் பக்த பிரகலாதன் தந்தை இரண்யனுக்கு. மேலும் அணுவிலும் உள்ளான் அணுவினைச் சதகூறு இட்ட கோணிலும் 1/100 உள்ளான் என்று நாரணனைப் பற்றி நவில்வான் பிரகலாதன்.

இது கம்பன் காட்டும் கவின் காட்சி

"அரியானை அந்தணர்தம் சிந்தையானை
அருமறையின் அகத்தானை அணுவை யார்க்கும்
தெரியாத தத்துவனை தேனை பாலை திகழ் ஒளியை "

என்று மேற்கூறிய கருத்துகளை வலியுறுத்துவார் அப்பரடிகள் தனது தேவாரத்தில். இறைவனின் வரம்பில் ஆற்றலை உணர்த்துவனவே இவை.

கட்டுக்கடங்காமல் பாயும் பெருவெள்ளத்தைக் கொண்டு உழவன் உழுதொழிலை... செய்திட இயலுமோ ? இயலாது; ஆனால் அந்த பொங்கும்

பூம்புனல் வெள்ளத்தை அணைகள் கட்டித் தடுத்து தேக்கி வைத்து... அந்த நீரைக் கால்வாய்களில் மெல்ல மெல்ல விடுத்தால் அந்த நீரானது வாய்க்கால்களில் சென்று... வயல்களில் மெதுவாகப் பாய்ந்து பயிர்களை வளர்க்கும் அல்லவா ?

அந்த அணைகளின் பணியைத்தான் திருக்கோயில்கள் புரிகின்றன. இறைவனின் வரம்பிலாற்றலை நமக்கு ஏற்றாற்போல மென்மையாக்கித் தருகின்றன.

இறைவனின் அருளைப் பெறுவதற்காக நம் முன்னோர் ஆக்கித்தந்த திருக்கோயில்கள் அருள் நிலையங்களாக இருந்ததோடு அறநிலையங்களாகவும் பரிமளித்தன.

அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்
பொன்னம் பாலிக்கும் மேலும் இப்பூமிசை
என்னம் பாலிக்குமாறு கொண்டு இன்புற
இன்னம் பாலிக்குமோ இப்பிறவியே...

என்பது தேவாரம். பகவானுக்குப் படைக்கும் படையல்கள் பல பலவாம் ஏழைகளின் பசியைத் தீர்த்தன. அன்னம் பாலிக்கும் தொண்டறம் அன்றும் நடந்தன, இன்றும் தொடர்கின்றன.

திருக்கோயில்கள் தண்டமிழ் வளர்க்கும் தமிழ் மன்றங்களாகவும் திகழ்ந்தன, திகழ்கின்றன. முத்தமிழும் முழங்குகின்றன அங்கே.

தேவாரமாம் பாவாரமும்
திவ்வியப் பிரபந்த தீஞ்சுவையும்
விருப்பம் தரும் திருப்புகழும்

திருக்கோயில்களில் கோலோச்சுகின்றன.

தமிழின் இனிமையில் சிக்கி சொக்கிப் போகின்றனர் இறையன்பர்கள். இறையன்பர்கள் மட்டுமல்ல இறைவனும்கூட தமிழமுதத்தை பருகிப் பருகி அதில் மயங்கியவன்தானே ?

தன்னடியவன் சுந்தரனை தடுத்தாட்கொண்ட சிவபெருமான் அவனிடம் கேட்டதென்ன ? “சுந்தரா! என்னை நீ சொற்றமிழால் பாடு” என்றுதானே கேட்டார்.

சுந்தரமூர்த்தியும்,

பித்தா பிறைசூடி பெருமானே! அருளாளா!
என்று பாடினார். என்னே அதிசயம் ?

யாரேனும் நம்மைப் பார்த்து "பைத்தியக்காரா!" என்று சொன்னால் சும்மா விட்டுவிடுவோமா ? எவ்வளவு கோபம் வரும் நமக்கு ?

ஆனால் சுந்தரமூர்த்தியார் "பித்தனே!" என்கிறார், அதைக் கேட்டு பெரிதும் பூரித்து மகிழ்கின்றார் கறைமிடற்று அண்ணல். காரணம் தமிழ்... தமிழ்... தமிழ்... சிவசித்தர் உண்மையில் ஒரு தமிழ்ப்பித்தர் என்றல்லவா தெரிகிறது.

நாரணர் மட்டும் என்னவாம் ? அவரும் ஒரு ஒப்பற்ற தமிழ் விரும்பிதானே!

ஆழ்வார்களின் அமுதத்தமிழை மாந்தி மாந்தி மகிழ்ந்து நெகிழ்ந்து அரங்கத்தில் அரவணையில் அறிதுயில் புரிகின்றார் அவர்.

திருமழிசையாழ்வார் வாழ்வில் நடந்தது என்ன ? இந்த ஆழ்வாரின் மாணவன் கணிகண்ணன் என்பவன். இந்தக் கணிகண்ணனை ஒரு சந்தர்ப்பத்தில் அப்பகுதியை ஆண்ட மன்னன் தன் நகரை விட்டு வெளியேற்றுகிறான். மாணவன் குருவிடம் சொல்லிவிட்டுப் புறப்படுகிறான். குருவான திருமழிசையாழ்வார் தான் வணங்கும் பெருமாளைப் பார்த்து

கணிகண்ணன் போகின்றான் காமரும்பூங்கச்சி
மணிவண்ணா நீகிடக்க வேண்டாம் – துணிவுடைய
செந்நாப் புலவன் யான் செல்கின்றேன் நீயும் உந்தன்
பைந்நாகப் பாய்சுருட்டிக் கொள்

என்று பாடினார். தமிழ் முனிவரான திருமழிசையாழ்வாரின் தமிழ்ப்பாட்டுக்குக் கட்டுப்பட்டு உடனே பாயைச் சுருட்டிக்கொண்டு கிளம்பினார் பெருமாள். என்னே தமிழின் பெருமை ? என்னே நாரணரின் தமிழ்ப்பற்று ? பைந்தமிழ்ப் பின்சென்ற பச்சைப் பசுங்கொண்டல் அவர்!

இப்படி கடவுளர்கள் கூட தமிழின்பால் பற்றுக்கொண்டு இருந்ததை பல்வேறு திருக்கோயில் வரலாறுகள் சொல்கின்றன.

ஆனைமுகஅண்ணல் தில்லைப் பொன்மன்றில் மறைந்திருந்த தேவாரச் சுவடிகளை வெளிவர அருள்பாலிக்கின்றார்.

தமிழ்ப் பாட்டுக்காக குமரகுருபரருக்கு முத்துமாலை பரிசளிக்கின்றாள் மதுரை மீனாட்சி.

செந்தமிழால் வைதாரையும் வாழவைக்கும் தமிழ்முருகனான ஆறுமுகன் அருணகிரியார் வாக்கிலிருந்து தித்திக்கும் திருப்புகழைத் தருகிறான்.

கடவுளரையும் மகிழச்செய்யும் நம் கற்பகத் தமிழைக் காலமெல்லாம் காத்து... காப்பாற்றித் தந்தது நம் திருக்கோயில்கள் அல்லவா ? இத்தகு வித்தகத் திருக்கோயில்களுக்கு நாம் செய்ய வேண்டிய நன்றி எது ?

'திருக்கோயில்களின் புனிதத்தைக் காப்பது'

'திருக்கோயில்களைத் தூய்மையாய் வைத்திருப்பது'

'திருக்கோயில்களை முறையாய்க் காப்பது'

ஆகியவைதாமே!

மருது சகோதரர்கள்... சிவகங்கைச் சீமையை ஆண்ட மன்னர்கள். இவர்கள் ஊமைத்துரைக்கு (வீரபாண்டிய கட்டபொம்மனின் தம்பிக்கு) அடைக்கலம் கொடுத்த காரணத்தால் ஆங்கிலேயருக்கு எதிரிகளாயினர்; போர் மூண்டது; நாடிழந்த மருது சகோதரர்கள் காட்டில் ஒளிந்தனர்; எத்துணை முயற்சி செய்தும் ஆங்கிலேயர்களால் இவர்களைப் பிடிக்க முடியவில்லை. மருது சகோதரர்கள் மீது கொண்ட மாறா அன்பினால் மக்கள் யாரும் அவர்களை ஆங்கிலேயருக்குக் காட்டிக் கொடுக்கவில்லை.

கடைசியில் ஆங்கிலேயர்கள் ஒரு திட்டம் தீட்டினர், மருது சகோதரர்கள் கட்டிய அவர்களது கோயிலை... காளையார் கோயிலை வெடிவைத்து தகர்ப்பதாக முரசறைந்தனர். மருதுசகோதரர்கள் சரணடையாவிட்டால் அக்கோயிலைத் தகர்ப்போம் என்று முரசறைந்தார்கள். மருது சகோதரர்கள் பார்த்தார்கள்; தங்களின் உயிர்களைக் காட்டிலும் தாம் கட்டி... வணங்கிய காளையார் கோயிலே தம் உயிரினும் பெரிது எனத் தீர்மானித்து ஆங்கிலேயரிடம் சரணடைந்து தம் இன்னுயிரை இழந்தார்கள். என்னே அவர்களின் இறைபக்தி? திருக்கோயிலைக் காக்கத் தம் இன்னுயிரை ஈந்த அப்பெருமக்களை இன்றும் நாம் நினைத்துப் பார்க்கின்றோம் அல்லவா ?

சுகங்களை சுபமாக வழங்கும் சொர்ணாம்பிகை உடனாய சுகவனேசுவரர் திருக்கோயில், கேட்ட வரங்களை அருளும் கோட்டை

சுந்தரராசப் பெருமாள் திருக்கோயில், எட்டுப்பேட்டையைக் கட்டியாளும் கோட்டை பெரிய மாரியம்மன் திருக்கோயில் என,

இப்படி பற்பல திருக்கோயில்களால் புகழ்பெற்றுத் திகழ்கின்ற மாவட்டம் சேலம் மாவட்டம்.

சேலத்திற்கு அருகில் உள்ள இளம்பிள்ளை என்னும் ஊர். இதற்குப் பக்கத்தில் இருப்பது கஞ்சமலை சித்தர் திருக்கோயில், இத்திருக்கோயிலுக்கு ஒரு காலத்தில் இருவர் வந்தனர். ஒருவர் முதியவர், மற்றொருவரும் முதியவரே. ஒருவர் குரு, மற்றொருவர் சீடர். மலைமேல் சென்றனர். அங்கேயே பல நாள் இருந்தனர். ஒருநாள் குரு காட்டுக்குள் சென்றார்; சீடர் தாம் தங்குமிடத்தில் சோறாக்கினார். சோற்றைத் துழாவ அடுப்பில் இருந்த சுள்ளியை எடுத்து துழாவினார். சோறு கருப்பானது, அச்சோற்றை குருவானவர் உண்ணமாட்டார் என்று நினைத்து அச்சோற்றை தான் உண்டார். உடனே முதியவராய் இருந்த அவர் இளையவர் ஆனார், காட்டுக்குப் போன குரு வந்தார், சீடர் இளையவராய் இருந்ததைக் கண்டார், சோற்றைத் துழாவிய சுள்ளி தாம் தேடிய இளமையாக்கும் மூலிகை என அறிந்து சீடரை அவ்வுணவை கக்கச் செய்து அதைத் தானும் உண்டார், அவரும் இளமையுடையவரானார். (இருவரும் இளம்பிள்ளை ஆனவூர் இளம்பிள்ளை) இத்தகு சிறப்பு வாய்ந்த மலை கஞ்சமலை. இங்கு எழுந்து அருள்பாலிப்பவர் காளாங்கிச் சித்தர் என்னும் அருமுனிவர் ஆவார். சேலம் சித்தர்களின் சீலம் நிறைந்த ஊர் என்பதற்கு இது ஒரு சிறந்த சான்று ஆகும்.

மேலும் இம்மாவட்டம் பஞ்சபூத திருக்கோயில்கள் உள்ள மாவட்டமாகவும் உள்ளது என்பது மற்றொரு சிறப்பான செய்தியாகும்.

பஞ்ச பூதங்கள் என்பது நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகியன ஆகும். இந்த ஐந்து பூதங்களின் சிறப்பு பெற்ற கோயில்களும் சேலம் மாவட்டத்தில் உள்ளன என்பது நினைத்துப் பார்க்க வேண்டிய ஒன்று.

ஆத்தூர்	–	காயநிர்மலேஸ்வரர் கோயில் (அக்னி)
ஆறகழூர்	–	காமநாதீஸ்வரர் கோயில் (வாயு)
ஏத்தாப்பூர்	–	சாம்பமூர்த்தீஸ்வரர் கோயில் (நீர்)
பேளூர்	–	தான்தோன்றீஸ்வரர் (நிலம்)
கூகையூர்	–	சொர்ணபுரீஸ்வரர் (ஆகாயம்)

இத்திருத்தலங்கள் ஐந்திலே நான்கு தலங்கள் சேலம் மாவட்டத்தில் உள்ளன. கூகையூர் தலம் விழுப்புரம் மாவட்டத்தில் உள்ளது.

ஆகவே சேலம் மாவட்ட திருக்கோயில்கள் தொடர்பான விவரங்கள் அடங்கிய இந்த திருக்கோயில் வழிகாட்டி பக்தர்கள் அனைவருக்கும் மிகவும் பயன்படும் என்பது எனது நம்பிக்கை.

நமது திருக்கோயில்களின் சிறப்புகளை பக்தர்கள் அறிந்து பயன்படுத்தும் வகையில் "திருக்கோயில்கள் வழிக்காட்டி" ஒன்றை வெளியிட வேண்டும் என்று ஆணையிட்டு வழங்கிய **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுக்கும்,** வாழ்த்துரை வழங்கிய அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு **பூ.செந்தூர்பாண்டியன்** அவர்களுக்கும், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச்செயலாளர் முனைவர் **ரா.கண்ணன் இ.ஆ.ப.,** அவர்களுக்கும் மற்றும் உரிய ஆலோசனைகள் வழங்கி ஊக்கப்படுத்திய ஆணையர் திருமிகு. **ப.தனபால், எம்.ஏ.,பி.எல்.,** அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை இத்தருணத்தில் தெரிவித்துக் கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

மேலும் இக்கையேட்டினை வெளியிட உதவிகள் புரிந்த சேலம் உதவி ஆணையர் திரு. க. ராமு அவர்களுக்கும், ஒருக்காமலை அருள்மிகு வரதராஜபெருமாள் திருக்கோயில் செயல் அலுவலர் ம.ஆறுமுகம் மற்றும் இவ்வழிகாட்டி கையேட்டிற்கு திருக்கோயில்கள் பற்றிய செய்திகள் வழங்கிய அனைத்து திருக்கோயில் செயல் அலுவலர்கள், சரக ஆய்வர்கள் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றி. இப்புத்தகத்தின் சிறப்பான உருவாக்கத்திற்காக உறுதுணையாக இருந்த ஸ்ரீ கௌரி ஆப்செட் பிரிண்டர்ஸ் உரிமையாளர் அரிமா K.S. சண்முகம் MJF அவர்களுக்கும், கணினி கோர்வையாளர் திருமதி. R. விமலா சீனிவாசன் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோ.செ. மங்கை

(கோ.செ. மங்கையர்க்கரசி)
இணை ஆணையர்
இந்து சமய அறநிலையத்துறை
சேலம்.

பொருளடக்கம்

		பக்கம்
1	அருள்மிகு சுகவனேசுவரர் சுவாமி திருக்கோயில், சேலம் நகர்	1
2	அருள்மிகு இராஜகணபதி திருக்கோயில், சேலம் நகர்	12
3	அருள்மிகு காசிவிஸ்வநாதர் சுவாமி திருக்கோயில், சேலம் நகர்	13
4	அருள்மிகு கோட்டை மாரியம்மன் திருக்கோயில், கோட்டை, சேலம் நகர்	1
	பஞ்சபூதத்தலங்கள்	
5	அருள்மிகு தான்தோன்றீஸ்வரர் மற்றும் ஸ்ரீ அஷ்டபுஜ பாலமதன வேணுகோபாலசுவாமி திருக்கோயில், பேளூர், வாழப்பாடி	15
6	அருள்மிகு சாம்பமூர்த்தீஸ்வரர் மற்றும் கோபாலசுவாமி திருக்கோயில், ஏத்தாப்பூர்	19
7	அருள்மிகு காயநிர்மலேஸ்வரர், பிரசன்ன வெங்கடேச பெருமாள், கைலாசநாதர் திருக்கோயில்கள், ஆத்தூர் நகர்	21
8	அருள்மிகு காமநாதீஸ்வரர் திருக்கோயில், ஆறகழூர், ஆத்தூர்	25
9	அருள்மிகு சொர்ணபுரீஸ்வரர் திருக்கோயில், கூகையூர், விழுப்புரம் மாவட்டம்	28
10	அருள்மிகு மீனாட்சி சொக்கநாதர், ஞானதண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், மேட்டூர் அணை	30
11	அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில், தாரமங்கலம், ஓமலூர்	33
12	அருள்மிகு அழகிரிநாதசுவாமி திருக்கோயில், கோட்டை, சேலம் நகர்.	42
13	அருள்மிகு மாரியம்மன், காளியம்மன், முனியப்பன் (வ) திருக்கோயில்கள், குகை, சேலம் நகர்	46
14	அருள்மிகு மாரியம்மன், திரௌபதியம்மன் திருக்கோயில், செவ்வாய்ப்பேட்டை, சேலம் நகர்	48

15	அருள்மிகு மாரியம்மன், காளியம்மன் திருக்கோயில், சஞ்சீவிராயன் பேட்டை, சேலம்	51
16	அருள்மிகு வெண்ணங்கொடி முனியப்ப சுவாமி திருக்கோயில், ஜாகீர் அம்மாபாளையம், சேலம்	53
17	அருள்மிகு சுப்ரமணியசுவாமி திருக்கோயில், செவ்வாய்ப்பேட்டை, சேலம்	55
18	அருள்மிகு வெங்கடேசப்பெருமாள் திருக்கோயில், சின்னதிருப்பதி, சேலம்	57
19	அருள்மிகு எல்லைப்பிடாரியம்மன் மற்றும் சுப்ரமணியசுவாமி திருக்கோயில், குமாரசாமிப்பட்டி, சேலம்	59
20	அருள்மிகு கோவிந்தராஜப் பெருமாள் திருக்கோயில், உடையாப்பட்டி, சேலம்	61
21	அருள்மிகு சோமேஸ்வரர் சுவாமி திருக்கோயில், சங்ககிரி	63
22	அருள்மிகு வரதராஜப்பெருமாள் திருக்கோயில், சங்ககிரி	65
23	அருள்மிகு வரதராஜப்பெருமாள் திருக்கோயில், ஒருக்காமலை, சங்ககிரி	67
24	அருள்மிகு சென்ன கேசவப்பெருமாள் திருக்கோயில், சங்ககிரி	69
25	அருள்மிகு செல்லாண்டியம்மன், மாரியம்மன் திருக்கோயில், வைகுந்தம், சங்ககிரி	71
26	அருள்மிகு கோதண்டராமசுவாமி திருக்கோயில், அயோத்தியாப்பட்டணம், சேலம்	73
27	அருள்மிகு சித்தேஸ்வரசுவாமி திருக்கோயில், கஞ்சமலை	76
28	அருள்மிகு பத்ரகாளியம்மன் திருக்கோயில், மேச்சேரி	79
29	அருள்மிகு காசிவிஸ்வநாதர் திருக்கோயில், வாழப்பாடி	82
30	அருள்மிகு லட்சுமி நரசிம்மசுவாமி திருக்கோயில், நங்கவள்ளி, மேட்டூர்	84

31	அருள்மிகு பாலசுப்ரமணியசுவாமி திருக்கோயில், வடசென்னிமலை, ஆத்தூர்	87
32	அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், இளம்பிள்ளை	89
33	அருள்மிகு தங்கமலை பாலசுப்ரமணியசுவாமி திருக்கோயில், தங்கமாபுரிபட்டிணம், மேட்டூர்	91
34	அருள்மிகு சேர்வராயன் சுவாமி திருக்கோயில், மஞ்சக்குட்டை, ஏற்காடு	93
35	அருள்மிகு அங்காளம்மன் திருக்கோயில், கல்வடங்கம்	95
36	அருள்மிகு குமரகுரு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், அம்மாப்பேட்டை, சேலம்	97
37	அருள்மிகு பிரசன்ன நஞ்சுண்டேஸ்வரர் திருக்கோயில், எடப்பாடி நகர்	99
38	அருள்மிகு சிதம்பரேஸ்வரர் சமேத சிவகாமசுந்தரியம்மன் திருக்கோயில், தேவியாக்குறிச்சி, ஆத்தூர்	101
39	அருள்மிகு குமரன் திருக்கோயில், குமரன் மலை, ராயர்பாளையம், கெங்கவல்லி	103
40	அருள்மிகு மாரியம்மன், காளியம்மன் வகையறா திருக்கோயில், சஞ்சீவராயன்பேட்டை, சேலம்	108
41	அருள்மிகு கரபுரநாதசுவாமி திருக்கோயில், உத்தமசோழபுரம்	113
42	அருள்மிகு ஞானதண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், நெத்திமேடு, சேலம்	115
43	அருள்மிகு அம்பலவாணர் சுவாமி திருக்கோயில், குகை, சேலம்	120
44	அருள்மிகு காளியம்மன் திருக்கோயில், அம்மாப்பேட்டை, சேலம்	124
45	அருள்மிகு சின்ன மாரியம்மன் திருக்கோயில், சின்னக்கடைவீதி, சேலம்	127
46	அருள்மிகு வெள்ளைப்பிள்ளையார் திருக்கோயில், ஆத்தூர் நகர்	129

47	அருள்மிகு பலப்பட்டரை மாரியம்மன் திருக்கோயில், அம்மாப்பேட்டை, சேலம்	131
48	அருள்மிகு கதலி லட்சுமி நரசிம்மப்பெருமாள் திருக்கோயில், தம்மம்பட்டி	133
49	அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், செவ்வாய்ப்பேட்டை, சேலம்	135
50	அருள்மிகு காவேட்டி அரங்கநாதர் திருக்கோயில், கோனாகாபாடி, கே.ஆர்.தோப்பூர்	137
51	அருள்மிகு கோட்டை மாரியம்மன் திருக்கோயில், ஓமலூர்	139
52	அருள்மிகு கைலாசநாதர் வரதராஜப் பெருமாள் மற்றும் முக்கிய பிராணசாமி திருக்கோயில்கள், பூலாம்பட்டி	142
53	அருள்மிகு கண்ணனூர் மாரியம்மன் திருக்கோயில், தாரமங்கலம், ஓமலூர்	144
54	அருள்மிகு மாரியம்மன், பிடாரியம்மன், விநாயகர் திருக்கோயில், அஸ்தம்பட்டி, சேலம்	147
55	அருள்மிகு குமரகிரி தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், அம்மாப்பேட்டை, சேலம்	149
56	அருள்மிகு கொப்புகொண்ட பெருமாள் திருக்கோயில், பெத்தநாயக்கன்பாளையம்	152
57	அருள்மிகு பிரசன்ன வெங்கடரமணசுவாமி திருக்கோயில், சின்னதிருப்பதி, காருவள்ளி	155
58	அருள்மிகு இலட்சுமிநாராயண சுவாமி திருக்கோயில், 2வது அக்ரஹாரம், சேலம் நகர்	163
	1008 சிவாலய கைலாயம்	164
	மனம் கவரும் கற்சிற்பங்கள்	167
	அன்னதானத்திட்டம் நடைபெறும் திருக்கோயில்கள்	184

அருள்மிகு சுகவனேசுவரர் சுவாமி திருக்கோயில்

சேலம் நகர்.

இறைவன்	:	அருள்மிகு சுகவனேசுவரர் சுவாமி
இறைவி	:	அருள்மிகு ஸ்வர்ணாம்பிகையம்மன்
தீர்த்தம்	:	அமண்டுக தீர்த்தம்
தல விருட்சம்	:	பாதிரி
ஆகமம்	:	காரண ஆகமம்
இசைக்கருவி	:	தவண்டை, ஜேகண்டை

புராணச்சிறப்பு

நான்கு யுகங்களிலும் பிரசித்தி பெற்றது. கிருதயுகத்தில் நான்கு மறைகள் அரசமர வடிவில் பூஜித்து, தேவர்களின் பாபங்களைப் போக்கியதால் ''பாபநாசம்'' என்றும்; துவாபரயுகத்தில் ஆதிசேஷன் வழிபட்டதால் ''நாகீச்சுரம்'' என்றும்; திரேதாயுகத்தில் காமதேனு பசு வழிபட்டதால் ''பட்டீசுரம்'' என்றும் கலியுகத்தில் கிளி உருவம்

கொண்ட சுகபிரம்ம மகரிஷி வழிபட்டதால் ''சுகவனம்'' என்றும் ; சேர, சோழ, பாண்டிய மன்னர்களால் ஆளப்பட்டதால் 'மும்முடித் தலைவாயில்' என்றும் சிறப்பு பெயர்கள் பெற்றது.

தலச்சிறப்பு

672 பாடல்களைக் கொண்ட 'பாபநாசத் தலபுராணம்' சுகவனேசுவரர் திருத்தலத்தின் சிறப்புக்களைக் கூறுவதாகும்.

சுகவனேசுவரர், கரபுரநாதர், வீரட்டேசுரர், பீமேசுவரர் மற்றும் திருவேலிநாதர் எனும் ஐந்து அட்சரங்கள் பெற்ற திருமணிமுத்தாறு நதிக்கரையில் சுயம்புலிங்கமாக எழுந்தருளியிருப்பதால் 'பஞ்சாட்சர நாதம்' எனும் சிறப்பைப் பெற்றுள்ளது. ஒரே நாளில் இந்த ஐந்து தலங்களையும் வழிபடும் மரபு உள்ளது. அவற்றில் சுகவனேசுவரரே மையமாகக் கருதப்படுகிறார்.

கிளிகள் கூட்டமாக !

பிரம்மதேவன் ஒருமுறை படைப்பின் ரகசியத்தை சுகமுனிவரிடம் கூற, அவர் அதனை சரஸ்வதியிடம் எடுத்துரைத்தார். சினங்கொண்ட நான்முகன் சுகமுனிவரைக் கிளியாக பிறந்திட சாபம் கொடுத்தார். வருந்திய சுகமுனிவர் பூவுலகம் வந்து, கிளிகள் கூட்டமாக வாழ்ந்திருந்த சுகவனத்தை அடைந்தார். அங்கே, புற்றின் அடியில் வெளிப்பட்ட சிவலிங்கத் திருமேனியை, நெல் மணிகளால் பிற கிளிகளோடு பூசித்து வந்தார். அப்போது வேடன் ஒருவன், கிளிகளைத் தாக்கிட, கிளிகள் யாவும் அங்கிருந்த ஒரு புற்றில் ஒளிந்து கொண்டன. வேடன் மிகுந்த கோபம் கொண்டு புற்றை மண்வெட்டியால் வெட்டினான். அப்போது புற்றுக்குள்ளிருந்த சிவலிங்கத் திருமேனியை காத்திட கிளி வடிவில் இருந்த சுகமுனிவர், தன் இறக்கைகளால் இறைவனை மறைத்து

காத்திட முயற்சிக்கையில் வேடனால் வெட்டப்பட்டார். அப்போது சிவலிங்கத்திலிருந்து குருதி கொப்பளிக்க, அதனைக் கண்ட வேடன் மயக்கமுற்றான். அப்போது ஈசன், அங்கே தோன்றி, சுகமுனிவரின் சாபத்தையும் விலக்கியதோடு, வேடனுக்கும் திருவருள் செய்தார். அதுமுதல், இங்கே எழுந்தருளியுள்ள ஈசன், "சுகவன ஈசுவரர்" எனும் சிறப்புப் பெயர் கொண்டார்.

மேலும் கிளிவனமுடையார், சுகவனேசுவரர், கிளிவனநாதர் என்றும் பல பெயர்களால் அழைக்கப்படுகிறார் பெருமான்.

மூலவரின் திருமேனியில், வேடனால் வெட்டுண்ட காயம் உள்ளதை திருமஞ்சனத்தின் போது தரிசனம் செய்யலாம்.

தேவர்கள் அரசமர வடிவில் வழிபட்டதும், ஆதிசேஷனுக்கும், சேரமான் பெருமானுக்கும் எம்பெருமான் தாண்டவ தரிசனம் அளித்ததும், தமிழ் மூதாட்டி அவ்வையார், வளர்ப்பு மகளான 'பிறவி'யின் திருமணத்தை, மூவேந்தர்கள் முன்னே ஓர் அற்புதத்தை நிகழச் செய்தபின் நடத்தி வைத்ததும், பாபநாசத்தல புராணத்தில் இடம் பெற்றுள்ளன.

3 நிலை இராஜகோபுரம், ஒரு பிரகாரத்துடன் அமைந்த திருக்கோயில் வெளிச்சுற்றில் அறுபத்து மூவர், சப்தமாதர், நால்வர், இரட்டை விநாயகர், ஆலமரச்செல்வர் சந்நிதிகள் உள்ளன. பஞ்சபூதலிங்கங்கள், கங்காளர், காசிவிசுவநாதர், ஜேஷ்டாதேவி ஆகிய சுற்றுபிரகார சந்நிதிகள், அறுபடை வீடு சிற்பங்கள் கொண்ட முருகப்பெருமான் சந்நிதி, பிரம்மா, சண்டிகேசுவரர், துர்க்கை சந்நிதிகளும் உள்ளன.

'சுகவனேசுவரர்'

நான்கு யுகங்களாக திருத்தலத்திற்கு பெருமை சேர்க்கும் சுயம்புலிங்கமாக சுகவனேசுவரர் எழுந்தருளியுள்ளார். நீண்டு உயர்ந்த பாணம் மூலவர் திருமேனி ஒரு பக்கம் சாயந்திருப்பதோடு, வெண்மையான வெட்டுத்தழும்பும் காணப்படுகிறது. கிளிமுகம் கொண்ட சுகமுனிவரும் சிலைவடிவில்(தனிச்சந்நிதி) காட்சி தருகிறார்.

'சொர்ணாம்பிகை'

மரகதவல்லி, பச்சை நாயகி என்றெல்லாம் அழைக்கப்படும்

அன்னை 'சொர்ணாம்பிகை' எனும் திருநாமத்துடன் நின்ற கோலத்தில் எழுந்தருளியுள்ளார். சிறப்பு நாட்களில் அம்மனுக்கு 'தங்கக் கவசம்' சார்த்தப்படுகிறது.

தனிச்சிறப்புகள்

இத்திருக்கோயிலுக்குள் அமைந்துள்ள 'அமண்டூக தீர்த்தம்', தவளைகள் வாழாத திருக்குளமாகத் திகழ்கிறது. இதுதவிர, பாபநாச தீர்த்தம், மனுசரணதீர்த்தம், மானத தீர்த்தத்தோடு மணிமுத்தாறு புனித தீர்த்தங்களாக அமைந்துள்ளன. தலமரம்– பாதிரி நந்தவனத்தில் உள்ளது.

இத்திருக்கோயிலின் தல விநாயகர் 'விகடச்சக்கர விநாயகர்' எனும் திருநாமங்கொண்டுள்ளார். வீரபத்திரர் தக்கனின் யாகத்தை அழித்தபோது, அவரை எதிர்கொண்ட திருமால் தனது சக்கரத்தை எறிய, அவர் அணிந்திருந்த கபால மாலையில் ஒரு தலை, அந்த சக்கரத்தைக் கவ்விக்கொண்டது. அதனைக் கண்ட விநாயகர் கூத்தாடி நடனமாடியபோது, அதுகண்டு சிரம் நகைக்க, சக்கரமும் அதன் வாயிலிருந்து விழுந்தது. அதனை எடுத்துக்கொண்டு களிப்பில் ஆடியவரே விகடச்சக்கர விநாயகர் ஆவார்.

நவகிரகங்கள் தனிசந்நிதியாக அமைந்ததோடு செவ்வாய், கேது இடம் மாறியுள்ளன.

இத்தலத்தில் உள்ள முருகப்பெருமான் மீது அருணகிரிநாதர் 'திருப்புகழ்' பாடியுள்ளார்.

கல்வெட்டுக்கள்

ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பதினைந்து கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. கோப்பரகேசரி என்ற பட்டம் கொண்ட சோழமன்னன் காலத்தில் வெட்டப்பட்டது கல்வெட்டுதான்.

பிற்கால சோழர்கள் விசயாலயன் முதற்கொண்டு ஆட்சி புரிந்த மன்னர்கள் தாங்கள் முடிசூட்டிக்கொள்ளும் பொழுது பரகேசரி என்றும் அடுத்து வருபவர் இராசகேசரி என்றும் பட்டம் தாங்கினர். அவ்வாறு வந்த சோழ மன்னர்களில் பரகேசரியும், இராஜகேசரியும் இங்கு ஆட்சி புரிந்துள்ளதும் இங்குள்ள பரகேசரியின் மூன்று கல்வெட்டுகளும் இராஜகேசரியின் இரண்டு கல்வெட்டுகளும் தெரிவிப்பன ஆகும். பரகேசரியின் ஐந்தாவது ஆட்சியாண்டில் வீரச்சோழ ஆருடையான் என்பவனின் துணைவியார் மலைமான் பெருந்தேவியார் கவிரநாதிசங்கரி என்பவர் கிளிவனமுடையார் கோயிலுக்கு நித்திய விளக்கெரிக்க ஐந்து கழஞ்சு பொன் சேலத்தில் உள்ள ஊர்ச்சபையாரிடம் கொடுத்து இதனை நடத்தி வருமாறு கூறினார்.

இக்கல்வெட்டில் சேலத்தின் பெயர் அப்பொழுது "ராசகிரிய சதுர்வேதி மங்களம்" என்பதும் இங்கு அமைந்த கோயில் கிளிவனமுடைய கோயில் என்பதும் காணப்படுகிறது. 4. இராஜகேசரி கல்வெட்டில் கொடும்பாளூர் மணிக்கிராமத்து வணிகன் மஞ்சள் மணியத்தாண்டன் மாசிநாளில் அளித்த பொன் பற்றி குறிப்பிடப்படுகிறது. மணிக்கிராமம் என்பது வணிகக்குழு அமைந்த இடத்தை குறிப்பதாகும். அடுத்து நுழைவு வாயிலில் காணப்படும் கல்வெட்டு இராஜகேசரியின் ஐந்தாவது ஆட்சி ஆண்டில் வெட்டப்பட்டது. கிளிவண்ணம் உடைய பெருமானின் திருவிழாவிற்கும், மாசி மகத்திற்கும் பிராமணர்களுக்கு உணவளிக்கவும் செல்வனடிகள் என்பவரால் கொடுத்த பொன் நாற்பது கழஞ்சு என்பதாகும். பரகேசரி முதல் இராஜகேசரி வரை சுமார் 200 ஆண்டுகளாக கிளிவண்ணமுடைய பெருமான் என்றே அழைக்கப்பட்டதும், அன்னதானம் வழங்கியமையும் குறிப்பிடத்தக்க செய்திகளாகும்.

திருவிழாக்கள்

- வைகாசிமாதம் விசாகப் பெருந்திருவிழா 10 நாட்கள் திருத்தேரோட்டத்துடன் நடைபெறும்.
- ஆடிப்பூரம் அம்மனுக்கு சிறப்பு வழிபாடும் உள்சுற்று புறப்பாடும் நடைபெறும்.
- புரட்டாசியில் 10 நாட்கள் நவராத்திரி விழா நடைபெறும். தினமும் அம்மன் கொலுவில் திருக்காட்சியளிப்பார்.
- ஐப்பசியில் 6 நாட்கள் கந்தர்சஷ்டி திருவிழா, துலாஸ்நானம், கடைமுகம்
- கார்த்திகை சோமவாரம் 108 சங்காபிஷேகம்
- கடை ஞாயிறு சோமவாரம் – 1008 சங்காபிஷேகம்
- கார்த்திகை தீபத்தன்று இரண்டு தீபஸ்தம்பங்களிலும் தீபம் ஏற்றப்படும். சுவாமி புறப்பாடு நடைபெறும்.
- மார்கழியில் 10 நாட்கள் திருவாதிரை உற்சவம் விமரிசையாக நடைபெறும். 9ஆம் நாளில் திருக்கல்யாண வைபோகமும், அன்று இரவு துவங்கி 10ஆம் நாள் காலை வரையில் ஸ்ரீ நடராஜருக்கு தொடர்ச்சியான அபிஷேகமும், பின்னர் திருக்காட்சி விழாவும் நடைபெறுகிறது.
- தைப்பொங்கல் அன்று நந்தி தேவருக்கு சிறப்பு அபிஷேகம்
- மாசிமகம், பங்குனி உத்திரம் ஆகிய நாட்களில் சுவாமி ரிஷப வாகன புறப்பாடு

நித்தியபூஜை

பூஜா காலங்கள்	நடைபெறும் நேரம்
உஷா காலம்	காலை 6.00 மணி
காலசந்தி	காலை 9.00 மணி
உச்சிகாலம்	மதியம் 12.00 மணி
சாயரட்சை	மாலை 5.00 மணி
அர்த்தஜாமம்	இரவு 8.30 மணி

நடை திறந்திருக்கும் நேரம்

காலை 6.00 மணி – பகல் 12.00 மணி

மாலை 3.30 மணி – இரவு 9.00 மணி

வெள்ளிக்கிழமை மட்டும் பகல் 12.30 மணிவரை நடை திறந்திருக்கும்.

தங்கரதம்

பக்தர்கள் தங்கள் வேண்டுதலை நிறைவேற்றும் பொருட்டு வழிபாட்டுக் கட்டணம் ரூ. 1500/– செலுத்தி தங்கரதம் இழுத்து வழிபட்டு வருகிறார்கள்.

அன்னதானம்

இத்திருக்கோயிலில் மாண்புமிகு தமிழக முதல்வரின் அன்னதானத் திட்டம் மூலம் தினமும் 75 நபர்களுக்கு கூட்டு அல்லது பொரியல், சாம்பார், ரசம், மோர், ஊறுகாயுடன் அன்னதானம் வழங்கப்படுகிறது.

அமைவிடம்

சேலம் மாநகரின் மையப்பகுதியில் பழைய பேருந்து நிலையத்திலிருந்தும், நகர இரயில் நிலையத்திலிருந்தும் 1/2 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது.

சிற்றுயிர்கள் சிவனை வழிபட்ட திருத்தலங்கள்

- கிளி – "சுகவனம்" – சேலம் சுகவனேஸ்வரர் திருக்கோயில்
- நண்டு – "நாட்டாங்கோயில்" – தேவன்குடி திருக்கோயில்
- புலி – திருப்புலிவனம் – வியாக்ரபுரீஸ்வரர் திருக்கோயில்
- எறும்புகள் – திருவெறும்பியூர் – எறும்பீஸ்வரர் ஆலயம்
- ஈ – திரு ஈங்கோய் மலை
- சிட்டுக்குருவி – "சிட்டிலிங்கேஸ்வரர்" – வடகுரங்காடுதுறை தலமாகும்.
- நாகம் – குடந்தை – அருள்மிகு நாகேசுவரசுவாமி திருத்தலம்.
- எலி – திருமறைக்காடு திருத்தலம்.
- ஆமை – காஞ்சி – அருள்மிகு கச்சபேஸ்வரர் ஆலயம்.
- சிலந்தி – திருவானைக்காவல் திருத்தலம்.
- வண்டு – திருவெண்டுறை அருள்மிகு வெண்டுறைநாதர் திருத்தலம்.
- குரங்கு அணில் காகம் – "குரங்கணில் முட்டம்" திருத்தலம்.

அருள்மிகு இராஜகணபதி திருக்கோயில்

சேலம் நகர்.

சேலம் மாநகரின் மையப்பகுதியில் அமைந்துள்ள புகழ்மிக்க திருக்கோயில்.

இராஜகணபதி திருக்கோயில் காலை 6.00 மணி முதல் இரவு 10.00 மணிவரை நடை சாத்தப்படாமல் திறந்திருக்கும். இடைவிடாது அபிஷேக ஆராதனையும், சிறப்பு வழிபாடும், மக்கள் பெருந்திரளாக வந்து வழிபடும் கோயிலாக அமைந்துள்ளது.

சங்கடஹர சதுர்த்தியன்று சிறப்பு வழிபாடும், ஆவணியில் 10 நாட்கள் சதுர்த்தி திருவிழாவும் கொண்டாடப்படுகின்றன.

அருள்மிகு காசிவிஸ்வநாதர் சுவாமி திருக்கோயில்

சேலம் நகர்.

சேலம் நகரில் இரண்டாவது அக்ரஹார கோடியில் காசி விஸ்வநாதர் திருக்கோயில் அமைந்துள்ளது. தினசரி ஆறு காலபூஜை நடைபெறுகிறது. மாதந்தோறும் கிருத்திகை, சஷ்டி, பிரதோசம், பௌர்ணமி, அமாவாசை நாட்களில் சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடைபெறுகின்றன. அமாவாசையன்று பைரவருக்கு சிறப்பு வழிபாடு நடைபெறுவது தனிச்சிறப்பாகும். ஐப்பசி மாத பௌர்ணமியில் நிறை மணிவிழா மூன்று நாட்கள் சிறப்பாக நடைபெறும். இவ்விழாவில் அன்னாபிஷேகம், காய்கறி அலங்காரம் செய்து வழிபாடு செய்வது மிகவும் சிறப்பானதாகும். பங்குனியில் வசந்த நவராத்திரியும், வைகாசியில் வசந்த மஹோத்ஸவமும் நடைபெறுகிறது.

அன்னதானம்

இத்திருக்கோயிலில் மாண்புமிகு தமிழக முதல்வரின் திருக்கோயில் அன்னதானத்திட்டம் மூலம் தினமும் 50 நபர்களுக்கு அன்னதானம் வழங்கப்படுகிறது.

தொடர்பு முகவரி

உதவி ஆணையர் / செயல் அலுவலர்

அருள்மிகு சுகவனேசுவரர் சுவாமி திருக்கோயில்

சேலம் நகர் மற்றும் வட்டம், சேலம் மாவட்டம்.

தொலைபேசி எண் : 0427 – 2450954

மின்னஞ்சல் : **sugavaneshwarar@tnhrce.org**

இணையதளம் : **http://sugavaneshwarartemple.tinfo.in**

அருள்மிகு கோட்டைமாரியம்மன் திருக்கோயில்

கோட்டை, சேலம் நகர்.

இறைவி : அருள்மிகு கோட்டைமாரியம்மன்

தலச்சிறப்பு

சேலம் மாநகரில் "எட்டுப்பேட்டைகளையும் கட்டியாளும் கோட்டை மாரியம்மன்" எனும் சிறப்புப்பெயரைப் பெற்றுள்ளது. அம்மாப்பேட்டை, செவ்வாய்ப்பேட்டை, பொன்னம்மாப்பேட்டை, அன்னதானப்பட்டி, சஞ்சீவிராயன்பேட்டை, குகை, கிச்சிப்பாளையம், குமாரசாமிபட்டி ஆகிய எட்டு பேட்டைகளைக் கட்டி ஆளுபவள் இவளே! சேலம் மாநகரில் பன்னிரண்டு மாரியம்மன் கோயில்கள் இருந்தும் அவை அனைத்திற்கும் முதன்மையாக சேலம் அருள்மிகு கோட்டை மாரியம்மனே பெரிய மாரியம்மனாகக் கருதப்படுகிறாள்.

இத்திருக்கோயில் மணிமுத்தாறு நதிக்கரையில் அமைந்துள்ளது. கோட்டைமாரியம்மன் அக்னி திசை நோக்கியபடி சற்றே திரும்பியவண்ணம், வீராசனக் கோலத்தில் அமர்ந்தபடி காட்சிதருகிறாள். தமிழ்நாட்டிலேயே சிறிய கருவறையைக் கொண்ட திருக்கோயிலாக இது அமைந்துள்ளது.

அக்னி சுவாலையிலான கிரீடத்தைத் தலையில் அணிந்தபடி, அந்தக் கிரீடத்தின் மேல் நாகப்படம் குடைபிடித்திட, வலது காலைத் தொங்கவிட்டு, இடது காலை யோகாசனமாக மடித்து அமர்ந்த நிலையில் காட்சி தருகிறாள்.

வலது மேற்கரத்தில் நாகபாசமும், உடுக்கையும் கொண்டு, இடது மேற்கரத்தில் அங்குசமும் அமுத சின்னமும் கொண்டு வலது முன்கரத்தில் சூலமும், இடது முன்கரத்தில் கபாலமும் கொண்டபடி அருள்பாலிக்கிறாள். மற்ற கோயில்களில் அசுரனைக் காலால் மிதித்தபடி காணும் அம்மன் இங்கே தாமரை மலர்மீது பாதத்தை வைத்தபடி, கருணையே வடிவான திருமுகத்துடன் காட்சி தருகிறாள்.

சந்நிதி முன்னே இருபுறமும் துவார சக்திகள் உள்ளனர். ஐந்து நிலை இராஜகோபுரமும், அழகிய மணிமண்டபமும் கொண்ட திருக்கோயிலின் உள்ளே வெளிப்பிரகார மண்டபம், கிளிமண்டபம், வசந்த மண்டபம் ஆகியன உள்ளன.

பூவாக்கு கேட்டல்

சேலம், அருள்மிகு கோட்டைமாரியம்மன் திருக்கோயில், அம்மனின் அருள் கேட்டு பூப்போட்டு கேட்டல்' மிகவும் பிரசித்தமானது. சிவப்பு, வெள்ளை பூக்களைப் பொட்டலங்களாகக் கட்டி அம்மன் திருவடியில் வைத்து வேண்டிய பின்னர், அவற்றில் ஒன்றை எடுத்து, “நினைத்த பூவைப்பெறுவது அம்மன் திருவருள்” என எண்ணிய காரியத்தை முடிக்கின்றாள்.

நேர்த்திக்கடன்

நோய் காணும் மக்கள், அம்மனை வேண்டி புனிதநீரைப் பெற்று தம் உடலில் தெளித்து, நோய் நீங்கப்பெறுவதும், அதற்கு நேர்த்திக்கடனாக பொம்மை உருவாரங்களை தலையில் வைத்தபடி மூன்றுமுறை கோயிலை வலம்வந்து, பலிபீடத்தின் அருகில் வைத்து வணங்குவர்.

கண் நோயினால் பாதிக்கப்பட்டவர்கள், அம்மனை வேண்டிக்கொண்டு 'கண்ணடக்கம்' செய்து நேர்த்திக்கடன் செலுத்துவர். குறை நீங்கப்பெற்றவர் குங்குமம் கலந்த உப்பை பலிபீடத்தின் மீது போட்டு, நீர் ஊற்றி வழிபடுவர். வேண்டுதல் நிறைவேறிய பக்தர்கள் ஆடி உற்சவத்தில் உருளுதண்டம் (அங்கபிரதட்சணம்) போடுவது இத்திருக்கோயில் சிறப்பாகும்.

திருவிழாக்கள்

ஆடி மாதத்தில் 22 நாட்கள் நடைபெறும் 'பூச்சாட்டு விழா' சேலத்தில் உள்ள எட்டுப் பேட்டைகளிலும் மிகச்சிறப்பாக கொண்டாடப்படுகிறது. ஏனைய ஏழு மாரியம்மன் கோயில்களுக்கும், இங்கிருந்தே பூக்கள் எடுத்துச் செல்லப்பட்டு அங்கு பூச்சாட்டுதல் நடைபெறுவதும் குறிப்பிடத்தக்கது ஆகும்.

பூஜை, நடை திறந்திருக்கும் நேரம்
காலை 6.00 மணி – பகல் 2.00 மணி
மாலை 4.00 மணி – இரவு 9.00 மணி
உச்சிகால பூஜை – பகல் 12.30 மணி

தங்கரதம்

பக்தர்கள் தங்கள் வேண்டுதலை நிறைவேற்றும் பொருட்டு வழிபாட்டு கட்டணம் ரூபாய் 1500 செலுத்தி தங்கரதம் இழுத்து வழிபட்டு வருகிறார்கள்.

அன்னதானம்

இத்திருக்கோயிலில் மாண்புமிகு தமிழக முதல்வரின் அன்னதானத் திட்டம் மூலம் தினமும் 150 நபர்களுக்கு சாதம், பொரியல், சாம்பார், ரசம், மோர், ஊறுகாயுடன் அன்னதானம் வழங்கப்படுகிறது.

அமைவிடம்

சேலம் மாநகரின் மையப் பகுதியில் பழைய பேருந்து நிலையத்திற்கு மிக அருகில் அமைந்துள்ளது. சேலம் ரயில் சந்திப்பு நிலையத்திலிருந்து 8.கி.மீ தொலைவிலும், புதிய பேருந்து நிலையத்திலிருந்து 4. கி.மீ தொலைவிலும் இத்திருக்கோயில் அமைந்துள்ளது.

தொடர்பு முகவரி

செயல் அலுவலர்

அருள்மிகு கோட்டை மாரியம்மன் திருக்கோயில்

சேலம் நகர் மற்றும் வட்டம், சேலம் மாவட்டம்–636 001

தொலைபேசி எண் : 0427–2267845

மின்னஞ்சல் : salemkottaimariamman.tinfo.in

இணையதளம் : salemkottaimariamman@gmail.com

சேலம் மாவட்டத்தில் வசிஷ்ட நதிக்கரையில் அமைந்துள்ள பஞ்சபூத தலங்கள்

1.	அருள்மிகு தான்தோன்றீஸ்வரர் திருக்கோயில்	பேளூர்(நிலம்)
2.	அருள்மிகு சாம்பமூர்த்தீஸ்வரர் திருக்கோயில்	ஏத்தாப்பூர்(நீர்)
3.	அருள்மிகு காயநிர்மலேஸ்வரர் திருக்கோயில்	ஆத்தூர்(அக்னி)
4.	அருள்மிகு காமநாதீஸ்வரர் திருக்கோயில்	ஆறகளூர்(வாயு)
5.	அருள்மிகு சொர்ணபுரீஸ்வரர் திருக்கோயில் (விழுப்புரம் மாவட்டம்)	கூகையூர்(ஆகாயம்)

வசிஷ்ட முனிவரால் வசிஷ்ட நதிக்கரையோரம் அமைக்கப்பட்டுள்ள பஞ்சபூத தலங்களையும் ஒரே நாளில் தரிசனம் செய்தால் சகல ஐஸ்வர்யங்களும் கிடைக்கும்.

அருள்மிகு தான்தோன்றீஸ்வரர் மற்றும் ஸ்ரீ அஷ்டபுஜ பாலமதன வேணுகோபால சுவாமி திருக்கோயில்

பேளூர்.

இறைவன்	: அருள்மிகு தாந்தோன்றீஸ்வரர் சுவாமி (சுயம்புமூர்த்தி)
இறைவி	: அருள்மிகு அறம்வளர்த்த நாயகி (எ) தர்மசம்வர்த்தினி
தல விருட்சம்	: வன்னி மரம்
ஆகமம்	: காமிகம்

முதல் தலம் : அருள்மிகு தான்தோன்றீஸ்வரர் திருக்கோயில் பேளூர் (திருவெள்ளூர்) பிருத்வி (மண்) ஸ்தலம் ஆகும்.

காலம் : கி.பி.8ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்டது.

சிறப்புகள் : வசிஷ்டர், அர்ஜுனன் ஆகியோரால் வழிபாடு செய்யப்பட்ட தலம். சித்திரை 3 முதல் 10 தேதி வரை சூரிய ஒளிக்கதிர்கள் மூலவர் மீது ஒளிரும் வகையில் அமைந்துள்ளது.

பிரார்த்தனை : திருமணத்தடைகள் நீங்க இத்திருத்தலத்தில் உள்ள வலம்புரி இடம்புரி கல்யாண விநாயகர்களை வணங்கினால் தடைகள் நீங்கும்.

புராணச்சிறப்பு

வசிஷ்ட மகரிஷி, வசிஷ்ட நதிக்கரையில் வேள்வி செய்ததால் வேள்வியூர் ஆனது. வேள்வியின்போது வடதிசைக்கு காவலனான குபேரனை அழைத்து 'பொன்மாரி' பொழியச் செய்தார் என்கிறது தலவரலாறு. துர்வாசர், இந்திரன், ரோமசர், சனந்தன், சம்புகர், நாரதர் வழிபட்ட தலம்.

அறுபத்து மூன்று நாயன்மார்களில் கணம்புல்லர் அவதரித்த தலம். கணம்புல்லை எரித்து விளக்கேற்றிய அவர், தனது தலைமுடியும் எலும்பும் கரையும் அளவிற்கு தீமூட்டி எரித்து இறைவனுக்கு விளக்கேற்றினார். 653 செய்யுட்களோடு, 'அட்டாவதானம் சொக்கலிங்கம் கவிராயர் எழுதிய தலபுராணம் உள்ளது.

தலச்சிறப்பு

ஈசன் தானே சுயமாக தோன்றியதால் 'தான்தோன்றீசுவரர்' எனும் திருநாமங் கொண்டுள்ளார். ஈஸ்வரர் தர்ம சம்வர்த்தினி என்னும் அறம் வளர்த்த நாயகியுடன் அருள்பாலிக்கிறார். 97 அடி உயர இராஜகோபுரமும், கோயிலின் முன்னே நான்கு கால் மண்டபம், யாழி மற்றும் குதிரை வீரன் சிற்பங்கள் கலை நுணுக்கங்களுடன் பதினாறு கால் மண்டபத்தில் அழகாக செக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

பஞ்சபூத லிங்கங்கள், அறுபத்து மூவர், குபேரலிங்கம், தட்சணாமூர்த்தி, சகஸ்ரலிங்கம், ஆறுமுகசுவாமி, கஜலட்சுமி, ஜேஷ்டாதேவி, துர்க்கை, நவகிரகங்கள், பிச்சாடனர், காலபைரவர் ஆகிய சன்னிதிகளும் உள்பிரகாரத்தில் உள்ளன.

கல்யாணவிநாயகர் சிறப்பு (வலம்புரி, இடம்புரி விநாயகர்)

திருமணத்தடையை நீக்கும் 'கல்யாண விநாயகர்' எழுந்தருளியுள்ள திருத்தலம். வருடத்தில் எண்ணில் அடங்கா திருமணங்கள் நடைபெறும் தலம். இக்கல்யாண விநாயகரிடம் மாலைமாற்றி பிரார்த்தனை செய்து கொண்டால் 90 நாட்களில் திருமணம் தடையின்றி நடைபெறுவதாக ஐதீகம்.

திருநீற்றின் சிறப்பு

வசிஷ்ட முனிவரும், அவரது மனைவி அருந்ததியும் மற்றும் சீடர்களும் பல்லாயிரம் ஆண்டுகள் யாகம் செய்து, தவப்பலனை இத்தலத்திற்கு அளித்தமையால், இது காசிக்கு இணையான புண்ணிய பூமியாக விளங்குகிறது. இந்த யாகமேட்டு சாம்பலே இக்கோவிலில் திருநீறாக வழங்கப்படுகிறது.

சூரிய வழிபாடு

சித்திரை மாதம் 3ம் தேதியிலிருந்து 10ம் தேதி வரை மூலவர் மீது சூரிய ஒளிக்கதிர்கள் ஒளிர்கின்றது.

திருவிழாக்கள்

தமிழ்ப்புத்தாண்டு, சித்திரா பௌர்ணமி, திருவாதிரை, சிவராத்திரி, பங்குனி உத்திரம். வருட உற்சவம் : ஆடி 18 மற்றும் ஆடி அமாவாசை, ஆருத்ரா தரிசனம், நவராத்திரி விழா.

பூஜை, நடை திறந்திருக்கும் நேரம்
காலை 6.00 மணி – பகல் 1.00 மணி
மாலை 4.30 மணி – இரவு 8.00 மணி
மூன்றுகால பூஜை நடைபெறுகிறது.
காலசந்தி – காலை 6.30 மணி
உச்சிகாலம் – பகல் 12.00 மணி
சாயரட்சை – இரவு 7.00 மணி

அன்னதானம்

இத்திருக்கோயிலில் மாண்புமிகு தமிழக முதல்வரின் அன்னதானத்திட்டம் மூலம் தினமும் 30 நபர்களுக்கு சாதம், பொரியல், சாம்பார், ரசம், மோர், ஊறுகாயுடன் அன்னதானம் வழங்கப்படுகிறது.

உபகோயில்

எட்டு கரங்களுடன் ருக்மணி, சத்யபாமாவுடன் நின்ற கோலத்தில் அஷ்டபுஜ பாலமதன வேணுகோபால சுவாமி திருக்கோயில் உள்ளது.

அமைவிடம்

சேலம் மாநகருக்கு கிழக்கில் 30 கி.மீ. தொலைவில் வாழப்பாடி அமைந்துள்ளது. வாழப்பாடிக்கு வடக்கில் 6 கி.மீ. தொலைவில் உள்ள பேளூரில் இத்திருக்கோயில் அமைந்துள்ளது. வாழப்பாடி ரயில் நிலையத்திலிருந்து 6 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

சேலம் மாவட்டம் அயோத்தியாப்பட்டிணத்திற்கு கிழக்கில் 18 கி.மீ. தொலைவில் இத்திருத்தலம் அமைந்துள்ளது. சேலம் மற்றும் வாழப்பாடியிலிருந்து பேருந்து வசதி உள்ளது.

தொடர்பு முகவரி

செயல் அலுவலர்

அருள்மிகு தான்தோன்றீஸ்வரர் மற்றும்

அஷ்டபுஜபாலமதன வேணுகோபாலசுவாமி திருக்கோயில்

பேளூர் – 636 104, வாழப்பாடி வட்டம்,

சேலம் மாவட்டம். தொலைபேசி எண் : 04292–241400

அருள்மிகு சாம்பமூர்த்தீஸ்வரர் மற்றும் கோபாலசுவாமி திருக்கோயில்

ஏத்தாப்பூர்.

இறைவன்	:	அருள்மிகு சாம்பமூர்த்தீஸ்வரர்
இறைவி	:	அருள்தரும் மனோன்மணி
தலவிருட்சம்	:	வில்வம்
ஆகமம்	:	காரண ஆகமம்

இரண்டாம் தலம் : அருள்மிகு சாம்பமூர்த்தீஸ்வரர் திருக்கோயில் ஏத்தாப்பூர் ஜலம் (நீர்) ஸ்தலம் ஆகும்.

காலம் : கி.பி.8ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்டது.

சிறப்புகள் : வசிஷ்டரால் வழிபாடு செய்யப்பட்ட தலம். ஐப்பசி 9 முதல் 15 வரை மற்றும் மாசி 1 முதல் 7 வரை சூரிய ஒளிக்கதிர் மூலவர் மீது ஒளிர்வது சிறப்பாகும். அப்பர் வைப்புத்தலமாக 6வது திருமுறையில் உள்ளது.

பிரார்த்தனை : சர்ப்ப தோஷம் நீங்கவும், மகப்பேறு பாக்கியம் கிட்டவும் இத்திருத்தலத்தில் உள்ள சாம்பமூர்த்தீஸ்வரரை வணங்கிப் பயனடைகிறார்கள்.

தலச்சிறப்பு

கோட்டைச்சுவர் போல கண்கள் அமைந்த மதில் சுவருடன் கூடிய திருக்கோயில். மைசூர் மன்னரின் விருப்பப்படி உருவான அழகிய கோயில். வசிஷ்டாரண்யம், பாஸ்கரேசுவரம் என்றும் பெயர்கள் உண்டு. பஞ்சபூதங்களும், நான்கு மறைகளும் வழிபட்டது.

'ஏயீச்சுரம்' என்று திருநாவுக்கரசர் போற்றிப்பாடிய வைப்புத்தலம். காமதேனு எனும் தேவர் உலகப்பசு, சாபத்தினால் புலிஉருக்கொண்ட நிலையில் இத்தலத்தில் இறைவனை வழிபட்டு, மீண்டும் பழைய உருவம் பெற்றதால் ஏயீச்சுரம் எனப்படுகிறது. வசிஷ்டர், கௌதமர், சூரியன், ராகு வழிபட்ட தலம்.

கம்பீரமான திருமேனியாக, சுயம்புமூர்த்தியாக சாம்பமூர்த்தீஸ்சுவரர் எழுந்தருளியுள்ளார். ஐப்பசி மாதம் ஏழுநாட்கள் சூரிய பூஜை நிகழ்கிறது. கருவறைக்குப் பின்னே பத்து லிங்கங்கள் உள்ளன.

தெற்குதிசை நோக்கியபடி, நின்ற கோலத்தில் மனோன்மணி அம்மை அருள்பாலிக்கிறாள். தூண் ஒன்றில் அழகிய வீரபத்திரர் சிற்பமும், மடப்பள்ளி அருகே நான்கு மறைகள் வழிபட்ட 'சதுர்வேதலிங்கங்களும்' உள்ளன.

பூஜை, நடை திறந்திருக்கும் நேரம்
காலை 7.00 மணி – பகல் 12.00 மணி
மாலை 4.00 மணி – இரவு 7.00 மணி
உச்சிகாலத்து பூஜை 12.00 மணி

அமைவிடம்

சேலம் – சென்னை தேசிய நெடுஞ்சாலையில், வாழப்பாடியை அடுத்து, புத்திரகவுண்டன்பாளையம் எனும் ஊருக்கு வடக்கே 2 கி.மீ. தொலைவில் உள்ள திருத்தலம். வசிஷ்ட நதியின் வடகரையில் அமைந்துள்ளது. ஆத்தூர் மற்றும் வாழப்பாடியிலிருந்து பேருந்து வசதி உள்ளது.

தொடர்பு முகவரி

செயல் அலுவலர்
அருள்மிகு சாம்பமூர்த்தீஸ்வரர் மற்றும்
கோபாலசுவாமி திருக்கோயில்
ஏத்தாப்பூர், ஆத்தூர் வட்டம். சேலம் மாவட்டம்.
தொலைபேசி : 04282–240171

அருள்மிகு காயநிர்மலேஸ்வரர், பிரசன்ன வெங்கடேச பெருமாள், கைலாசநாதர் திருக்கோயில்கள்

ஆத்தூர் நகர்.

இறைவன்	:	அருள்மிகு காயநிர்மலேஸ்வரர்
இறைவி	:	அருள்மிகு அகிலாண்டேஸ்வரி
தலவிருட்சம்	:	வில்வம்
ஆகமம்	:	காமிக ஆகமம்

மூன்றாம் தலம் : அக்னி (நெருப்பு) ஸ்தலம் ஆகும்.

காலம் : கி.பி. 905 முதலாம் பராந்தக சோழனால் கட்டப்பட்டது.

சிறப்புகள் : வசிஷ்டரால் வழிபாடு செய்யப்பட்ட தலம். காயம் என்றால் உடம்பு,நிர்மலம் என்றால் பரிசுத்தம் என்பதால் பழுதில்லா உடம்பை பெறுவதற்கு இங்கு தொழவேண்டும்.

பிரார்த்தனை : இத்திருத்தலத்தில் உள்ள காயநிர்மலேஸ்வரரை வணங்கினால் நோய் நீங்கி நீண்ட ஆயுளைப் பெறலாம்.

தலச்சிறப்பு

வசிஷ்ட மாமுனிவர் யாகங்கள் பல நிகழ்த்தியதால் இத்தலத்து நதிக்கு வசிஷ்ட நதி என பெயர் வழங்கி வருகிறது. அதனால் இங்கு உள்ள ஈஸ்வரருக்கு வசிஸ்டேஸ்வரர் என்ற பெயரும் உண்டு. இவ்வூரை அனந்தன் என்னும் அரசன் ஆண்டு வந்ததால் இறைவனுக்கு அனந்தேசுவரர் என்று பெயரும் சூட்டியுள்ளான். இவ்வூருக்கு அனந்தகிரி என்று பெயர் சூட்டினான். கி.பி.905–45 வரை ஆண்ட முதல் பராந்தகச் சோழன் இவ்வாலயத்தில் கர்ப்பகிரகம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், ஆகிய திருப்பணிகள் மிகப்பெரிய அளவில் செய்துள்ளான்.

ஏறத்தாழ 600 ஆண்டுகளுக்கு முன்பு மைசூர் மன்னரின் பிரதிநிதி கெட்டி முதலியார் என்பவர் இப்பகுதியில் வரிவசூல் செய்து மன்னருக்கு அளித்துள்ளார். ஒரு நாள் அவரது கனவில் இக்கடவுள் காட்சி தந்ததால் காயநிர்மலேஸ்வரர் என பெயர் சூட்டியுள்ளார். இவரது காலத்தில் கோட்டை மதிற்சுவர், அகழி, மூன்று நெற்களஞ்சியங்கள் மிகுந்த பொருட்செலவில் கட்டி வரிவசூல் செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது. காயம் என்பது உடம்பு, நிர்மலம்; என்பது பரிசுத்தம். பரிசுத்தமான மேனியைக் கொண்ட மூர்த்தி என்பதனால் காயநிர்மலேஸ்வரர் என்று பெயர் ஏற்பட்டது.

தனிச்சிறப்பு

இப்பேரண்டத்தை படைத்த இறைவன் பஞ்சபூதங்களாக விளங்குகின்றான். நிலம் (பிருதிவி), நீர் (அப்பு), தீ (அக்னி),

காற்று(வாயு), வான்(ஆகாஷ்) ஆகியவை பஞ்சபூதங்கள். இறைவன் ஆகும். பல வடிவங்களில் விளங்க எண்ணற்ற ஆலயங்களை நம் முன்னோர்கள் எழுப்பியுள்ளார்கள். திருவண்ணாமலை அக்னி லிங்கத்திற்கு பெயர் பெற்றது. அதுபோல கொங்கு நாட்டில் ஐந்து சிவாலயங்களை வசிஷ்ட மாமுனிவர் அமைத்தார். அதில் காயநிர்மலேஸ்வரர் அக்னி சிவாலயமாகும். மேலும் இத்தலம் வசிஷ்டாரண்யம் எனவும் பெயர் பெற்றது.

இத்திருக்கோயிலில் குழந்தை பாக்கியம் இல்லாதவர்கள் வேண்டுதல் காரணமாக குழந்தைபாக்கியம் பெறுகிறார்கள். நீண்ட நாள் நோய்வாய்பட்டவர்களுக்கு வேண்டுதல் காரணமாக நோய் குணமாகிறது போன்ற காரணங்களால் சிவபெருமானுக்கு நேர்த்தி கடனை செலுத்துகிறார்கள். பரிசுத்தமான மேனியை உடைய சிவபெருமான் தன்னிடம் வந்து வேண்டுவோர்க்கு வேண்டிய அருளைத் தந்து நகரின் மத்தியில் அருள்பாலித்து வருகிறார்.

திருவிழாக்கள்

தமிழ் வருடப்பிறப்பு, மாதாந்திர கிருத்திகை, ஆனி திருவாதிரை உற்சவம், ஆடிப்பூரம், புரட்டாசி நவராத்திரி, ஐப்பசி கந்தர் சஷ்டி, கார்த்திகை தீபம், சொக்கல் உற்சவம், ஸ்ரீ வைகுண்ட ஏகாதசி, மார்கழி ஆருத்ரா தரிசனம், தைப்பூசம், மாசி சிவராத்திரி பங்குனி உத்திரம் ஆகிய விஷேச நாட்களில் சிறப்பு பூஜை நடைபெறும்.

பூஜை, நடை திறந்திருக்கும் நேரம்
காலை 7.30 மணி – பகல் 12.30 மணி
மாலை 4.30 மணி – இரவு 8.30 மணி
இரண்டு காலபூஜை நடைபெறுகிறது.
காலசந்தி – காலை 8.00 மணி
சாயரட்சை – மாலை 6.00 மணி

அமைவிடம்

அருள்மிகு காயநிர்மலேஸ்வரர் திருக்கோயில் ஆத்தூர் பேருந்து நிலையத்திலிருந்து 1 கி.மீ. தொலைவில் உள்ள கோட்டை என்னும் பகுதியில் அமைந்துள்ளது. இத்திருக்கோயில் சேலம் சந்திப்பிலிருந்து ஆத்தூர் இரயில் நிலையத்திற்கு இரயில் போக்குவரத்து வசதியும், சேலம் புதிய பேருந்து நிலையத்திலிருந்து ஆத்தூர் பேருந்து நிலையத்திற்கு பேருந்து வசதியும் உள்ளது.

தொடர்பு முகவரி

செயல் அலுவலர்,
அருள்மிகு காயநிர்மலேஸ்வரர், பிரசன்ன வெங்கடேச பெருமாள்,
கைலாசநாதர் திருக்கோயில்,
ஆத்தூர் நகர் மற்றும் வட்டம். சேலம் மாவட்டம்.
தொலைபேசி : 04282–235100

அருள்மிகு காமநாதீஸ்வரர் திருக்கோயில்

ஆறகளூர்.

இறைவன்	:	அருள்மிகு காமநாதீஸ்வரர்
இறைவி	:	அருள்மிகு பெரியநாயகி அம்மன்
தீர்த்தம்	:	அக்னிதீர்த்தம், யோக நரசிம்மர் தீர்த்தம்
தலவிருட்சம்	:	மகிழமரம்
ஆகமம்	:	காமிக ஆகமம்

நான்காம் தலம் : அருள்மிகு காமநாதீஸ்வரர் திருக்கோயில் – ஆறகளூர் வாயு ஸ்தலம் ஆகும்.

காலம் : 1300 ஆண்டிற்கு முற்பட்டது.

அமைவிடம் : சேலம் கடலூர் நெடுஞ்சாலையில் தலைவாசலில் இருந்து 6.00 கி.மீ. தொலைவில் உள்ளது.

சிறப்புகள் : வசிஷ்டரால் வழிபாடு செய்யப்பட்ட தலம். மன்மதன் வழிபட்ட ஸ்தலம் என்பதால் காமநாதீஸ்வரர் எனும் பெயர் பெற்றது. மன்மதனின் வழிபாட்டிற்கு காவலாக எட்டு திக்கிலும் அஷ்ட பைரவர்கள் எழுந்தருளிய தலமாகும்.

பிரார்த்தனை : இத்திருத்தலத்தில் உள்ள காமநாதீஸ்வரர் மற்றும் அஷ்ட பைரவர்களையும் வணங்கினால் நவகிரஹ தோஷங்கள்நீங்கும், ஏழரைச்சனி பாதிப்பு உள்ளவர்கள் காலபைரவரை வணங்கினால் தோஷம் நீங்கப்பெறுவர்.

தலச்சிறப்பு

கி.பி. 12 மற்றும் 13-ம் நூற்றாண்டை சேர்ந்த கல்வெட்டுக்களை இத்திருக்கோயிலில் காணலாம். இத்திருக்கோயிலில் சோழ ஆட்சியின் கீழ் அமைந்த வான கோவரையர்கள், இப்பகுதியில் ஆட்சி செய்தனர் என்பதை விளக்கும் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன.

இத்திருக்கோயிலில் அமையப்பெற்ற மூர்த்தியானவர் வசிஷ்ட மகரிஷியால் பிரதிஷ்டை செய்யப்பட்ட வாயுலிங்கம் ஆகும். இத்தலம் முப்புரம் எரித்த முக்கண் மூர்த்தி, முருகன் பிறப்பதற்கு காரணமான மன்மதனை எரித்து, பின் மகேஸ்வரன் அருளால் உயிர்பெற்ற அவன் தன் மனைவி ரதியுடன் பூஜித்து பேறு பெற்ற ஸ்தலம் என்ற சிறப்பு உடையது.

தனிச்சிறப்புகள்

1. வசிஷ்டாரண்யத்தில் வசிஷ்டரால் பிரதிஷ்டை செய்யப்பட்ட பஞ்ச பூத தலங்களுள் ஆறகளூரானது நான்காவது சிறப்பு தலமாகும்.
2. ஸ்ரீ காலபைரவரே எட்டு பைரவர்களாகி அருள்புரியும் தலம்.
3. பங்குனி பூரம் நட்சத்திரத்தில் சூரியன் உதயம் நடைபெறும் போது அதன் கிரண ஒளி மூலவர் மீது படுகிறது.
4. ஒவ்வொரு மாத தேய்பிறை அஷ்டமி தினத்தன்று 6.00 மணியளவில் காலபைரவருக்கு சிறப்பு ஹோமம்; தொடர்ந்து காலபைரவருக்கு மஹா அபிஷேகம், சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு இரவு 8.00 மணிக்கு மகா தீபாராதனையும், நள்ளிரவு 12.00 மணிக்கு உற்சவருக்கு தீபாராதனையும் நடைபெறுகிறது. தமிழகத்தின் பல்வேறு பகுதிகள் மற்றும் வெளி மாநிலங்களிலிருந்து பக்தர்கள் வந்து தரிசித்து இறையருள் பெறுகின்றனர்.

பூஜை, நடை திறந்திருக்கும் நேரம்
காலை 7.00 மணி – மதியம் 12.00 மணி
மாலை 4.30 மணி – இரவு 8.30 மணி
இரண்டு கால பூஜைகள் நடைபெறுகின்றன.
காலசந்தி – காலை 8.00 மணி
சாயரட்சை – மாலை 6.00 மணி

திருவிழாக்கள்

பிரதிமாதம் தேய்பிறை நாளில் வரும் அஷ்டமி அன்று ஸ்ரீகாலபைரவருக்கு யாகம் மற்றும் அபிஷேகம் நடைபெறும். மேலும் பிரதி மாதந்தோறும் பிரதோஷம், சித்ரா பௌர்ணமி, வைகாசி விசாகம், ஆனித்திருவாதிரை, ஆடிப்பூரம், விநாயகர் சதுர்த்தி, கந்தர் சஷ்டி, கிருத்திகை, சொக்கல் உற்சவம், கார்த்திகை தேய்பிறை, பைரவாஷ்டமி மார்கழி – ஆருத்ரா தைப்பூசம் மாசி சிவராத்திரி, பங்குனி உத்திரம் போன்றவை.

அமைவிடம்

சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம் ஆறகளூரானது சேலம் – சென்னை தேசிய நெடுஞ்சாலை 70 கி.மீ. தொலைவில் தலைவாசல் உள்ளது. இத்தலைவாசலிலிருந்து 6 கி.மீ. தொலைவில் தென் கிழக்கில் ஆறகளூர் உள்ளது.

போக்குவரத்து வசதி

சேலம் மத்திய பேருந்து நிலையத்தில் இருந்து ஆத்தூர் 52 கி.மீ. தொலைவில் உள்ளது. ஆத்தூரில் இருந்து தினந்தோறும் ஆறகழூருக்கு நகரப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. தேய்பிறை அஷ்டமி நாட்களில் அரசு போக்குவரத்துக் கழகத்தால் சிறப்பு பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

தொடர்பு முகவரி

செயல் அலுவலர்
அருள்மிகு காமநாதீஸ்வரர் திருக்கோயில்
ஆறகளூர். ஆத்தூர் வட்டம். சேலம் மாவட்டம்.
தொலைபேசி : 04282–235100

அருள்மிகு சொர்ணபுரீஸ்வரர் திருக்கோயில்

கூகையூர், விழுப்புரம்.



ஐந்தாம் தலம்	:	அருள்மிகு சொர்ணபுரீஸ்வரர் திருக்கோயில் கூகையூர் (ஆகாயம்) ஸ்தலம் ஆகும்.
காலம்	:	1300 ஆண்டிற்கு முற்பட்டது.
அமைவிடம்	:	சேலம் மாவட்டம் ஆத்தூரிலிருந்து 40 கி.மீ. தொலைவில் உள்ளது.
சிறப்புகள்	:	வசிஷ்டரால் வழிபாடு செய்யப்பட்ட தலம். சிற்ப வேலைப்பாடுகள், ஒரே கல்லில் வடிவமைக்கப்பட்ட மண்டபம், அம்மன் சன்னதி முன்மண்டப கொடுங்கையில் சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்த ஸ்தலமாகும்.
பிரார்த்தனை	:	இத்திருத்தலத்தில் வழிப்பட்டால் நவகிரஹ தோஷம் மற்றும் களத்திர தோஷம் நீங்கும்.

தொடர்பு முகவரி

செயல் அலுவலர்

அருள்மிகு சொர்ணபுரீஸ்வரர் திருக்கோயில்

கூகையூர், சின்னசேலம் வட்டம்,

விழுப்புரம் மாவட்டம்.

பஞ்சபூத ஸ்தலங்கள்



அருள்மிகு மீனாட்சி சொக்கநாதர், ஞானதண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்

மேட்டூர் அணை.

இறைவன்	: ஞானதண்டாயுதபாணிசுவாமி விசேடமூர்த்தி
இறைவன் பெயர்	: அருள்மிகு சொக்கநாதர்
இறைவி	: அருள்மிகு மீனாட்சியம்மன்
தீர்த்தம்	: காவிரி ஆறு
தலவிருட்சம்	: வில்வமரம்
ஆகமம்	: காரண ஆகமம்

தலச்சிறப்பு

இத்தலம் மேட்டூர் அணைக்கட்டிலிருந்து வெளியேறும் நீர், காவிரி ஆறாக உருவெடுத்து வரும் நதியின் கிழக்குக் கரையில்

முன்னொரு காலத்தில் வனமாக இருந்த பகுதியை சீரமைத்து குடியிருப்பாக மாற்றியபொழுது, தற்பொழுது திருக்கோயில் அமைந்திருக்கும் பகுதியில் தவச்சான்றோர் ஒருவர் முருகன் சிலை அமைத்து பூஜைகள் செய்து, அருள்வாக்கு கூறி வந்துள்ளார். நாடிவரும் பக்தர்களுக்கு குறிசொல்லியும், அருளாசி வழங்கியும் அதன் பயனாகக் கிடைத்த நிதியைக்கொண்டு ஞானதண்டாயுதபாணி கோயில் கட்டி குடமுழுக்கு நடத்தியுள்ளார்.

இந்நிலையில் அப்போதைய சென்னை மாகாணத்தில் நடைபெற்றுவந்த பிரிட்டிஷ் ஆட்சியின்போது மேட்டூரில் காவிரி ஆற்றின் குறுக்கே மேட்டூர் அணை கட்டும் திட்டம் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதனால் காவிரி ஆற்றங்கரையில் இருந்த "சாம்பள்ளி" என்னும் கிராமத்தில் வசித்த மக்கள் வேறு இடத்திற்கு குடிபெயர்ந்தனர்.

அக்கிராமத்தில் இருந்த மீனாட்சி சொக்கநாதர் திருக்கோயிலை மாற்ற முடியாத காரணத்தினால் அங்குள்ள தெய்வத் திருமேனிகளை மட்டும் பிற ஆலயங்களில் கொண்டுபோய் வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

திருவிழாக்கள்

இத்திருக்கோயிலில் பிரதோஷம், கிருத்திகை, சஷ்டி, பௌணர்மி போன்ற மாதாந்திர பூசைகளும், வைகாசி விசாகம், ஆனி திருமஞ்சனம், ஆடிக்கிருத்திகை, நவராத்திரி விழா, கந்தசஷ்டி, கார்த்திகை அன்னாபிஷேகம், திருக்கார்த்திகை தீபத்திருவிழா, மார்கழி மாத தனுர் பூசை, திருவாதிரை திருவிழா, மாசி சிவராத்திரி விழா, பங்குனி உத்திர திருவிழா, ராமநவமி திருவிழா போன்ற மாத உற்சவங்களும், தைப்பூசம் திருவிழா, வைகுண்ட ஏகாதசி போன்ற வருட உற்சவங்களும் நடைபெறுகின்றன. தைப்பூசத் திருவிழாவும்,

ராமநவமித் திருவிழாவும், வைகுண்ட ஏகாதசி திருவிழாவும் முக்கிய திருவிழாக்களாகும்.

பூஜை, நடை திறந்திருக்கும் நேரம்
காலை **6.00** மணி – பகல் **12.00** மணி
மாலை **5.00** மணி – இரவு **8.00** மணி
காலசந்தி – காலை **8.00** மணி
இராக்கால பூஜை – இரவு **8.00** மணி
இரண்டுகால பூஜைகள் நடைபெறுகின்றன.

அமைவிடம்

சேலத்திலிருந்து 50 கி.மீ. தொலைவில் உள்ளது மேட்டூர். மேட்டூர் பேருந்து நிலையத்திலிருந்து 1 கிலோமீட்டர் தொலைவிலும், மேட்டூர் இரயில் நிலையத்திலிருந்து 5 கிலோமீட்டர் தொலைவிலும் இத்தலம் அமைந்துள்ளது.

தொடர்பு முகவரி

செயல் அலுவலர்
அருள்மிகு மீனாட்சி சொக்கநாதர், ஞானதண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்
மேட்டூர் அணை–1, மேட்டூர் வட்டம் – **636 401.**

அட்ட வீரட்டத் தலங்கள்

திருக்கண்டியூர்	–	பிரமன் சிரம் கொய்தது
திருவதிகை	–	முப்புரம் எரித்தது
திருக்குறுக்கை	–	காமனைக் காய்ந்தது
திருவிற்குடி	–	சலந்தரா சுரனைக் கொன்றது
திருக்கோவிலூர்	–	அந்தகாசூரனைக் கொன்றது
திருப்பறியலூர்	–	தக்கன் யாகம் அழித்தது
வழுவூர்	–	யானை உரி போர்த்தது
திருக்கடவூர்	–	யமனை உதைத்தது

அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில்

தாரமங்கலம்.

இறைவன்	:	அருள்மிகு கைலாசநாதர்
இறைவி	:	அருள்மிகு சிவகாம சுந்தரி
தீர்த்தம்	:	பிரம்ம தீர்த்தம்
தல விருட்சம்	:	வன்னி மரம்
ஆகமம்	:	காரண ஆகமம்
இசைக்கருவி	:	தவில், நாயனம்

புராணப்பெயர்

திருமால் தனது தங்கை பார்வதிதேவியை, சிவபெருமானுக்கு, தாரை வார்த்துத் திருமணம் செய்து கொடுத்ததால் 'தாரைமங்கலம்' என்று முன்பு அழைக்கப்பட்டதாகக் கூறுவர்.

தலச்சிறப்பு

தமிழக வரலாற்றில் நாயக்கர் ஆட்சி உருவாகக் காரணமாகயிருந்தது 'தலைக்கோட்டை போர்' ஆகும். விஜயநகர

மன்னர் கிருஷ்ணதேவராயரின் வீழ்ச்சிக்குப் பிறகு, அவரது சிற்றரசர்கள் பலர் தாங்கள் ஆட்சி புரிந்த பகுதிகளில் சுதந்திரமாகக் கோலோச்சத் துவங்கினர். அவர்களில் ஒருவர்தான் இப்பகுதியில், 'அமரகுந்தி'யை தலைநகராகக்கொண்டு ஆட்சி செய்த கெட்டிமுதலி. ஒரு நாள் அவரது மந்தையிலிருந்து ஒரு பசு விலகிச் செல்வதையும், தொலைவில் சென்று ஒரு புற்றின்மீது தனது பாலைச் சொரிவதையும் கண்டு அதிசயித்தார். அந்தப் புற்றினை விலக்கிக் பார்க்க, அங்கே ஒரு சிவலிங்கத் திருமேனியைக் கண்டார். அவரது கனவில் தோன்றிய மகேசுவரன் அங்கே தனக்கு ஒரு கோயிலை எழுப்புமாறு அவரைப் பணித்தார். அதன் பின் அங்கே உருவானதுதான் தாரமங்கலம் கலைக்கோயில். 13ஆம் நூற்றாண்டில் உருவான கலைப்பொக்கிஷம்!

இந்த வரலாற்றுக்கு சான்று உரைக்கும் வகையில், திருக்கோயிலின் வெளிச்சுற்றில் உள்ள மூன்று விநாயகர்களை கெட்டிமுதலி, முடிகெட்டி முதலி, மும்முடிக்கெட்டி முதலி, என்ற ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் பிரதிஷ்டை செய்தனர் என்று தலவரலாறு கூறுகிறது.

திருக்கோயில் அமைப்பு
மேற்கு நோக்கிய இராஜகோபுரம்

தாரமங்கலம் கைலாசநாதர் திருக்கோயில், மேற்குதிசை நோக்கியபடி உள்ளது. கோயிலுக்கு முன்னால் உயர்ந்த தீபக்கம்பம் இருக்கிறது. ஐந்துநிலை கொண்ட 150 அடி உயர இராஜகோபுரம், உச்சியில் ஏழு கலசங்களோடு மிளிர்கிறது. கோபுர வாயிற்கதவுகள் வேங்கை மரத்தினால் செய்யப்பெற்றவை. வாயிற்படிக் கருங்கல் பவளக்கல்லால் அமைக்கப்பட்டுள்ளது. இரண்டு யானைகள் அதனை இழுத்து வருவதுபோல, ஒரு ரதம் போல காண்கிறது. தோஷங்களை

நீக்கவல்ல பரிகாரத்தலங்கள் மேற்குதிசை நோக்கியே உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

முதலில் விநாயகர், அடுத்து பஞ்சபூதலிங்கங்கள், அதற்கு அடுத்து ஆயிரம் முகங்கள் கொண்ட சகஸ்ரலிங்கம், வெளிச்சுற்றில் உள்ளன. குதிரைவீரர்கள் வேல்கொண்டு சிறுத்தைகளைக் குத்துவது போன்ற அரிய சிலைகளைத் தாங்கி நிற்கும் தூண்கள் 'குதிரைக்கால் மண்டபத்தை' அழகு செய்கின்றன. திருவரங்கம், வேலூர் மற்றும் மதுரைக் கோயில் மண்டபங்களுக்கு இணையானது.

கைலாசநாதருக்கு சூரிய பூஜை

கருவறையில் மேற்கு நோக்கியபடி, தானே முளைத்தெழுந்தவராக எழுந்தருளியுள்ளார் கைலாசநாதர். ஆண்டுதோறும் மாசிமாதத்தில் மூன்று நாட்களில், சூரியதேவன் தனது ஒளிக்கதிர்களால், ஈசனை வழிபடும் காட்சி மெய்சிலிர்க்க வைப்பதாகும்.

சிவகாமசுந்தரி

சிவகாமசுந்தரி அம்மையின் சந்நிதி, சுவாமி சந்நிதிக்கு வடகிழக்கில் உள்ளது. அழகு பூரிக்கும் அன்னையாக விளங்கும் அம்பிகை நின்றகோலத்தில் எழுந்தருளியுள்ளார். அம்மன் சந்நிதிக்கு தெற்கில் ஆறுமுகப்பெருமான் தனித்து நிற்கும் சந்நிதி.

ஜுரஹரஸ்வரர்

உட்பிரகாரத்தில் தெற்கு திசை பார்த்து, மூன்று தலை, மூன்று கை, கால்களுடன் எழுந்தருளியிருப்பவர் ஜுரஹரஸ்வரர். இவரை ஞாயிற்றுக்கிழமை அன்று விபூதி கொண்டு அர்ச்சனை செய்து, அதை தினமும் நெற்றியில் இட்டு வந்தால் தீராத ஜுரம் தணிந்து விடும். ஜுரத்தை ஹரம் செய்பவர் ஜுரஹரஸ்வரர் ஆவார்.

பாதாளேசுவரர்

இவை தவிர, அமரகுந்தி அரண்மனைவரை பாதை கொண்ட சுரங்க வழியும், ஒன்று இருந்த பகுதியிலே, 'பாதாளலிங்கம்' ஒன்று உள்ளது. செவ்வாய்க்கிழமைகளில், பாதாளேசுவரருக்கு திருமணமாகாதவர்களுள் சிறப்பு வழிபாடாக பச்சைக் கற்பூரத்தை பன்னீரில் கலந்து அபிஷேகம் செய்தால் திருமணம் விரைவில் கைகூடும் என்பது வரலாறு.

சித்திவிநாயகர்

திருக்கோயில் வலதுபுறத்தில் கல்மேடை அமைக்கப்பட்டு அதன் மேல் சித்திவிநாயகர் சந்நிதி அமைக்கப்பட்டுள்ளது. இச்சந்நிதி விமானம் வரை 9 கற்கள் மட்டுமே கொண்டு வடிவமைக்கப் பட்டுள்ளது. இத்திருக்கோயில் வேலைகள் நடைபெறும்போது சிற்பியின் மகனான சிறுவன் இத்திருக்கோயிலை வடிவமைத்ததாக வரலாறு உள்ளது. மேலும் சகஸ்ரலிங்கம் அவிநாசியப்பர் ஆகிய சந்நிதிகளும் இத்திருக்கோயிலில் அமையப் பெற்றுள்ளன.

திருக்கோயில் சிற்ப சிறப்பம்சங்கள்

முற்காலத்தில் சிற்பிகள் கோயில்கட்ட ஒப்பந்தம் செய்துகொள்ளத் தாம்பூலம் வாங்கும்போது, பேரூர், பெரியபாளையம், தாரமங்கலம், தாடிக்கொம்பு இடங்களிலுள்ள சிற்பங்கள் நீங்கலாக என்று சொல்லி வாங்கும் வழக்கம் இருந்ததாம். இந்த நான்கு இடங்களிலுள்ள சிற்பங்கள் மிகவும் அற்புதமான வேலைத்திறனுடையவை. அவற்றில் தனிச்சிறப்பு வாய்ந்தவை தாரமங்கலம் அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில் கற்சிற்பங்களாகும்.

கிளிகொத்தும் தாமரைமலர்கள்

அர்த்தமண்டபத்தின் மேல் விதானத்தில் மூன்று அடுக்குகள் கொண்ட தாமரை மலரும், அதன் இதழ்களைக் கொத்தியபடி அமர்ந்துள்ள எட்டு கிளிகளும், நடுவிலே சுழலும் வளையமும், சுற்றிலும் கல்லினாலான தொடர் சங்கிலிகள் எட்டும், எண்திசைக்காவலர் தம் துணைவியரோடு காட்சிதரும் சிற்பமும் மேற்கூரையை அழகுசெய்யும் அற்புதங்கள் ஆகும்.

குதிரை, யாளி மண்டபம்

இரண்டாவது வாயிலுக்கு முன்னால் இருப்பது, ஆறு தூண்களையுடையது. இரண்டில் யாளிகளும், நான்கில் குதிரைகளும் இருக்கின்றன. அவைகளில் ஏறிச்செல்வோர் ஒவ்வொருவரும் இரண்டு விதமாக அமைக்கப்பெற்று இருக்கின்றனர். ஒரு புறம் ஒரு மாதிரியாகவும், மற்றொருபுறம் வேறு வகையாகவும் ஒரே தூணில் செதுக்கப்பெற்றிருப்பது அழகாகும். ஒரு யாளியின் வாய்க்குள் நாலு அங்குல குறுக்களவுள்ள கல் உருண்டை இருக்கிறது. அதை எடுக்க முடியாது. இந்த மண்டபத்தின் கொடுங்கையில் குரங்குகளை இயற்கையான பாவனைகளில் செதுக்கி உள்ளனர்.

மகாமண்டபம்

இந்த மண்டபத்தின் தூண்கள் அழகிய சிற்பச் சிறப்பு வாய்ந்தவை. மகாமண்டப தூண்களில் வாலி, சுக்ரீவர் சண்டையும், இராமர் வாலியை அம்பெய்தும் காட்சியும் காணலாம். வாலியிருக்கும் தூண் பக்கம் நின்று பார்த்தால் இராமர் உருவம் தெரியாது, ஆனால் இராமர் சிலை பக்கம் இருந்து பார்த்தால் வாலி தெரியும் வண்ணம், மறைந்து நின்று அம்பெய்து வாலியை இராமர் கொன்ற புராண காட்சி கண்முன்னே கல்லில் வடிக்கப்பட்டுள்ளது. உட்பிரகார மதிற்சுவர்களையொட்டியுள்ள தூண்களில் ரிஷிபத்தினி உருவங்கள். இறைவனுடைய பிட்சாடன கோலத்தில் மயங்கி நிற்கின்றனர். ஒரு ரிஷிபத்தினி பிச்சை கேட்பவருக்கு அகப்பையில் அன்னம் கொண்டு வருகிறாள். அதைக்காகம் சாப்பிடுவதையும் கவனிக்கவில்லை. அவளுடைய கொண்டைச்சொருகும், அணிகலன்களும் கண்டு மகிழத்தக்கன. மூன்றாவது பார்வதியின் திருவுருவம். அதையடுத்து பிச்சாடனர் தொடர்ந்து பக்கம் இன்னும்மொரு ரிஷிபத்தினி வெகு ஒய்யாரமாக நிற்கிறாள். அதையடுத்து திருமாலின் மோகினி அவதாரம். இருபுறமும் இரு முனிவர்கள் கொஞ்சும் பாவனையில் இருக்கின்றனர். அப்பாலுள்ள தூண்களில் தனித்தனியே பதஞ்சலி,

வியாக்ரபாதர், ஜெயமுனிவர், ஹயக்ரீவர் இவர்களுடைய திருமேனிகள் இருக்கின்றன. அதையடுத்து ஊர்த்துவ தாண்டவமூர்த்தி. அதற்குப் பக்கத்தூணில் எல்லாம் வல்ல சித்தர் கல்யானைக்குக் கரும்பு கொடுக்கும் காட்சி.

இதையடுத்து தூண்களில் புராணக்காட்சிகள். இடபவாகனத்தில் சிவபார்வதி இருவரும் ஆரோகணித்துச் செல்கின்றனர். இடபத்திற்கு நீர்வேட்கை ஏற்பட்டது. இதையறிந்த இறைவி, சிவபெருமானை இடபத்துக்கு நீர் கொடுக்க வேண்டினார். அவர் சடையில் மறைத்து வைத்து இருந்த கங்கையைச் சிறிது விட்டார். நீர் பெருகிற்று. இடபம் நீர் பருகிற்று. கங்கையான பெண்ணைத்தலையில் தூக்கி மறைத்து வைத்திருப்பது கண்டு தேவி கோபம் கொள்கிறாள். இறைவன் அம்மையை சாந்தப்படுத்த முயல்கிறார். இடபம் கீழே படுத்துக்கொண்டு மேலே இருந்து வரும் நீரைப்பருகுகின்றது. கங்கை பெண் உருவத்தில் காட்சியளிக்கிறாள். மேலேயிருந்து கீழே விழும் வெள்ளத்தை எதிர்த்து மீன்கள் செல்கின்றன. இயற்கையை எழில் நலத்துடன் சித்தரிக்கிறான் சிற்பி. மற்றொரு தூணில் இறைவி அமைதிபெற்ற நிலை. இவ்விரண்டு தூண் சித்திரங்களையும் சிவசக்தி கோபம், சிவசக்தி சாந்தம் என்று கூறுகின்றனர். தெற்கு பிரகாரத்தில் நடனப்போட்டியில் தோல்வியடைந்து தலைகுனிந்து நிற்கும் காளியின் காட்சியில் நம் மனதைப் பறிகொடுக்கலாம். மன்மதன் கிளிமேல் அமர்ந்து மலர் அம்பைத் தொடுக்கும் பாவனையிலிருக்கின்றான். கிளி வாயிலே கடிவாளமும் சேணமும் மாட்டப்பட்டுள்ளன. இரதிதேவி அன்னத்தின் மேல் அமர்ந்து இருக்கிறாள். தொங்குகின்ற பின்னல்சடை மிக வனப்புடையது. மன்மதன் சிற்பத்தின் பக்கம் இருந்து பார்த்தால் இரதியின் உருவம் காணமுடியாது. ஆனால் இரதியின் பக்கம் இருந்து பார்க்கும் பொழுது மன்மதனைக் காண முடியும்.



கல்வெட்டுகள், கோயில் கட்டிய காலம்

பழைய கல்வெட்டு ஹொய்சாள ராதநாதன் காலம் (1228–1247), இரண்டாவது ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் (1281–89–1290–1320), மூன்றாவது விஜயநகர அச்சுத நாயக்கரின் கல்வெட்டு (1538–1540) இன்னும் கெட்டி முதலி தன் புகழ்பாடும் கல்வெட்டுக்கள் இங்கு ஏராளம் உள்ளன. இத்திருக்கோயில் 13ஆம் நூற்றாண்டில் மதுரை விசுவநாத நாயக்கருக்கு உட்பட்டு அரசாண்ட கெட்டி முதலிகள் என்ற குறுநில மன்னர்களால் கட்டப்பட்டது.

திருவிழா

தைப்பூசத்தேரோட்ட திருவிழா, நவராத்திரி, சூரசம்ஹாரம், திருவாதிரை, திருகார்த்திகை மற்றும் பிரதோச வழிபாடு

பூஜை, நடை திறந்திருக்கும் நேரம்
காலை 6.00 மணி – பகல் 12.30 மணி
மாலை 4.30 மணி – இரவு 8.00 மணி
காலசந்தி – காலை 9.00 மணி
சாயரட்சை – மாலை 6.00 மணி
இருகால பூஜை நடைபெறுகிறது.

அன்னதானம்

இத்திருக்கோயிலில் மாண்புமிகு தமிழக முதல்வரின் அன்னதானத் திட்டம் மூலம் தினமும் 30 நபர்களுக்கு அன்னதானம் வழங்கப்படுகிறது.

அமைவிடம்

சேலம் மாவட்டம், ஓமலூர் பேருந்து நிலையத்திலிருந்து 10 கி.மீ தொலைவிலும், சேலத்திலிருந்து மேற்கில் 14 கி.மீ. தொலைவிலும் இத்திருக்கோயில் அமைந்துள்ளது.

உபகோயில்கள்

அருள்மிகு இளமீஸ்வரர் திருக்கோயில்

இது கைலாசநாதர் திருக்கோயிலுக்கு மேற்கேயிருக்கிறது. கிழக்கு பார்த்த சன்னிதி. இது மிகவும் சிற்பச்சிறப்புடையது. தாமரை இதழ்கள். எறும்புக்கூட்டங்கள். மூன்று அங்குல அளவில் நடராஜப்பெருமான் திருவுருவம் இவை சிற்பத்திறனுக்கு எடுத்துக்காட்டாக விளங்கி நிற்கின்றன. இங்கு காணப்படும் கல்வெட்டுகள் தாரமங்கலத்து கெட்டி முதலி அந்தணர்களுக்கு நிலம் தானமாகக் கொடுத்ததைக் குறிக்கின்றன.

அருள்மிகு பத்ரகாளியம்மன் திருக்கோயில்

இது ஊர் காவல் தெய்வம். இளமீஸ்வரர் கோயிலுக்கு வடக்கே இருக்கிறது. அதற்கு முன்னால் ஒரு குளம் இருக்கிறது. சுற்றுச்சுவர்கள் வட்டமானவை. படிக்கட்டுகள் எண்கோணமானவை. உள்ளே குளம் சதுரமானது. இங்கு ஒரு வேடிக்கை. ஒரு கல்லை எடுத்து சுவரின் மேல் ஓங்கி வீசினால் அது சுவர் ஓரமாகவே ஓடி முன் எறிந்த இடத்திற்கே வந்து சேருகிறது. சுவர்களின் மேல் கல்லால் ஆன சிங்க உருவங்கள் அமைக்கப்பெற்று இருக்கின்றன. இது எட்டு வட்டக்கிணறு என அழைக்கப்படும்.

தொடர்பு முகவரி

செயல் அலுவலர்

அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில்,

தாரமங்கலம், ஓமலூர் வட்டம், சேலம் மாவட்டம் – **636 502.**

தொலைபேசி எண் : **0427 – 252100**

இ–மெயில் முகவரி : **ijfo@kailasanathaswamytemple.com**

வலைதள முகவரி : **www.kailasanathaswamytemple.com**

பஞ்ச மூர்த்தி

தக்ஷணாமூர்த்தி	–	சாந்த மூர்த்தி
நடராஜர்	–	ஆனந்த மூர்த்தி
பைரவர்	–	உக்ரமூர்த்தி
பிக்ஷாடனர்	–	வசீகரமூர்த்தி
சோமாஸ்கந்தர்	–	கருணாமூர்த்தி

அருள்மிகு அழகிரிநாத சுவாமி திருக்கோயில்

கோட்டை, சேலம்.

இறைவன்	:	அருள்மிகு அழகிரி நாதர் (சுந்தரராஜ பெருமாள்)
இறைவி	:	அருள்மிகு சுந்தரவல்லி தாயார்
தல விருட்சம்	:	பாதிரி / வள்ளி
ஆகமம்	:	ஸ்ரீவைகாநஸ முறைப்படியும், வடகலை

புராணச்சிறப்பு

வில்வ மரத்தினடியில் குழந்தையாகத் தோன்றிய திருமகளை அழகியவல்லி எனப்பெயரிட்டு, பிருகு முனிவர் வளர்த்தார். ஸ்ரீ எனும் லட்சுமி தேவியே குழந்தையாக எழுந்தருளியதாய் இக்கோயிலின் வரலாறு சொல்கிறது. ஸ்ரீசைலம், ஸ்ரீசைலபுரம் என்றழைக்கப்பட்டு, பின்னர் சேலம் என மருவியதாக தலவரலாறு கூறுகிறது. நான்கு திருக்கரங்களுடன் அழகிய மணவாளராக, அழகியநாதராக, அழகிரிநாதராக பகவான் எழுந்தருளி, அழகிய வல்லியைக் கரம் பிடித்து, பிருகு முனிவருக்கு சாப விமோசனமும் அளித்ததாக விஷ்ணுபுராணம் கூறுகிறது. அழகிய வல்லி, சுந்தரவல்லி என்றும் அழைக்கப்படுகிறார்.

தலச்சிறப்பு

சௌந்தரராஜனாக

ஆறடி உயரங்கொண்ட அற்புதமான சிலை வடிவமாக, சங்கு சக்ர, கதாபாணியாக அழகிரிநாதர் சேவை சாதிக்கிறார். பெருமாள்

சந்நிதியின் வலதுபுறம் கிழக்கே நோக்கியபடி பத்மாவதித்தாயாரும், 18 கரங்கள் கொண்ட சக்கரத்தாழ்வார், யோக நரசிம்மர் சந்நிதிகளும் உள்ளன.

தாயார் சந்நிதியை அடுத்து சந்தான கோபாலகிருஷ்ணன் மக்கட்பேறு வேண்டி மக்கள் கூடும் சந்நிதி.

எட்டடி உயர ஆஞ்சநேயர்

மூலவர் அழகிரிநாதருக்கு இணையான பெருமை வாய்ந்தவர். இத்திருக்கோயிலில் கம்பீரமாக நிற்கும் எட்டடி உயர ஆஞ்சநேயர் சிம்ம முகத்துடன் காட்சி தருவதால் அக்னி நட்சத்திர நாட்களில் இவருக்கு வெண்ணெய் காப்பு சாத்தப்படுகிறது. ஆங்கில வருடப்பிறப்பு அன்று தங்கக்கவசம் சாத்துதல் நடைபெறுகிறது.

நாகர் சந்நிதி

தலமரம் வன்னி மரத்தின் கீழ் நாகர் சந்நிதி உள்ளது. நாகதோஷம் நீங்கிட, மக்கள் பால் அபிஷேகம் செய்து வழிபடுகிறார்கள்.

கல்வெட்டு

கி.பி. 12ஆம் நூற்றாண்டில் தமிழகத்தை ஆண்ட சடையவர்மன் சுந்தரபாண்டியனால் முதன்முதலாக கருங்கல் திருப்பணி செய்து குடமுழுக்கு நடைபெற்றதாக கல்வெட்டு கூறுகிறது.

தனிச்சிறப்பு

மண்டப தூண்களில் பழமையான சிற்ப வேலைப்பாடுகள் அமைந்த யாழி சிற்பமும், மீன் சிற்பமும், அமாவாசை, பௌர்ணமி காட்சிகளும் சிறப்பாக பதிக்கப்பட்டுள்ளன.

மூலவர் சன்னிதிக்கு இடது புறமாக ஆதிவேணுகோபால் சன்னிதி பாமா ருக்மணி சமேதராக காட்சியளிக்கிறார். மிகவும் பழமை வாய்ந்த சிற்பங்கள் அலங்கார மண்டபத்தில் அமைந்துள்ளன.

பரந்தாமன் பாற்கடலில் பள்ளி கொண்ட உருவமும், அசுரர்கள், தேவர்கள் ஆதிசேஷனை கயிறாகவும் மேரு மலைகளை மத்தாகவும் கொண்டு அமுதம் கடையும் நிகழ்ச்சி கல்லினால் சிற்பமும் வடிவமைக்கப்பட்டுள்ளது. மண்டப விதானத்தை தாங்குவது போன்ற காட்சியும் அமைந்திருப்பது காண்போருக்கு விருந்தாக அமைகிறது.

திருக்கோயிலின் தெற்கு மதிற்சுவரில் 108 திவ்ய தேசங்கள் குறித்த விபரங்கள் கல்வெட்டில் பொறிக்கப்பட்டு பதியப்பட்டுள்ளது.

திருக்கோயிலில் ஸ்ரீராமஜெயம் கோடிமுறை எழுதப்பட்டு ஸ்ரீராமர் ஸ்தூபி மண்டபம் அமைக்கப்பட்டு உள்ளது.

கண்ணாடி மாளிகை ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது. வைகுண்ட ஏகாதசி திருவிழா மற்றும் புரட்டாசி சனிக்கிழமைகளில் உற்சவர் மூர்த்தி சிறப்பு அலங்காரத்தில் இதில் அருள்பாலிக்கின்றார். இது கண்கொள்ளாகாட்சியாக அமைகிறது.

பிரார்த்தனை தலம்

மணமாகாத ஆண், பெண் இருபாலரும் அழகிரிநாதரை வழிபட்டால் (பிரார்த்தனை செய்தால்) உடனடியாக திருமணம் நடைபெறும் என்பது ஐதீகம்.

திருவிழாக்கள்



வைகாசி மாதம் தேர்த்திருவிழா, மார்கழியில் திருவாய்மொழித் திருநாள் எனப்படும் இராப்பத்து திருநாளில் முதல்நாளில் வைகுண்ட ஏகாதசி அதிகாலை 5.00 மணியளவில் சொர்க்கவாசல் திறப்பு எனப்படும் வைபவம் சிறப்பாக நடைபெறுகிறது. பகல் பத்தாம் நாள் அன்று பெருமாள் நாச்சியார் கோலத்தில் (மோகினி அலங்காரம்) உலாவரும் காட்சி தனிச்சிறப்பு உடையது.

அன்னதானம்

இத்திருக்கோயிலில் தமிழக முதல்வர் அவர்களின் அன்னதானத்திட்டம் மூலம் தினமும் 50 நபர்களுக்கு அன்னதானம் வழங்கப்படுகிறது.

நித்தியபூஜை

பூஜா காலங்கள்	நடைபெறும் நேரம்
காலசந்தி	காலை 8.00 மணி
உச்சிகாலம்	மதியம் 12.00 மணி
இராக்கால பூஜை	இரவு 8.00 மணி
நடைதிறந்திருக்கும் நேரம்	
காலை 6.00 மணி – பகல் 12.30 மணி	
மாலை 3.30 மணி – இரவு 9.00 மணி	

அமைவிடம்

சேலம் மாநகரின் மையப்பகுதியில் பழைய பேருந்து நிலையத்திற்கு மேற்கு புறத்தில் கோட்டைப்பகுதியில் இத்திருக்கோயில் அமைந்துள்ளது.

தொடர்பு முகவரி

செயல் அலுவலர்

அருள்மிகு அழகிரிநாதசுவாமி திருக்கோயில்

கோட்டை, சேலம் நகர் மற்றும் வட்டம். சேலம் மாவட்டம்.

தொலைபேசி எண் : 0427 – 2221577

மின்னஞ்சல் : salemazhagirinathar@gmail.com

வலைதள முகவரி : www.salemkottaiazhagirinathar.tnhrce.in

அருள்மிகு மாரியம்மன், காளியம்மன், முனியப்பன் (வ) திருக்கோயில்கள்

குகை, சேலம் நகர்.

இறைவி : அருள்மிகு மாரியம்மன், அருள்மிகு காளியம்மன்
இறைவன் : அருள்மிகு முனியப்பன்
தலவிருட்சம் : பவளமல்லிகை மரம்

வரலாற்று சிறப்பு

சேலம் மாநகரம் முழுவளர்ச்சி பெற்றிராத நாட்களில், இப்பகுதியில் 'மௌன சாமியார்' ஒருவர் குகையில் இருந்தபடி இறைபணி ஆற்றிவர, அவரை வழிபட பக்தர்கள் அதிகரித்தனர். அவர் முக்தியடைந்த நிலையில், குகையை மூடிவிட்டு, அவருக்கு கோயிலும் எழுப்பிவிட்டனர். அங்கே ஆதிமுனீசுவரர் சிலை ஒன்றும் நிறுவப்பட்டது. தண்டம் ஒன்றை ஏந்திய நிலையில் சின்முத்திரையுடன், நின்ற கோலத்தில் காட்சி தருகிறார் முனீசுவரர். பவளமல்லியின் நறுமணம் இங்கே மணக்கிறது.

குகைப்பகுதியல் உள்ள மாரியம்மன் மற்றும் காளியம்மன் திருக்கோயில்களில் உருளுதண்டம் போடுதல் எனும்

அங்கபிரதட்சணம் அக்னி குண்டம் இறங்குதல் இத்திருக்கோயில் சிறப்பாகும்.

திருவிழாக்கள்

27 நாட்கள் நடைபெறும் ஆடித்திருவிழாவில் அக்னிகுண்டம் இறங்குதல், வண்டி வேடிக்கை, வாண வேடிக்கை, சத்தாபரணம், காளியம்மன் கோயில் சூரசம்ஹாரம் மிகவும் கோலாகலமாகக் கொண்டாடப்படுகின்றன. முனியப்பன் திருவிழா வைகாசியில் நடைபெறுகிறது.

பூஜை, நடை திறந்திருக்கும் நேரம்
காலை 6.00 மணி – பகல் 12.00 மணி
மாலை 4.00 மணி – இரவு 8.30 மணி
இரண்டு கால பூஜை நடைபெறுகிறது.
காலசந்தி – காலை 7.00 மணி
சாயரட்சை – மாலை 6.00 மணி

அமைவிடம்

சேலம் மாநகரில், பழைய பேருந்து நிலையத்திலிருந்து 1 கி.மீ. தொலைவில் குகை என்னுமிடத்தில் இத்திருக்கோயில் உள்ளது.

தொடர்பு முகவரி
செயல் அலுவலர்,
அருள்மிகு மாரியம்மன், காளியம்மன், முனியப்பன் வகையறா திருக்கோயில்கள்
குகை, சேலம் நகர் மற்றும் வட்டம்.

அருள்மிகு மாரியம்மன், திரௌபதியம்மன் திருக்கோயில்

செவ்வாய்ப்பேட்டை, சேலம் நகர்.

இறைவி : அருள்மிகு மாரியம்மன்
ஆகமம் : துவாகமம்

தலவரலாறு

இருநூறு ஆண்டுகளுக்கு முன், ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் சந்தை கூடும் பகுதியாக இருந்த செவ்வாய்பேட்டை சந்தைக்கு வந்தவர் ஒருவர் செல்லும் பாதையில் குழவி போன்ற கல்

ஒன்று தடுக்கிட, அதனை அவர் எடுத்து சாலையோரத்தில் போட்டுச் சென்றார். அடுத்த வாரமும் அவர் சந்தைக்கு சென்றபோதும், அதே குழவிக்கல் பாதையில் கிடக்க, அவர் வியப்புற்றார். அதனைப் பற்றி தனது ஊரார் மத்தியில் விளக்கிக் கூறுகையில், ஒரு மூதாட்டி மூலம் அருள்வாக்கு கிடைத்து, அது சாதாரண குழவிக்கல் அல்ல, மாரியம்மனே அந்த உருவில் வந்தவள் என்றும், வேப்பமரத்தடியில் அதனை நிறுவி கோயில் எழுப்பிட உத்திரவாயிற்று. அப்படியே செய்தார்.

குழவிக்கல்லை நிறுவிய இடம் அரசின் இடம். சாலையை அகலப்படுத்த முனைந்த 'லாங்லி' எனும் மாவட்ட ஆட்சித்தலைவர் கோயிலை அகற்றி வேறிடத்தில் வைக்க உத்தரவிட்டார். அதற்கு முன்பாக கோயிலுக்கு சுற்றுச்சுவர் எழுப்பி, பழைய கோயில் போல தோற்றமளிக்கச் செய்தனர் ஊரார். அதனை அறிந்த ஆட்சித்தலைவர் லாங்லி, அவர்களைக் கைது செய்து, கூண்டில் ஏற்றினார். குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு ஆதரவாக அம்மனே 'குழந்தை வடிவில்' நீதிபதி முன் தோன்றி அவர்களைக் குற்றவாளிகள் அல்ல ! என நிரூபித்து விடுவித்தார். இது உண்மையில் நிகழ்ந்த சம்பவம் ஆகும்.

நேர்த்திக்கடன்

அம்மை நோய் போன்றவற்றால் அவதியுறுவோர், அம்மனிடம் வேண்டிக்கொண்டு புனிதநீர் வாங்கிச் சென்று உடலில் தெளித்துக்கொண்டு குணமடைவர்.அம்மன் அருளால் நோய் நீங்கப் பெற்றபின் 'உருவாரங்கள்' ஒப்படைப்பர். உருளுதண்டம் நேர்த்திக்கடன் சகஜமாக நடைபெறுகின்றது.

கண்ணில் 'பூ' விழுதல் போன்றவற்றிற்கு கண்மலர் சார்த்தி அம்மனை வேண்டிக்கொள்வதும், பாதிப்புக்குள்ளாகும் உறுப்புகள் போன்ற உருவாரங்களையும் காணிக்கையாக்குகிறார்கள்.

திருவிழாக்கள்

ஆடிப்பெருந்திருவிழா 35 நாட்கள் சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

அன்னதானம்

இத்திருக்கோயிலில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அன்னதானத்திட்டம் மூலம் தினமும் 50 நபர்களுக்கு அன்னதானம் வழங்கப்படுகிறது.

பூஜை, நடை திறந்திருக்கும் நேரம்
காலை 7.00 மணி – பகல் 12.30 மணி
மாலை 4.00 மணி – இரவு 9.00 மணி
இரண்டு கால பூஜை நடைபெறுகிறது.
உச்சிகாலம் – பகல் 12.00 மணி
சாயரட்சை – இரவு 7.00 மணி

அமைவிடம்

சேலம் மாநகரின் பழைய பேருந்து நிலையத்திலிருந்து 2 கி.மீ. தொலைவில், உள்ள வணிகர் நிறைந்த பகுதியான செவ்வாய்ப்பேட்டையில் நடுநாயகமாக இத்திருக்கோயில் அமைந்துள்ளது.

எட்டுபேட்டை என்று அழைக்கப்படும் சேலம் மாநகரில் உள்ள எட்டு மாரியம்மன் திருக்கோயில்களில், திருத்தேர் கொண்டுள்ளது. செவ்வாய்ப்பேட்டை மாரியம்மன் திருக்கோயில் தான்.

தொடர்பு முகவரி

செயல் அலுவலர்,
அருள்மிகு பிரசன்ன வெங்கடாஜலபதி, மாரியம்மன், திரௌபதியம்மன் திருக்கோயில்,
செவ்வாய்ப்பேட்டை, சேலம் நகர் மற்றும் வட்டம்.
சேலம் மாவட்டம் – 636 002.
தொலைபேசி எண் : 0427 – 2210110

மகாபாரதத்தில் ஐந்து நூற்கள்

ஐந்தாவது வேதம் எனப்படும் மகாபாரதத்தில் ஐந்து உன்னத நூற்கள் உள்ளன.

1) கிருஷ்ணன் அர்ஜுனனுக்கு அருளியது பகவத்கீதை.
2) பீஷ்மர் கிருஷ்ணர் முன்னிலையில் அருளியது விஷ்ணு ஸஹஸ்ரநாமம்.
3) விதுரர் திருதராஷ்டிரனுக்கு வழங்கியது விதுரநீதி
4) ஸநத்ஸுஜாதர் திருதராஷ்டிரனுக்கு அருளியது ஸநத்ஸுஜாதீயம்.
5) யக்ஷர் கேட்ட கேள்விகளுக்கு தருமர் கூறிய விடைகள் யக்ஷப்ரச்நம்.

அருள்மிகு மாரியம்மன், காளியம்மன் திருக்கோயில்

சஞ்சீவிராயன் பேட்டை, சேலம்.

இறைவி : அருள்மிகு மாரியம்மன், காளியம்மன்
இசைக்கருவி : தவில், நாதஸ்வரம்

தலச்சிறப்பு

அன்னியர் ஆட்சிக்காலத்தில் இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு சேலம் நகரில், அம்மை, காலரா போன்ற தொத்து வியாதிகள் ஏற்பட்டு, அந்த நோயாளிகளை நகர மக்களிடமிருந்து பிரித்து, ஊருக்கு வெளியே ஒரு திடலில் தங்க வைத்தனர். பொதுவாக அம்மைநோய் என்றால் அலறுவர் ஆங்கிலேயர். அவர்கள் மொழியில் குவாரண்டைன் என்பர் இப்படி பிரித்து வைப்பதை!

அந்தத்திடலின் அருகில் ஓர் அற்புதமான ஆலயம் இருந்ததை அவர்கள் அறிந்திலர். வேப்ப மரத்தடியில் இருந்த அந்த ஆலயத்தில் எழுந்தருளியிருந்த மாரியம்மனின் திருவருளால், எவ்வித சிகிச்சையும் இல்லாமல் நோயாளிகள் குணமுற்று பிழைத்தெழுந்த அதிசயம் அப்போது நிகழ்ந்தது. அதனால் பயனடைந்தவர்கள், அம்மனுக்கு விழா எடுத்துக் கொண்டாடத் துவங்கி, கோயிலும் விரிவாக்கம் பெற்றது. காளியம்மன், முனியப்பன், விநாயகர், முருகன் முதலான தெய்வங்களுக்கும் சந்நிதிகள் தோற்றுவிக்கப்பட்டன.

'காளீசுவரி' வடக்கு திசை நோக்கியபடி, மாரியம்மன் சந்நிதிக்கு வலப்புறம் அமைந்துள்ளது. சிறந்த பிரார்த்தனைத் தலமாக இந்தக் கோயில் விளங்குகிறது.

திருவிழா

ஆடிமாதம் பெருவிழா நடைபெறுகிறது.

பூஜை, நடை திறந்திருக்கும் நேரம்
காலை **6.30** மணி – பகல் **12.00** மணி
மாலை **5.00** மணி – இரவு **8.30** மணி
இரண்டு கால பூஜை நடைபெறுகிறது.
காலசந்தி – **8.30** மணி
சாயரட்சை – **7.30** மணி

அமைவிடம்

சேலம் புதிய பஸ் நிலையத்திலிருந்து 7 கி.மீ. தொலைவிலும், பழைய பேருந்து நிலையத்திலிருந்து 2 கி.மீ. தொலைவிலும் இத்திருக்கோயில் அமைந்துள்ளது.

தொடர்பு முகவரி

செயல் அலுவலர்
அருள்மிகு மாரியம்மன், காளியம்மன் வகையறா திருக்கோயில்கள்
சஞ்சீவிராயன்பேட்டை, சேலம் நகர் மற்றும் வட்டம்.
சேலம் மாவட்டம் – 636 006.

அருள்மிகு வெண்ணங்கொடி முனியப்ப சுவாமி திருக்கோயில்

ஜாகீர்அம்மாபாளையம், சேலம்.

இறைவன் : அருள்மிகு வெண்ணங்கொடி முனியப்பசுவாமி
ஆகமம் : கிராம தேவர்

தலச்சிறப்பு

வெண்ணங்கொடி, கொடூரமாக உக்கிரமாகக் காட்சிதரும் முனியப்பசுவாமியை சாந்தப்படுத்துவது போல பச்சைப்பசேலென ஆலயத்தின் மண்டபத்தில் படர்ந்துள்ளது போல, அவருக்கு குடை பிடிப்பது போலவும் அவரைச் சுற்றிப் படர்ந்துள்ளது.

கொடுவாள் மீசையும், அனல்பொறி பறக்கும் பார்வைகொண்ட கண்களும், கரங்களில் சூலமும் வீச்சு அரிவாளும், கொண்டு, கம்பீரமான தோற்றத்தில் காவல்தெய்வமாக எழுந்தருளியுள்ளார் முனியப்பசுவாமி.

வாகன பூசை

சேலம் – பெங்களூர் நெடுஞ்சாலையில் செல்லும் அனைத்து வாகனங்களுமே, அருள்மிகு முனியப்பரை வேண்டி, பூஜை செய்து

எலுமிச்சம்பழங்களை, வண்டிச்சக்கரங்களின் முன்னே வைத்து வேண்டிக் கொண்ட பின்புதான், மேலே பயணிப்பர். பயணத்தின்போது எவ்வித இன்னலும் இடையூறும் நேராது முனியப்பசுவாமி காத்திடுவார் என்பது அவர்களின் அசையாத நம்பிக்கை !

24 மணி நேரமும் பூஜை

நாள் முழுதும், நடையடைக்காது, இரவு பகல் 24 மணி நேரமும் முனியப்பசுவாமிக்கு பூஜை நடப்பது, வேறு எங்கும் நிகழாததொரு அதிசயம் ஆகும். அமாவாசை, ஞாயிறு, செவ்வாய், புதன் ஆகிய நாட்களில் பொங்கலிட்டு வழிபாடு செய்பவர்களை மிகுதியாக காணலாம்.

அன்னதானம்

இத்திருக்கோயிலில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அன்னதானத்திட்டம் மூலம் தினமும் 25 நபர்களுக்கு அன்னதானம் வழங்கப்படுகிறது.

பூஜை, நடை திறந்திருக்கும் நேரம்
24 மணி நேரமும் நடை திறந்திருக்கும்.
காலசந்தி – காலை 5.00 மணி
உச்சிகாலம் – பகல் 12.00 மணி
இராக்கால பூஜை – இரவு 12.00 மணி
மூன்று கால பூஜை நடைபெறுகிறது.

அமைவிடம்

சேலம் மாநகருக்கு மேற்கில், ஓமலூர் செல்லும் சாலையில் 3 கி.மீ. தொலைவில், சாலையோரம் அமைந்துள்ள எல்லைக்காவல் தெய்வமாக விளங்குகிறார் முனியப்பசுவாமி.

தொடர்பு முகவரி

செயல் அலுவலர்,
அருள்மிகு வெண்ணங்கொடி முனியப்பசுவாமி திருக்கோயில்
ஜாகீர் அம்மாபாளையம், சேலம் வட்டம் மற்றும் மாவட்டம்.
தொலைபேசி எண் : 0427 – 6452645

அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயில்

செவ்வாய்ப்பேட்டை, சேலம்–2

இறைவன்	: அருள்மிகு சுப்ரமணியசுவாமி
இறைவி	: வள்ளி, தெய்வானை
தலவிருட்சம்	: வில்வம்
தீர்த்தம்	: சரவண தீர்த்தம்
ஆகமம்	: காரண ஆகமம்
இசைக்கருவி	: தவில், நாதஸ்வரம்

தலச்சிறப்பு

பழநிமலையில் கோயில்கொண்டுள்ள தண்டபாணி பெருமானின் நகல் போலக் காட்சி தருவது சித்திரச்சாவடி சுப்ரமணியின் தனிச்சிறப்பு ஆகும். கருவறையில் வடபுறம் அமைந்துள்ள சரவணதீர்த்தம் கரையில், மகா கணபதியின் சிலை ஒன்று, நெடுங்காலமாகவே வழிபாட்டில் இருந்து வந்தது.

அதன் பீடத்தில் தன்தலை திருகி தனம் என்று செதுக்கப் பட்டிருந்ததை, எவரும் புரிந்து கொள்ளாதிருந்தனர். அப்போது, வழக்கறிஞராகவிருந்த சிவதொண்டர் ஒருவர், தலை திருகி என்பதன் நுட்பத்தை அறிந்திட, விநாயகர் சிலையை நகர்த்திப் பார்க்கையில் அதனடியில் ஒரு செப்புக் கலசத்தில் பொற்காசுகளும், வெள்ளி நாணயங்களும் நிறைந்திருக்கக் கண்டார். அதனைக்

கொண்டு அழகிய கருவறை, கல்மண்டபம், மகாமண்டபம் ஆகியவற்றையும் அமைத்தார். அவருக்குத் துணையாக பல அன்பர்களும் கூடினர். நிறை நிலா நாட்களில் பஜனை, அன்னதானம் நடத்திட முற்பட்டனர். சிவபக்தர்களாக, சித்தர் போன்றவர் கூடிடும் சாவடியாக மாறி சித்தர்சாவடி என்று வழங்கலாயிற்று.

வலக்கையில் தண்டும், அறையில் முண்டுமாய் நின்ற கோலத்தில் ஏகமூர்த்தியான இறைவனுக்கு ஆதியில் கருவறை மட்டுமே இருந்தது.

திருவிழாக்கள்

கந்தர்சஷ்டி மிகச்சிறப்பாக கொண்டாடப்படுகிறது. 11 நாள் உற்சவம், 7ம் நாள் சூரசம்ஹாரம், 8ஆம் நாள் திருக்கல்யாணம்.

அன்னதானம்

இத்திருக்கோயிலில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் திருக்கோயில் அன்னதானத்திட்டம் மூலம் தினமும் 25 நபர்களுக்கு அன்னதானம் வழங்கப்படுகிறது.

பூஜை, நடை திறந்திருக்கும் நேரம்
காலை 6.30 மணி – பகல் 12.30 மணி
மாலை 4.30 மணி – இரவு 8.00 மணி
காலசந்தி – காலை 8.00 மணி
உச்சிகாலம் – பகல் 12.00 மணி
சாயரட்சை – இரவு 7.30 மணி
மூன்று கால பூஜை நடைபெறுகிறது.

அமைவிடம்

சேலம் நகரில் பழைய பேருந்து நிலையத்திலிருந்து 2 கி.மீ. தொலைவிலும், புதிய பேருந்து நிலையத்திலிருந்து 4 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளது.

தொடர்பு முகவரி
செயல் அலுவலர்
அருள்மிகு சுப்ரமணியசுவாமி திருக்கோயில்
சித்திரச்சாவடி, செவ்வாய்ப்பேட்டை,
சேலம்–636 002.

அருள்மிகு வெங்கடேசப்பெருமாள் திருக்கோயில்

சின்னதிருப்பதி, சேலம்.

இறைவன்	: அருள்மிகு வெங்கடேசப்பெருமாள்
இறைவி	: அருள்மிகு பத்மாவதி தாயார்
ஆகமம்	: பஞ்சராத்ரம்
தலவிருட்சம்	: நெல்லிமரம்

தலவரலாறு

வைணவப்பெரியார் ஒருவரது கனவில் குறிப்பால் உரைத்தபடி, சேலம் நகரின் எல்லைக்கு அப்பால் பயணம் மேற்கொண்டார். அடர்ந்த மரங்களுக்கிடையே அரவம் ஊர்வதையும் கண்டு அஞ்சிய அவர், அது தனக்கு வழிகாட்டிட வந்த ஆதிசேஷனே என்று உணர்ந்து அதனைத் தொடர்ந்து சென்றார். விரைந்து சென்ற அவர் கண்ட காட்சி அதிசயிக்கச் செய்ததாம். ஒரு புற்றுக்குள் பாம்பு மறைந்தபோதிலும், புற்றிலிருந்து பூசை திரவியங்களின் வாசனையோடு மணியோசையும் கேட்டது. அதுவே தனக்கு கனவில் தோன்றிய திருத்தலம் என்பதை அவர் உணர்ந்தார்.

அவரது ஊரில் வாழ்ந்த மற்றொருவர், திருப்பதிக்குச் சென்று பிரார்த்தனைகளை நிறைவேற்ற முடியாத நிலையில், பெருமாள் தோன்றி, தான் அவருக்கு அருகாமையிலேயே குடிகொண்டு இருப்பதாகவும், வைணவப்பெரியார் ஒருவர் அதனை அடையாளம் காட்டுவார் எனக் கூறினார்.

முதலில் புற்றிடங்கண்ட பெரியவர் ஊர்மக்களோடு அந்த அதிசயத்தைக் கூற, அனைவரும் திரண்டெழுந்து, புற்று இருந்த குன்றினை அடைந்தனர்.

சுயம்பு வடிவமாக அமைந்த அந்தப் புற்றையே, பெருமாளாக பாவித்து அருகிலேயே ஒரு துளசி மாடமும் எழுப்பி வழிபடத் துவங்கினர். காலப்போக்கில் துளசிமாடம் அருகில் உற்சவத்திருமேனி ஒன்றும் வெளிப்பட்டது. ஐநூறு ஆண்டுகளுக்கு முன்னர் நிகழ்ந்தவை இவை! காலப்போக்கில் அந்த இடத்திலேயே அழகியதோர் கோயிலும் அமைந்து, திருவிழா, தேரோட்டம், சொர்க்கவாசல் திறப்பு, திருக்கல்யாணம் என்று விரிவாக்கம் பெற்றது.

சேலம் மாநகரில் வடக்கு நோக்கி எழுந்தருளியுள்ள ஒரே ஆஞ்சநேயர் சந்நிதி, இந்தத் திருக்கோயிலில் அமைந்துள்ளது.

கௌலி கேட்டல், சர்ப்பதோஷ நிவர்த்தி, திருமணத்தடை நீக்கம், மகப்பேறு கிட்டிட புற்றுமண் பிரசாதம் பெறுதல் இப்படி பலவகையான பிரார்த்தனைகள் நடைபெறுகின்றன. கடன் நிவர்த்தி செய்பவராக வடக்கு முக ஆஞ்சநேயர் விளங்குகிறார்.

சன்னிதிகள்

அருள்மிகு சக்கரத்தாழ்வார் மற்றும் யோகநரசிம்மர், தன்வந்திரி பகவான், ஸ்ரீலஷ்மிஹயக்ரீவர், விஷ்ணு, துர்க்கை, ஸ்ரீலஷ்மிவராகப்பெருமாள், ரங்கநாதர், இராமானுஜர் ஆகிய சன்னிதிகள்.

பூஜை, நடை திறந்திருக்கும் நேரம்
காலை 7.00 மணி – பகல் 12.00 மணி
மாலை 5.00 மணி – இரவு 7.30 மணி
காலசந்தி – காலை 9.00 மணி
ஒருகால பூஜை நடைபெறுகிறது.

அன்னதானம்

இத்திருக்கோயிலில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் திருக்கோயில் அன்னதானத்திட்டம் மூலம் தினமும் 25 நபர்களுக்கு அன்னதானம் வழங்கப்படுகிறது.

அமைவிடம்

சேலம் பழைய பேருந்து நிலையத்திலிருந்து 5 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. சிறந்த பிரார்த்தனைத் தலமாக விளங்குகிறது.

தொடர்பு முகவரி
செயல் அலுவலர்,
அருள்மிகு வெங்கடேசப்பெருமாள் திருக்கோயில்
சின்னதிருப்பதி, சேலம் வட்டம் மற்றும் மாவட்டம் – 636 008.

அருள்மிகு எல்லைப்பிடாரியம்மன் மற்றும் சுப்ரமணிய சுவாமி திருக்கோயில்

குமாரசாமிப்பட்டி, சேலம்.

தலச்சிறப்பு

சுமார் 80 ஆண்டுகளுக்கு முன் தற்போது திருக்கோயில் அமைந்துள்ள இடத்திற்கு அப்பால் நாக சர்ப்பம் ஒன்றின் மூலம் அம்மன் சிலை ஊர் மக்களுக்கு காட்சி அளிக்கச் செய்யப்பட்டுள்ளது. பின்னர் ஊர் முக்கியஸ்தர்களின் கனவில் அம்மன் தோன்றி, தான் ஊர் எல்லைப் பகுதியில் ஒரு கற்சிலையாக மண்ணில் புதைந்து இருப்பதைச் சொன்னார்.

தனிச்சிறப்பு

இத்திருக்கோயில் சிவசக்தி உருவத்தில் மூலவராக அருள்மிகு எல்லைப்பிடாரியம்மன் அருள்பாலிப்பது தனிச்சிறப்பாகும்.

திருவிழாக்கள்

ஒவ்வொரு ஆண்டும் பங்குனி மாதம் குண்டம் திருவிழா வெகு விமரிசையாக நடைபெறும். மேலும் சித்திரை 1, சித்ரா பௌர்ணமி, திருக்கார்த்திகை, தனுர் உற்சவம், நவராத்திரி, தைப்பூசம் மற்றும் மஹா சிவராத்திரி ஆகிய விழாக்கள் நடைபெறுகிறது.

வருட உற்சவம்: கந்தசஷ்டி விழா,

பூஜை, நடை திறந்திருக்கும் நேரம்

காலை **6.00** மணி முதல் **12.00** மணி வரை

மாலை **4.30** மணி முதல் **8.00** மணி வரை

மூன்றுகால பூஜை

காலசந்தி – காலை **6.00** மணி

உச்சிகாலம் – நண்பகல் **12.00** மணி

சாயரட்சை – இரவு **8.00** மணி

அமைவிடம்

சேலம் நகரின் மையப் பகுதியில், செரி ரோட்டில் அரசு கலைக்கல்லூரி அருகில் குமாரசாமிபட்டியில் அமைந்துள்ளது.

தொடர்பு முகவரி

செயல் அலுவலர்

அருள்மிகு எல்லைப்பிடாரியம்மன் மற்றும்

சுப்ரமணிய சுவாமி திருக்கோயில்

குமாரசாமிப்பட்டி, சேலம் நகர் – **636 007.**

தொலைபேசி எண் : **0427–2210110**

அருள்மிகு கோவிந்தராஜப் பெருமாள் திருக்கோயில்

உடையாப்பட்டி, சேலம்.

இறைவன்	: அருள்மிகு கோவிந்தராஜ பெருமாள்
இறைவி	: ஸ்ரீதேவி, பூதேவி
ஆகமம்	: பாஞ்சரத்ர ஆகமம்

தலச்சிறப்பு

உடையாப்பட்டி, அருள்மிகு கோவிந்தராஜப் பெருமாள் திருக்கோயில், சுமார் 400 ஆண்டுகளுக்கு முன்பாக தோன்றியதாக இத்திருக்கோயில் வரலாறு கூறுகிறது. இத்திருக்கோயிலிலுள்ள ஸ்ரீ கோவிந்தராஜப்பெருமாள் வலப்புறமான குன்றின் மீது புற்றுருவாய் சுயம்பு மூர்த்தியாக அருள்பாலிக்கின்றார்.

தனிச்சிறப்புகள்

இத்திருக்கோயிலின் கௌலிவாக்கு கேட்டல் மற்ற ஆலயங்களில் இல்லாத தனிச்சிறப்பு ஆகும். உதாரணமாக : சட்டூர்

காளியம்மனுக்கு திருவிழா நடைபெறும் போது இங்கு கௌலி வாக்கு கேட்டபிறகுதான் சட்டூரில் திருவிழா நடைபெறும் என்பது இவ்வாலயத்தின் தனிச் சிறப்பாகும். ஸ்ரீகோவிந்தராஜப் பெருமாள் சட்டூர் காளியம்மனுக்கு அண்ணனாக கருதப்படுவது இவ்வாலயத்தின் மற்றொரு தனிச் சிறப்பாகும்.

பூஜை, நடைதிறக்கும் நேரம் :
காலை 7.00 மணி – பகல் 11.00 மணி
மாலை 5.00 மணி – இரவு 7.00 மணி
கால சந்தி பூஜை – காலை 7.00 மணி
சாயரட்சை பூஜை – மாலை 6.00 மணி
இரண்டு கால பூஜை நடைபெறுகிறது.

பிரதிமாதம் சனிக்கிழமை தோறும், ஸ்ரீஆஞ்சநேயருக்கு வடைமாலை சாற்றி வழிபாடு செய்வது சிறப்பு பூஜை ஆகும்.

திருவிழாக்கள்

புரட்டாசி சனிக்கிழமை மற்றும் வைகுண்ட ஏகாதசி திருவிழா

அமைவிடம்

இத்திருக்கோயில் சேலம்–ஆத்தூர் தேசியநெடுஞ்சாலையில் சேலத்திலிருந்து 5 கி.மீ. தொலைவில் உள்ள உடையாப்பட்டியில் சிறிய குன்றின்மேல் அமைந்துள்ளது.

தொடர்பு முகவரி

செயல் அலுவலர்
அருள்மிகு கோவிந்தராஜப் பெருமாள் திருக்கோயில்
உடையாப்பட்டி, சேலம் – 636 140.
தொலைபேசி : 04292–241400

திருமால் படுக்கை எட்டு வகை

வடபத்ர சயனம்	–	திருவில்லிபுத்தூர்
வீரசயனம்	–	திருஇந்தளூர்
தல சயனம்	–	திருக்கடல் மல்லை
உத்தான சயனம்	–	திருக்குடந்தை
தர்ப்ப சயனம்	–	திருப்புல்லாணி
புஜங்க சயனம்	–	திருவரங்கம், திருக்கோட்டியூர்
போக சயனம்	–	தில்லை திருச்சித்ரகூடம்
மாணிக்க சயனம்	–	திருநீர்மலை

அருள்மிகு சோமேஸ்வரர் சுவாமி திருக்கோயில்

சங்ககிரி.

இறைவன்	: அருள்மிகு சோமேஸ்வரர்
இறைவி	: சௌந்தரநாயகி

தலச்சிறப்பு

சந்திரன் வழிபட்டதால் சோமேசுவரர் எனும் திருநாமங்கொண்டு ஈசுவரன் அருள்பாலிக்கும் திருக்கோயில். திப்புசுல்தான் காலத்தில் அவனிடம் அமைச்சர்களாக இருந்தவர்கள் சைவ ஈடுபாட்டுடன் எழுப்பிய திருக்கோயில் என்பது வரலாறு. சித்த பிரமை, மனநோய் உள்ளவர்கள் சோமேஸ்வரரை வழிபடுதல் நலம் தரும்.

நான்கு கரங்களுடன், நின்ற கோலத்தில், இடப்புறம் தனி சந்நிதிகொண்டு அருள்பாலிக்கிறாள் சௌந்தரநாயகி. அழகு தமிழில் 'அழகம்மை' என்று கூறலாம்.

தனிச்சிறப்பு

சந்தோஷ சனீசுவரர் துணைவியோடு இருக்கும்போது அனைவருக்கும் இன்முகம் காட்டுவது போல, இத்திருக்கோயிலில்

எழுந்தருளியிருக்கிறார். சனீசுவரர், சந்தோஷ சனீசுவரர் என்ற சிறப்போடு, துணைவியுடன் தனிசந்நிதி கொண்டுள்ளார்.

திருவிழாக்கள்

திருவாதிரை ஆருத்ரா தரிசனம், மார்கழி உற்சவம், பங்குனி – திருக்கல்யாணம்.

பூஜை, நடை திறந்திருக்கும் நேரம்

காலை 6.00 மணி – பகல் 10.00 மணி

மாலை 5.00 மணி – இரவு 8.00 மணி

காலசந்தி – காலை 7.30 மணி

சாயரட்சை – மாலை 6.00 மணி

இரண்டு கால பூஜை நடைபெறுகிறது.

அமைவிடம்

சேலம் நகரிலிருந்து தென்மேற்கில் 34 கி.மீ. தொலைவில் உள்ள 'சங்ககிரி துர்கம்' எனப்படும் சங்ககிரி ஈரோடு – சேலம் வழித்தடத்தில் இத்திருக்கோயில் அமைந்துள்ளது. 800 மீட்டர் உயரமும், 1500 படிகளும் கொண்ட சங்கு போன்று வடிவம் அமைந்த மலையின் அடிவாரத்தில் உள்ளது.

தொடர்பு முகவரி

செயல் அலுவலர்

அருள்மிகு சோமேஸ்வரர் மற்றும் சென்னகேசவப்பெருமாள் திருக்கோயில்கள்

சங்ககிரி நகர், சங்ககிரி வட்டம், சேலம் மாவட்டம்.

அருள்மிகு வரதராஜப் பெருமாள் திருக்கோயில்

மலையடிவாரம், சங்ககிரி.

இறைவன்	: அருள்மிகு வரதராஜப் பெருமாள்
இறைவி	: அருள்மிகு பெருந்தேவித்தாயார்
ஆகமம்	: ஸ்ரீ வைகானாச ஆகமம்

புராணச்சிறப்பு

கிருஷ்ணதேவராயர் காலத்தில், அவரது எட்டாவது திருமணம் இங்கு நடைபெற்றதாக வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன. உடையார்கள் ஆட்சிக்காலத்தில் லட்சுமிகாந்த உடையார் மற்றும் தேசிராஜ உடையார் காலத்தில் திருப்பணி செய்விக்கப்பட்டதாக அரசு ஆவணமான 'அரசிதழில்' கூறப்பட்டுள்ளது. தக்கராமாயண அரங்கேற்றமும் இங்கு நடைபெற்றதாகக் கூறப்படுகிறது.

"பஞ்சகிரி மகாத்மியம்" என்பது, ஐந்து மலைகள் சூழ்ந்த பகுதி பற்றிய புராணம், ஸ்கந்த புராணத்தின் காசிக் காண்டத்தில் இடம் பெற்றுள்ளது. அந்த ஐந்து மலைகளில் ஒன்று சங்ககிரி ஆகும்.

சங்கு வடிவத்தில் அமைந்த மலை ஆனதால் சங்ககிரி என அழைக்கப்பட்டது. துர்கம் என்பது கோட்டையைக் குறிப்பதாகும். ஏறக்குறைய பத்து கோட்டைகள் கொண்டது. திப்பு சுல்தானாலும் பிற மன்னர்களாலும் கட்டப்பட்டவை.

 

பூஜை, நடை திறந்திருக்கும் நேரம்
காலை 9.00 மணி – பகல் 12.00 மணி
சனிக்கிழமைதோறும்
உச்சிகால பூஜை : பகல் 11.00 மணி
ஒரு கால பூஜை நடைபெறுகிறது.

பெருந்தேவித் தாயாருடன் வரதராஜப்பெருமாள் எழுந்தருளியுள்ள திருக்கோயில். மூன்று நிலை இராஜகோபுரம், பெரிய பிரகாரத்துடன் அமைந்தது. ஆண்டாளுக்கு தனி சந்நதி அமைந்துள்ள திருத்தலமாகும். திருமண கோரிக்கை நிறைவேறும் ஸ்தலமாகும்.

திருவிழாக்கள்

வருடந்தோறும் மார்கழி 27ந் தேதி கூடாரவல்லி திருவிழா நடைபெறும்.

அமைவிடம்

சேலத்திலிருந்து 34 கி.மீ. தொலைவில் உள்ள சங்ககிரி நகரிலுள்ள சங்ககிரி மலையின் அடிவாரம், கோட்டை கீழ்த்தட்டின் மூன்றாவது சுற்றில் அமைந்துள்ளது.

தொடர்பு முகவரி

செயல் அலுவலர்
அருள்மிகு சோமேஸ்வரர் வகையறா திருக்கோயில்கள்
சங்ககிரி நகர் & வட்டம். சேலம் மாவட்டம் – 637 103.

அருள்மிகு வரதராஜப்பெருமாள் திருக்கோயில்

ஒருக்காமலை, சங்ககிரி.

இறைவன் : அருள்மிகு வரதராஜப் பெருமாள்

தலச்சிறப்பு

நில மட்டத்திலிருந்து, 500 அடி உயரத்தில் உள்ள குன்றின்மேல் உள்ள ஒரு கல்லாலான அந்தப் பாறையை மக்கள் ஒருக்கல் மலை என்றழைக்க, அதுவே 'ஒருக்காமலை' ஆக மருவியுள்ளதாக கூறப்படுகிறது.

குடவரைக் கோயிலாக அமைந்துள்ள கருவறையினுள்ளே, திருமாலின் திருநாமத்துடன், சங்கு சக்கரம் ஒரே கல்லில் அமைந்துள்ளன. அதன் கீழே ராமர், சீதை லட்சுமணன், பரதன், சத்ருக்னன் மற்றும் பல கற்சிலைகள் உள்ளன. கருவறை முன்பு பெருமாளின் திருவடிகள், ஒருகல்லில் பொறிக்கப்பட்டுள்ளது. வெளிப்பிரகாரத்தில் ஆஞ்சநேயர் கற்சிலை ஒன்று படைப்பு சிறப்பமாக உள்ளது.

வாரத்தில் சனிக்கிழமை தோறும் பூஜை நடைபெறுகிறது. பிறநாட்களில் மக்களின் வேண்டுகோள்படி சிறப்பு பூஜை நடத்தப்படுகிறது.

இத்திருக்கோயிலின் உபசந்நிதியாக ஆஞ்சநேயர் சந்நிதி கொங்கணாபுரம் சாலையில் அமைந்துள்ளது.

தனிச்சிறப்புகள்

இத்திருக்கோயில் ஒரு கல் பாறையின் அடிபாகத்தில் குடைவரைக் கோயில் போன்று அமைந்துள்ளது. இதில் திருமாலின் சங்கு, சக்கரம், திருநாமம் இயற்கையாக அமைந்துள்ளது.

இத்திருக்கோயிலில் வார சனிக்கிழமை நாட்களில் சுவாமிக்கு பாலாபிஷேகம், அன்னபூஜை செய்து திருக்கோடி ஏற்றி வழிபாடு செய்து பக்தர்களுக்கு தழுவல் (அன்னம்) பிரசாதம் வழங்கப்படுகிறது.

திருவிழாக்கள்

சித்திரைத் திருவிழா, புரட்டாசி 5 சனிக்கிழமைகளும் வருட உற்சவமாக கொண்டாடப்படுகிறது.

பூஜை, நடை திறந்திருக்கும் நேரம்
காலை 8.00 மணி – பகல் 2.00 மணி
ஒருகால பூஜை நடைபெறுகிறது.
உச்சிகால பூஜை : பகல் 12.00 மணி
சனிக்கிழமைகளில் காலை 8.00 – மாலை 5.00 மணிவரை

அன்னதானம்

இத்திருக்கோயிலில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் திருக்கோயில் அன்னதானத்திட்டம் மூலம் தினமும் 30 நபர்களுக்கு அன்னதானம் வழங்கப்படுகிறது.



அமைவிடம்

சேலம் – ஈரோடு வழித்தடத்தில் சேலத்திலிருந்து 34 கி.மீ. தொலைவில் உள்ள சங்ககிரியிலிருந்து வடக்கில் 4 கி.மீ. தொலைவில் உள்ள ஒருக்காமலையின் மேல்பகுதி உள்ளது. சங்ககிரி ரயில் நிலையத்திலிருந்து 6 கி.மீ. தொலைவில் உள்ளது. இத்திருக்கோயிலுக்கு சேலம் புறவழிச்சாலையிலிருந்து தார்சாலை மலை உச்சி வரையிலும் அமைக்கப்பட்டுள்ளது.

தொடர்பு முகவரி

செயல் அலுவலர்
அருள்மிகு வரதராஜப்பெருமாள் திருக்கோயில்
ஒருக்காமலை, சங்ககிரி வட்டம், சேலம் – 637 103.

அருள்மிகு சென்னகேசவப்பெருமாள் திருக்கோயில்

சங்ககிரி.

இறைவன்	: சென்னகேசவப்பெருமாள்
இறைவி	: செண்பகவள்ளி தாயார்
ஆகமம்	: ஸ்ரீ வைகானச ஆகமம்
தீர்த்தம்	: ராமர் சுனை

தலச்சிறப்பு

சங்ககிரியில் உள்ள சங்ககிரி மலையில் 800 மீட்டர் உயரங்கொண்ட மலையின் உச்சியில் அமைந்துள்ளது இத்திருக்கோயில். வளைந்து வளைந்து செல்லும் 2000 படிகளைக் கடந்து திருக்கோயிலை அடையலாம்.

ஏழு திருச்சுற்றுக்களை உடைய மலைக்கோட்டையில் 32 தீர்த்தங்கள் உள்ளன. கோட்டையைச் சுற்றிலும் எட்டு ஆஞ்சநேயர் திருக்கோயில்கள் உள்ளன. அவர்களில் வீர ஆஞ்சநேயரும், குகை ஆஞ்சநேயரும் பிரசித்தி பெற்றவர்கள். மற்றவர்கள் கருடமுகர், வரமுகர், வாயுபுத்திரர், ராவண சம்காரர், வரசித்தி ஆஞ்சநேயர், நாகப்பாயில் ஆஞ்சநேயர் என்று கூறுவர்.

மலைமேல் கோயில் கொண்டுள்ள 'சென்னகேசவர்', மக்களைப் பெரிதும் கவர்ந்தவர் ஆவார். நின்ற கோலத்தில் ஸ்ரீதேவி,

பூதேவியுடன் சேவை சாதிக்கிறார். சங்ககிரி சித்திரைப் பெருவிழாவில் தேரில் உலா வருகிறார். பெரும் அளவில் சேவார்த்திகள் கூடுவர்.

கௌண்டில்ய முனிவரால் திருநிலைப்படுத்தப்பட்டது. தொல்லியல் துறை பாதுகாப்பில் உள்ளது.

திருவிழாக்கள்

சித்திரைத் தேர்த்திருவிழா

பூஜை, நடை திறந்திருக்கும் நேரம்
காலை 10.00 மணி – பகல் 1.00 மணி
உச்சிகால பூஜை – பகல் 12.00 மணி
ஒரு கால பூஜை நடைபெறுகிறது.

அமைவிடம்

சேலம் மாநகரிலிருந்து 34 கி.மீ தொலைவில் உள்ள சங்ககிரியில் சங்ககிரி மலை உச்சியில் அமைந்துள்ளது.

தொடர்பு முகவரி

செயல் அலுவலர்
அருள்மிகு சென்னகேசவப்பெருமாள் திருக்கோயில்
சங்ககிரி நகர் மற்றும் வட்டம்,
சேலம் மாவட்டம் – 637 103.

அருள்மிகு செல்லாண்டியம்மன், மாரியம்மன் திருக்கோயில்

வைகுந்தம், சங்ககிரி.

இறைவி : செல்லாண்டியம்மன், மாரியம்மன்

தலச்சிறப்பு

'அறுவர்க்கிளைய நங்கை', 'குருடைக் கானகம் உகந்த காளி' என்று காளியை இளங்கோவடிகள் சிறப்பித்துள்ளார். அந்த மாகாளியே ஒவ்வோர் தலங்களிலும் மக்களின் விருப்பத்திற்கேற்ப பல்வேறு பெயர்கள் கொண்டு எழுந்தருளியுள்ளாள்.

செல்லியம்மனும் அவளே! செய்லீசுவரியும் அவளே! செல்லாண்டியம்மனும் அவளே! சொக்க நாச்சியம்மன், அழகு நாச்சியம்மன் எனும் திருநாமங்களோடும் பல கோயில்களில் எழுந்தருளியுள்ளவள் அவளே...பீடையை, துன்பங்களை அறுப்பவளே பீடாஹாரி! என அழைக்கப்பட்டு, பிடாரியம்மன் என்று பெயர் கொண்டு விட்டார்.

கொடியோரை ஒறுத்து நல்லோரைக் காத்திட, பல்வேறு ஆயுதங்கள் தாங்கியபடி, எட்டு கரங்கள், நான்கு கரங்கள் என வெவ்வேறு கோலம் கொள்பவள் அவள். பகைவர்களை அழித்திடும் பத்ரகாளியும் அவளே!

500 ஆண்டுகளுக்கு முற்பட்ட திருக்கோயில். கொங்குச் சோழர் காலத்தில் கட்டப்பட்டதாக கருதப்படுகிறது.

தனிச்சிறப்பு

திருக்கோயில் அருகில் உள்ள ஏரியில் நீராடிவிட்டு உடல் முழுதும் சேற்றை அள்ளிப் பூசிக்கொண்டு, 'சேத்துமுட்டி' தூக்கி, தங்கள் நேர்த்திக் கடனை நிறைவேற்றும் வழக்கம் இக்கோயிலில் மட்டுமே உள்ளது குறிப்பிடத்தக்கது. இதனால் சேத்துமுட்டி செல்லாண்டியம்மன் என சிறப்பு பெயரால் அழைக்கப்படுகிறது.

திருவிழாக்கள்

ஐப்பசியில் சேத்துமுட்டி திருவிழா சிறப்பாக நடைபெறுகிறது.

பூஜை, நடை திறந்திருக்கும் நேரம்
காலை 6.00 மணி – பகல் 2.00 மணி
மாலை 4.00 மணி – இரவு 9.00 மணி
ஒருகால பூஜை நடைபெறுகிறது.

அமைவிடம்

சேலம் – சங்ககிரி தேசிய நெடுஞ்சாலையில் சேலத்திலிருந்து 28 கி.மீ. தொலைவில் உள்ள வைகுந்தத்தில் இத்திருக்கோயில் அமைந்துள்ளது.

தொடர்பு முகவரி
செயல் அலுவலர்
அருள்மிகு செல்லாண்டியம்மன், மாரியம்மன் திருக்கோயில்
வைகுந்தம், சங்ககிரி வட்டம், சேலம் மாவட்டம் – 637 108.

அருள்மிகு கோதண்டராமசுவாமி திருக்கோயில்

அயோத்தியாப்பட்டணம், சேலம்.

இறைவன் : கோதண்டராமர்
இறைவி : சீதா பிராட்டி
ஆகமம் : பாஞ்சராத்ர ஆகமம்

புராணச்சிறப்பு

இத்திருக்கோயில் சுமார் 700 ஆண்டுகளுக்கு முன்பு திருமலை நாயக்கரால் கட்டப்பட்டது. ஸ்ரீ இராமபிரான் சீதையை மீட்க இலங்கை சென்று இராவணனை வதம் செய்த பிறகு தனது மனைவியை மீட்டுக் கொண்டு விமானத்தில் அயோத்தி திரும்பிச் சென்றார். அவ்வாறு இலங்கையில் இருந்து போகும் வழியில் அயோத்தியாப்பட்டணம் என்ற கிராமத்தில் முனிவர் பரத்துவாசர் ஆசிரமம் இருந்ததாகவும், முனிவர் கேட்டுக்கொண்டதின் பேரில் இராமர் இறங்கி முனிவரைக் காண்பது யான்பெறும் பேறு என்று கூறி ஒரு நாள் அயோத்தியாப்பட்டணத்தில் தங்கிப் போனதாக கூறப்படுகிறது.

தலச்சிறப்பு

தமிழகத்திலேயே ஸ்ரீ ராமர் பட்டாபிஷேகத்துடன் காட்சிக் கொடுப்பதும் சீதாதேவியார் ஸ்ரீராமன் இடது பக்கம் அமர்ந்திருப்பதும், பத்மாசனத்தில் அமர்ந்துள்ள காட்சி சிறப்பானது ஆகும். தமிழ்நாட்டில் எங்கும் காணப்படாத அமைப்பு இக்கோயிலில் மட்டும் தான் உள்ளது.

சூரிய பூஜை

சித்ரா பௌர்ணமி தினத்தில் காலை 6.00 மணிக்கு கோயிலின் கிழக்குப் பக்கத்தில் உள்ள துவாரத்தில் சூரிய ஒளி சென்று கோயில் மண்டபத்திற்கு முன் உள்ள கருடாழ்வார் சன்னதியின் கிழக்குப்புறம் உள்ள துவாரத்தின் வழியாக சென்று மூலஸ்தானத்தில் உள்ள பட்டாபிஷேக ஸ்ரீ ராமர் நெற்றியின் மீது விழும் என்பது இத்திருக்கோயிலின் சிறப்பம்சம் ஆகும்.

சிற்ப சிறப்பம்சங்கள்

இக்கோயிலின் மகா மண்டபத்தை மொத்தம் 28 தூண்கள் அழகு செய்கின்றன. இத்தூண்களில் இக்கோயில் மண்டபத்தை கட்டிய திருமலை நாயக்கர் சிலையும், அவர் மனைவியின் சிலையும் இராமரை வணங்கிய நிலையில் உள்ளன மற்றும் கோதண்டராமர் சிலையும், சீதையின் சிலையும், இலக்குவணன் சிலையும் நின்றபடி மண்டபத்தில் உள்ளன. வாயிலில் இருபக்கங்களிலும் துவார பாலகர்களின் சிலை மிக உயரமாக கம்பீரமாக காட்சி தருகின்றன.

இம்மண்டபத்தின் 4 பக்கங்களிலும் இசைத்தூண்கள் உள்ளன. ஒரு பெரிய தூணைச் சுற்றி மெல்லிய கம்பங்கள் கொண்ட அமைப்பே இசைத்தூண்களாகும். இந்தக் கம்பங்களை ஒரு உலோகத் தடியால் கட்டினால் ஏழு இசைகளும் ஒலிக்கும். இதேபோல் மதுரை மீனாட்சி திருக்கோயிலிலும், கூடலழகர் திருக்கோயிலிலும், சுசீந்திரம் கோயிலிலும் இசைத்தூண்களைக் காணலாம்.

தசாவதாரக் காட்சிகள் ஒரே தூணில் செதுக்கப்பட்டுள்ளது. நரசிம்ம அவதாரத்தில்

இரண்யகசிபுவை தன் மடிமீது வைத்து தன் இருகரங்களாலும் நெஞ்சை பிளக்கக்கூடிய சிற்பக்காட்சிகள் சிறப்பானதாகும். யோக நரசிம்மர், லட்சுமி நரசிம்மர், சிற்பங்களும் உள்ளன. இதேபோல், உலகளந்த பெருமாளின் சிற்பங்களும் மிகச் சிறப்பாக செதுக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

அக்காலத்தில் இருந்ததாகக் கூறப்படும் "யாளி" என்ற மிருகத்தின் சிற்பங்களும், மண்டபத்தின் வலது, இடது பக்கத்தில் உள்ள படிநிலைமையின் இருபக்கங்களிலும் உள்ள குதிரை வீரன் சிற்பங்களும் மிக வேலை நுணுக்கங்களுடனும், அழகாகவும், செதுக்கப்பட்டிருப்பதை இத்திருக்கோயிலில் காணலாம். யாளியின் கடிவாளத்தில் ஒரு சிறிய துவாரம் போடப்பட்டுள்ளது என்பதும் மிகச்சிறப்பு அம்சமாகும்.

திருவிழாக்கள்

ராமநவமி தேர்த்திருவிழா, புரட்டாசி சனிக்கிழமை உற்சவம், ஆஞ்சநேயர் ஜெயந்தி, வைகுண்ட ஏகாதசி, விநாயகர் சதுர்த்தி.

பூஜை, நடை திறந்திருக்கும் நேரம்

காலை 10.00 மணி – பகல் 1.00 மணி

காலசந்தி – காலை 9.00 மணி

ஒரு கால பூஜை நடைபெறுகிறது.

அமைவிடம்

சேலத்தில் இருந்து கிழக்கே அரூர் நெடுஞ்சாலையில் சுமார் 12 கி.மீ. தொலைவில் உள்ள அயோத்தியாப்பட்டணத்தில் அருள்மிகு கோதண்டராமசுவாமி திருக்கோயில் உள்ளது. சேலத்திலிருந்து பேருந்து வசதியுள்ளது.

தொடர்பு முகவரி

செயல் அலுவலர்

அருள்மிகு கோதண்டராமசுவாமி திருக்கோயில்

அயோத்தியாப்பட்டணம், வாழப்பாடி வட்டம் – 636 103.

அருள்மிகு சித்தேஸ்வரசுவாமி திருக்கோயில்

கஞ்சமலை.

இறைவன்	: காலங்கி சித்தர்
தலவிருட்சம்	: வில்வம்
தீர்த்தம்	: காந்த தீர்த்தம்
ஆகமம்	: காமீக ஆகமம்
இசைக்கருவி	: மேளம், நாதஸ்வரம்

புராணச்சிறப்பு

சுமார் எட்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் திருமூலர் எழுதிய திருமந்திர நூலில் பாடப்பெற்ற கஞ்சமலை சித்தர் என்ற காலங்கி சித்தர் அமர்ந்து அருள்பாலித்துவரும் திருக்கோயிலாகும். இத்திருக்கோயில் அமைந்துள்ள கஞ்சமலையில் கருநெல்லிக் கனி கிடைத்தது என வரலாற்று நூல் கூறுகிறது. மேலும் இக்கரு நெல்லிக்கனியை தகடூரை ஆண்ட அதியமான் அவ்வைக்கு கொடுத்ததாகவும் வரலாறு. இம்மலையில் கிடைத்தற்கரிய சஞ்சீவி மூலிகை உள்ளதாகவும் இம்மூலிகையால் முதுமைமாறி இளமை திரும்பியதாகவும் வரலாறு. இத்தலத்தில் வற்றாத ஜீவநதி பொன்னி நீர் ஓடையும் பலமூலிகை குணங்கள், தாது குணங்கள் நிரம்பிய பத்து வகை தீர்த்த குளங்கள் உள்ளன. இத்தீர்த்த குளத்தில் குளிப்பதனால் உடலில் உள்ள சரும நோய்கள் மற்றும் மரு, கட்டி முதலானவைகள் நீங்கி விடுகின்றன. இங்கு கிரிவலம் வந்தால் தீராத நோய்கள் தீரும் என்பது ஐதீகம்.

தலச்சிறப்புகள்

இத்தலத்தில் அமர்ந்துள்ள மூர்த்தி இளம் யோகியின் உருவத்தில் சின் முத்திரையில் காட்சி தருகிறார். இத்திருக்கோயில் பூஜையின் போது சுவாமிக்கு சாத்துப்படி செய்யப்படும் சந்தனம் இங்குள்ள மாலைக்கட்டிகளால் அரைக்கப்படும் சந்தனமே சாத்துப்படி செய்யப்படுகிறது. இதுபோன்ற பூஜையின் போது குருக்களை யாரும் தொட்டுவிடாத வண்ணம் ஈரத் துணியுடன் மூன்று நாட்கள் சுமார் மூன்று கிலோ சந்தனக் கட்டையை அரைத்து எடுக்கப்படும் சந்தனமே சாத்தப்படுகிறது. இக்கோயிலுக்குள் சித்தர் சந்நிதியைத்தவிர விநாயகர் மற்றும் சுப்ரமணி சந்நதிகளும் உள்ளன. மேலும் மலையடிவாரத்திலிருந்து சற்று தூரம் நடந்தால் முருகன் கோயிலும் உள்ளது.

தனிச்சிறப்புகள்

இக்கோயிலுக்கு அமாவாசையன்று பக்தர்கள் ஏராளமாக வருகின்றனர். 'அமாவாசை கோயில்' என்ற பெயர்கூட இதற்கு உண்டு. தீராத நோயுள்ளவர்கள் அன்று சித்தேஸ்வரரை வணங்கி கோயிலிலுள்ள தீர்த்தத்தை தலையில் தெளித்து நலம்பெற வேண்டுவர். பவுர்ணமியன்று பக்தர்களும் மாலை 5.00 மணியிலிருந்து கிரிவலம் துவங்குகிறார்கள். 18 கி.மீ. சுற்றளவுள்ள மலையில் சித்தேஸ்வரர் நாமம் சொல்லி சுற்றி வருகின்றனர். இரவு வேளையில் சுற்றுச்சூழல் மாசில்லாத இம்மலையைச் சுற்றி வருவதன் மூலம் மூலிகைக்காற்று பற்று பல நோய்கள் தீருவதாக ஐதீகம்.

முக்கிய திருவிழாக்கள்

முக்கிய திருவிழா சித்தர் சிறப்பு திருவிழா. இத்திருவிழாவின் போது சுவாமிக்கு சிறப்பு சந்தனக் காப்பு செய்யப்படும். சுற்று வட்டார கிராமங்களில் இருந்து தங்களது விளை நிலங்களில் விளைவிக்கப்படும் நெல், ராகி, மொச்சை, முதலானவைகளை கொண்டு களி என்று அழைக்கப்படும் பொங்கல் நைவேத்தியம் சுவாமிக்கு படைக்கப்பட்டு பூஜை செய்யப்பட்டு பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படுகிறது. இத்திருவிழாவின் போது அக்னி குண்டம் இறங்குதல் முதலான நிகழ்ச்சிகள் நடைபெறுவது வழக்கம்.

மாதம் மற்றும் வருடாந்திர உற்சவங்கள் குறித்த விவரம்

பிரதிமாதம் அமாவாசை விழா சிறப்பாக நடைபெறுகிறது.

பூஜை, நடை திறந்திருக்கும் நேரம்
காலை **6.30** மணி – பகல் **1.00** மணி
மாலை **4.00** மணி – இரவு **8.00** மணி
ஒரு கால பூஜை நடைபெறுகிறது.
உச்சிகால பூஜை – பகல் **1.00** மணி

வருடாந்திர உற்சவமாக திருவாதிரை, சிவன்ராத்திரி, சித்தர் சிறப்பு, ஆடி 18 முதலானவைகள் நடைபெறுகிறது.

அன்னதானம்

இத்திருக்கோயிலில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் திருக்கோயில் அன்னதானத்திட்டம் மூலம் தினமும் 50 நபர்களுக்கு அன்னதானம் வழங்கப்படுகிறது.

அமைவிடம்

சேலம் மாநகருக்கு மேற்கே 16 கி.மீ. தொலைவில் கஞ்சமலை அடிவாரத்தில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற பிரார்த்தனை தலமாகும்.

பயண மார்க்கம்

சேலம் புதிய பேருந்து நிலையத்திலிருந்து புறவழிபாதை வழியாக திருமகள் புறவழி சாலைக்கு மேற்கே சுமார் 10 கி.மீ. தொலைவில் இளம்பிள்ளை பேரூராட்சிக்கு செல்லும் வழியில் அமைந்துள்ளது. சேலம் புதிய மற்றும் பழைய பேருந்து நிலையத்திலிருந்து ஆட்டோ மூலம் சென்று வர வசதி உண்டு.

தொடர்பு முகவரி

செயல் அலுவலர்
அருள்மிகு சித்தேஸ்வர சுவாமி திருக்கோயில்
கஞ்சமலை – **637 502.** சேலம் வட்டம்.
தொலைபேசி எண்:**0427 – 2491389**

காலங்கி சித்தர் கற்சிலையாக சின்முத்திரையில் அமர்ந்து அருள் பாலித்துவருவது வேறெங்கும் காணக்கிடைக்காத அருங்காட்சியாகும்.

அருள்மிகு பத்ரகாளியம்மன் திருக்கோயில்

மேச்சேரி.

இறைவி : அருள்மிகு பத்ரகாளியம்மன்
ஆகமம் : சாத்தம்

தலச்சிறப்பு

இத்திருக்கோயில் சுமார் 800 ஆண்டுகளுக்கு முன்னர் மன்னர்களால் கட்டப்பட்டதாக செவி வழிச் செய்தியாக அறிய முடிகிறது. மேச்சேரி என்னும் கிராமம் தெளிந்த நீர் நிறைந்த ஏரியுடன் கூடிய பசுமையான புல்வெளி நிறைந்த பகுதியாக இருந்ததால் இங்கு புல்வெளிகள் அதிகம் காணப்பட்டன. இந்த புல்வெளியில் ஆடு, மாடு போன்ற கால்நடைகளுக்கு மேய்ச்சல் நிலமாகவும் அமைந்துள்ளது. எனவே இக்கிராமம் மேச்சேரி (மேய்ச்சல்+ ஏரி) எனப் பெயர் பெற்றது.

இந்த புல்வெளிகளில் மேய்ந்து விட்டு பண்ணைகளுக்குத் திரும்பும் பசுமாடுகள் ஏராளமாக பால் கொடுப்பது வழக்கம். இவ்வாறு ஏரிப்பகுதியில் புல்மேய்ந்து திரும்பிய பசுக்களில் ஒன்று மட்டும் போதிய அளவில் பால் கரக்காததை உணர்ந்த பக்தர் ஒருவர் உண்மையை அறிய இப்பசுமாட்டை தொடர்ந்து கண்காணித்தார். புல் மேய்ந்து மாலையில் வீடு திரும்பும் வேளையில் அப்பசு மட்டும் கள்ளிச்செடிகள் அடர்ந்த ஒரு புதருக்கு அருகாமையில் நிற்பதையும், அப்போது அதன் மடியிலிருந்து தானாக பால் சுரந்து புதருக்குள் ஊற்றுவதையும் கண்டார். உடனே பசுவை விரட்டி விட்டு புதருக்குள் பார்த்தபோது அங்கே சுயம்பு வடிவில் ஒரு விக்ரகம் இருந்தது. அப்போது வானத்தில் 'அசரீரி' தோன்றி அவ்விக்கிரகத்தை அதே இடத்தில் பிரதிஷ்டை செய்து பத்ரகாளி என்னும் தன்னை வழிபடுகின்ற அனைவருக்கும் நான் இங்கு எப்போதும் நிலையாக வீற்றிருந்து அருள்புரிவேன் என்று 'அசரீரி' கேட்டதாகச் செவிவழிச் செய்தி கூறுகிறது.

தனிச்சிறப்புகள்

'பத்ரகாளி' பத்ரம் என்றால் மங்களம், காளி என்றால் காப்பது என்று பொருள். மக்களின் வாழ்வை எப்போதும் மங்களத்தோடு காப்பாள் என்றும் பொருள் கொள்ளலாம். இத்திருக்கோயிலின் கற்பகிரகத்தில் ஒளிர்ந்துகொண்டிருக்கும் நந்தா விளக்கு காலங்காலமாக அணையாமல் பாதுகாக்கப்பட்டு ஒளிவீசி வருவது இத்தலத்தின் தனிச்சிறப்பாகும்.

ஏவல், பில்லி, சூனியம், தீய ஆவிகள் முதலான எதிர்மறை சக்திகளால் பாதிக்கப்படுபவர்கள் அம்மனை தரிசித்து நல்ல பலன் கிடைக்கப்பெறுவார்கள் என்பது ஐதீகம். இத்திருக்கோயிலின் நான்கு திசைகளிலும் நெடிதுயர்ந்து அமைந்துள்ள கோபுர வாயில்களில் வடதிசையை வானளாவிய இராஜகோபுரம் அமைந்துள்ளது.

திருவிழாக்கள்

மாசித்தேரோட்டம் பெருவிழாவாக வெகுவிமர்சையாக நடைபெறும்.

பூஜை, நடை திறந்திருக்கும் நேரம்
காலை 5.00 மணி – இரவு 8.00 மணி
இரண்டுகால பூஜை நடைபெறுகிறது.
காலசந்தி – காலை 6.00 மணி
சாயரட்சை – மாலை 5.00 மணி

அன்னதானம்

இத்திருக்கோயிலில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் திருக்கோயில் அன்னதானத்திட்டம் மூலம் தினமும் 100 நபர்களுக்கு அன்னதானம் வழங்கப்படுகிறது.

அமைவிடம்

சேலம் – மேட்டூர் அணை நெடுஞ்சாலையில் சேலத்தில் இருந்து 33 கி.மீ. தூரத்தில், புகழ்மிக்க காவிரியின் கீழ்த்திசையில் மேட்டூர் அணையிலிருந்து 20 கி.மீ. தூரத்தில் மேச்சேரியில் இத்திருக்கோயில் அமைந்துள்ளது.

தொடர்பு முகவரி

செயல் அலுவலர்
அருள்மிகு பத்ரகாளியம்மன் திருக்கோயில்
மேச்சேரி, மேட்டூர் வட்டம், சேலம் மாவட்டம் – 636 453.
தொலைபேசி : 04292–278133
மின்னஞ்சல் : www.mecheribadrakaliamman.tinfor.in

அருள்மிகு காசிவிஸ்வநாதர் திருக்கோயில்

வாழப்பாடி.

இறைவன் : அருள்மிகு காசிவிஸ்வநாதர்
இறைவி : காசிவிசாலாட்சி

தலச்சிறப்பு

மைசூர் அரசர் ஒருவர், அமைச்சரை சிவாலயம் ஒன்றை ஏத்தாப்பூரில் எழுப்புமாறு பணித்தார். கோயில் கட்டும்போது குளம் வெட்டுகையில், திருமாலின் கற்சிலைகளும் கிடைத்தனவாம். எனவே பெருமாள் கோயிலையும் எழுப்பினார் அமைச்சர். அதே நேரத்து மன்னரின் கோபத்திற்கு ஆளாகுவோம் என அஞ்சி அருகில் உள்ள ஊரில் ஒளிந்து கொண்டாராம். அந்த இடமே வாழப்பாடி.

புனித கங்கைக் கரையிலிருந்து கொண்டு வரப்பட்ட பாணலிங்கத்தை மூலவராகக் கொண்டு காசிவிசுவநாதர் திருக்கோயில் அமைந்துள்ளது. விசாலாட்சி அம்மன் நின்ற கோலத்தில் எழுந்தருளியுள்ளார்.

சிவராத்திரி நாளிலும், அதனையடுத்த அமாவாசை நாளிலும், கருவறையில் சூரிய ஒளிக்கதிர்கள், மூலவரைத் தழுவும் காட்சி தனிச்சிறப்பு ஆகும்.

திருவிழாக்கள்

மாசிமாதம் சிவராத்திரி

பூஜை, நடை திறந்திருக்கும் நேரம்
காலை 7.00 மணி – பகல் 12.00 மணி
மாலை 5.00 மணி – இரவு 8.00 மணி
இரண்டு கால பூஜை நடைபெறுகிறது.
காலசந்தி – காலை 8.00 மணி
சாயரட்சை – மாலை 6.00 மணி

அமைவிடம்

சேலம் ஆத்தூர் நெடுஞ்சாலையில், 28 கி.மீ. தொலைவில் மணிமுத்தாறு நதிக்கரையில் உள்ளது. வாழப்பாடி–தம்மம்பட்டி சாலையில் உள்ள திருக்கோயில்.

தொடர்பு முகவரி

செயல் அலுவலர்
அருள்மிகு காசிவிஸ்வநாதர் திருக்கோயில்
வாழப்பாடி வட்டம். சேலம் மாவட்டம்.
தொலைபேசி எண் : 04292 – 241400

பஞ்சாயதன பூஜா மூர்த்தங்கள்

பாணலிங்கம்	சிவன்
ஸ்வர்ணரேகாசிலா	அம்பிகை
சாளக்ராமம்	விஷ்ணு
ஸ்படிகம்	சூரியன்
சோணபத்ரம்	விநாயகர்

அருள்மிகு லட்சுமி நரசிம்ம சுவாமி திருக்கோயில்

நங்கவள்ளி, மேட்டூர்.

இறைவன் : நரசிம்ம சுவாமி
இறைவி : லட்சுமி

தலச்சிறப்பு

சுமார் 1100 ஆண்டுகளுக்கு முன் நங்கவள்ளி என்ற கிராமம் காடுகள் அடர்ந்த பகுதியாக இருந்தது. அப்போது இக்கிராமத்திற்கு அருகில் உள்ள அங்கிரெட்டியூர் என்னும் கிராமத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் தயிர் கலயங்கள் உள்ள ஒரு கூடையைத் தலையில் சுமந்து கொண்டு அடர்ந்த காட்டுப் பகுதிக்குள் சென்று கொண்டு இருந்தாள். அப்போது அவளது கூடை வழக்கத்தை விட மிகவும் கனமாக இருந்தமையால் அதனை இறக்கிப்பார்க்கும் போது அதில் சாளக்கிராம வடிவத்தில் ஓர் குழவிக்கல் இருந்தது. அது ஏதோ சாதாரணக்கல் என நினைத்து கீழே எறிந்து விட்டு தொடர்ந்து நடந்தாள். மறுபடியும் மறுபடியும் இம்மாதிரி மூன்று முறை கூடை கனமாக இருக்கவே கல்லை தூக்கி எறிந்து

விட்டு நடந்தாள். அப்போது எதிரே வந்த மற்றொரு பெண், நீ கீழே தூக்கி எறிந்த அந்தக் கல் சாதாரணமானது அல்ல, சுயம்பு வடிவ நரசிம்மசுவாமி என்றும் அதனை அங்குள்ள ஒரு புற்றின் பக்கம் ஸ்தாபித்து வழிபடும்படியும் அறிவுறுத்தி மறைந்தாள். இதன்படி இச்சுயம்பு வடிவம் அக்கிராமத்தின் மையத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டு கீற்று

கொட்டகை போடப்பட்டு பூஜைகளுடன் வழிபாடு செய்யப்பட்டு வந்தது. இத்திருக்கோயில் அமைந்துள்ள நங்கைவாளி என்னும் கிராமம் தற்போது பெயர் மருவி 'நங்கவள்ளி' என்று அழைக்கப்படுகிறது.

கட்டப்பட்ட காலம்

கி.பி. 13ம் நூற்றாண்டில் விஜய மன்னர் ஆட்சி காலத்தில் இவ்விடத்தில் கருவறை கட்டப்பட்டதாகவும் பின்னர், சேர, சோழ, பாண்டிய மன்னர்களால் அபிவிருத்தி செய்யப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

திருவிழாக்கள்

1. சித்திரை திருநாள்
2. கோகுலாஷ்டமி
3. விநாயகர் சதுர்த்தி
4. விஜயதசமி
5. நவராத்திரி
6. ஆயுத பூஜை
7. வைகுண்ட ஏகாதசி
8. புரட்டாசி உற்சவம்
9. துவாதசி உற்சவம்
10. யுகாதி உற்சவம்
11. திருக்கார்த்திகை
12. பங்குனி தேர்த்திருவிழா

நடை திறந்திருக்கும் நேரம்

காலை 6.00 மணி – பகல் 1.00 மணி
மாலை 4.00 மணி – இரவு 8.00 மணி
காலசந்தி – காலை 9.00 மணி
சாயரட்சை – 5.00 மணி
இரண்டுகால பூஜை நடைபெறுகிறது.

அன்னதானம்

இத்திருக்கோயிலில் மாண்புமிகு தமிழக முதல்வரின் திருக்கோயில் அன்னதானத்திட்டம் மூலம் தினமும் 30 நபர்களுக்கு கூட்டு அல்லது பொரியல், சாம்பார், ரசம், மோர், ஊறுகாயுடன் அன்னதானம் வழங்கப்படுகிறது.

அமைவிடம்

சேலம் புதிய பேருந்து நிலையத்தில் இருந்து இரும்பாலை, தாரமங்கலம் வழியாக நங்கவள்ளி செல்ல வேண்டும். சேலம் புதிய பேருந்து நிலையத்தில் இருந்து நங்கவள்ளி 36 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. இத்திருக்கோயில் நங்கவள்ளி பேருந்து நிலையத்திற்கு மிக அருகாமையில் அமைந்துள்ளது.

தொடர்பு முகவரி

செயல் அலுவலர்
அருள்மிகு லட்சுமி நரசிம்ம சுவாமி திருக்கோயில்
நங்கவள்ளி, மேட்டூர் வட்டம்,
சேலம் மாவட்டம் – 636 454.

அருள்மிகு பாலசுப்ரமணியசுவாமி திருக்கோயில்

வடசென்னிமலை, ஆத்தூர்.

இறைவன்	: அருள்மிகு பாலசுப்பிரமணியர்
இறைவி	: வள்ளி, தெய்வானை
தலவிருட்சம்	: பாலை
ஆகமம்	: காரணம்

தலவரலாறு

குன்று ஒன்றின்மீது, பேரொளியோடு தோன்றிய ஒரு அழகுச்சிறுவன் திடீரென மறைந்ததை, அங்கு ஆடு மேய்த்துக்கொண்டிருந்த சிறுவர்கள் ஊராரிடம் கூறினர். "குன்று இருக்குமெல்லாம் குமரன்" என்று வழங்கப்படுவதற்கேற்ப, அந்தக் குன்றின் மேல் குமரனுக்கு ஒரு திருக்கோயில் உருவானது. அதுதான் வடசென்னிமலை.

கருவறை சுயம்பு மூர்த்தியாக முருகன், வள்ளி, தெய்வானை அரூப நிலையில் உள்ளனர். அதனருகே குழந்தை உருவில் பாலசுப்ரமணியர் வள்ளி, தெய்வானை சிலைகள் அமைத்து திருக்கோயில் எழுப்பியுள்ளனர்.

தொட்டில் கட்டுதல்

முருகப்பெருமானிடம் மக்கள் வேண்டிக்கொள்வதை தவிர, இடும்பன் கோயில் அருகில், ஔவையார் சிலைக்கு அருகில் உள்ள மரத்தில் தொட்டில் கட்டிவிட்டு, மகப்பேறு வேண்டி பிரார்த்திக்கின்றனர்.

திருவிழாக்கள்

பங்குனி உத்திரம், வைகாசி விசாகம், ஆடிக்கிருத்திகை, ஆடி அமாவாசை, ஆடி 18, கந்தசஷ்டி, தைப்பூசம், கார்த்திகை தீபம்

பூஜை, நடை திறந்திருக்கும் நேரம்
காலை 7.00 மணி – பகல் 12.30 மணி
மாலை 5.00 மணி – இரவு 8.30 மணி
நான்கு கால பூஜை நடைபெறுகிறது.
காலசந்தி – காலை 7.30 மணி
உச்சிகாலம் – மதியம் 12.00 மணி
சாயரட்சை – மாலை 5.30 மணி
இராக்காலபூஜை – இரவு 8.00 மணி

அன்னதானம்

இத்திருக்கோயிலில் மாண்புமிகு தமிழக முதல்வரின் அன்னதானத் திட்டம் மூலம் தினமும் 30 நபர்களுக்கு அன்னதானம் வழங்கப்படுகிறது.

அமைவிடம்

சேலத்திற்கு கிழக்கே 60 கி.மீ. தொலைவில் ஆத்தூர் தலைவாசல் வழித்தடத்தில் உள்ள காட்டுக்கோட்டையிலிருந்து 2 கி.மீ. தெற்கே வடசென்னிமலையில் இத்திருக்கோயில் அமைந்துள்ளது.

தொடர்பு முகவரி

செயல் அலுவலர்
அருள்மிகு பாலசுப்ரமணியசுவாமி திருக்கோயில்
வடசென்னிமலை, ஆத்தூர் வட்டம்,
சேலம் மாவட்டம் – 636 121.
தொலைபேசி எண் : 04282 235100 (அலுவலகம்)
04282 292401 (மலைக்கோயில்)

அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில்

இளம்பிள்ளை

இறைவி : மாரியம்மன்
ஆகமம் : சிவ ஆகமம்

தலச்சிறப்பு

மூலன் என்னும் முனிவர், முதியவரான தன் சீடனுடன், மூலிகைகள் சேகரிக்க கஞ்சமலை வந்தார். உடலை இளமையாக்கும் அரிய மூலிகைகளைச் சேகரிக்க வனத்திற்குச் சென்றனர். சீடன் குருநாதருக்காக உணவு சமைத்தபோது, அருகில் கிடந்த குச்சியால், வெந்து கொண்டிருந்த சாதத்தைக் கிளற, அது கருமை நிறமாகியது. கருகிப்போன உணவை குருநாதருக்கு படைக்க முடியாதென, தானே அதனை உண்ண முதியவர் உருமாறி, அவர் 'இளம்பிள்ளை'யாக உருமாறியதால், இத்தலமும் இளம்பிள்ளை என்றே அழைக்கப்படலாயிற்று.

'தொட்டியர்' இனத்து மக்களின் குலதெய்வமாக விளங்கிடும் மாரியம்மன் இங்கே எழுந்தருளியுள்ளாள். ஏரித்தண்ணீரை எடுத்து வந்து எண்ணெய்க்கு பதிலாக விளக்கில் ஊற்றி வெள்ளாவியில் வைத்து வெளுத்த துணியில் 'திரி' திரித்து, மாரியம்மன் முன்னே விளக்கு ஏற்றிய அதிசயம் நிகழ்ந்த திருக்கோயில். அருள்மிகு மாரியம்மன கிழக்கு முகமாக நின்றகோலத்தில் காட்சியளிக்கின்றார்.

திருக்கோயிலின் எதிர்ப்புறம் ஏரியின் மேல்கரையில் அருள்மிகு காளியம்மன் காட்சியளிக்கின்றாள்.

திருவிழாக்கள்

பங்குனித் தேர்த்திருவிழா, அக்னி குண்டம் மாதந்தோறும் பௌர்ணமி பூஜை நடைபெறுகிறது.

நடை திறந்திருக்கும் நேரம்

காலை 6.30 மணி – பகல் 1.00 மணி

மாலை 4.00 மணி – இரவு 8.00 மணி

ஒரு கால பூஜை நடைபெறுகிறது.

உச்சிகாலம் : பகல் 12.00 மணி

அன்னதானம்

இத்திருக்கோயிலில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் திருக்கோயில் அன்னதானத்திட்டம் மூலம் தினமும் 50 நபர்களுக்கு அன்னதானம் வழங்கப்படுகிறது.

அமைவிடம்

சேலம் மாநகருக்கு மேற்கில் 20 கி.மீ. தொலைவில் இளம்பிள்ளை என்ற ஊரில் இத்திருக்கோயில் உள்ளது. சேலம் பழைய பேருந்து நிலையத்திலிருந்து பேருந்து வசதி உள்ளது.

தொடர்பு முகவரி

செயல் அலுவலர்
அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில்
இளம்பிள்ளை, சேலம் வட்டம், சேலம் மாவட்டம் – 637 502.
தொலைபேசி எண் : 0427–2491389

துவார பாலகர்கள் உணர்த்தும் தத்துவம்

- கோவில் வாசலில் இருபுறமும் துவாரபாலகர்கள் வீற்றிருப்பர். துவார பாலகர்களில் ஒருவர் ஆள்காட்டி விரலைக் காட்டி நிற்பார். ஆள்காட்டி விரலைக் காட்டுவதன் தாத்பரியம் ''கடவுள் ஒருவரே'' என்பதை உணர்த்துவதாகும்.
- மற்றொரு துவார பாலகர் கையை விரித்துக் காட்டுவார். அதன் தத்துவம் ''கடவுளைத் தவிர வேறொன்றும் இல்லை'' என்பதை உணர்த்துவதாகும்.

அருள்மிகு தங்கமலை பாலசுப்ரமணிய சுவாமி திருக்கோயில்

தங்கமாபுரிபட்டிணம், மேட்டூர்.

இறைவன் : பாலசுப்ரமணிய சுவாமி

தலச்சிறப்பு

இத்திருக்கோயில் தங்கமலையில் 108 திருப்படிகளைக் கொண்டு அழகுடன் விளங்குகிறது. 18ஆம் படியில் விநாயகரும், 60ஆம் படியில் ஆஞ்சநேயரும் வழித்துணையாக அருள்பாலிக்கின்றனர். இடும்பன் சந்நிதியும் உள்ளது. மேற்கு திசை நோக்கியபடி அமைந்திருப்பதாலும், சனீசுவரர் தனிசந்நிதி கொண்டிருப்பதாலும், பரிகாரத்தலமாக விளங்குகிறது.

பாலசுப்ரமணிய சுவாமி மேற்கு நோக்கி அருள்பாலிக்கிறார். பரிவார தேவதைகளாக தனலட்சுமி, வலம்புரி விநாயகர், விஷ்ணு துர்க்கை, சொர்ணாம்பிகை, தட்சிணாமூர்த்தி ஆகிய சந்நிதிகள் உள்ளன.

திருவிழாக்கள்

பங்குனி உத்திரம், தைப்பூசம், கந்தசஷ்டி, ஆடிகிருத்திகை

பூஜை, நடை திறந்திருக்கும் நேரம்
காலை 7.00 மணி – பகல் 11.00 மணி
மாலை 4.00 மணி – இரவு 7.00 மணி
இரண்டு கால பூஜை நடைபெறுகிறது.
காலசந்தி – காலை 7.30 மணி
சாயரட்சை – மாலை 5.00 மணி

அமைவிடம்

சேலம் – மேட்டூர் நெடுஞ்சாலையில், தெர்மல் பிரிவு சாலையில், தங்கமலை எனும் சிறிய குன்றின் மீது அமைந்துள்ளது. மேட்டூர் அணையிலிருந்து 1 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது.

தொடர்பு முகவரி

செயல் அலுவலர்
அருள்மிகு தங்கமலை பாலசுப்ரமணிய சுவாமி திருக்கோயில்
தங்கமாபுரிபட்டிணம், மேட்டூர் வட்டம், சேலம் மாவட்டம்.

தீபங்கள் பதினாறு

1) தூபம்
2) தீபம்
3) அலங்கார தீபம்
4) நாக தீபம்
5) விருஷப தீபம்
6) புருஷாமிருக தீபம்
7) சூலதீபம்
8) கமடதி (ஆமை) தீபம்
9) கஜ தீபம்
10) வியாக்ர (புலி) தீபம்
11) சிம்ஹ தீபம்
12) துவஜ (கொடி) தீபம்
13) மயூர (மயில்) தீபம்
14) பூரண கும்ப (ஐந்து தட்டு) தீபம்
15) நட்சத்திர தீபம்
16) மேருதீபம்

அருள்மிகு சேர்வராயன் சுவாமி திருக்கோயில்

மஞ்சக்குட்டை, ஏற்காடு.

இறைவன் : சேர்வராய சுவாமி (பெருமாள்)
இறைவி : காவேரியம்மன் (அலமேலு)
ஆகமம் : பாஞ்சராத்ரம்

தலச்சிறப்பு

ஏற்காடு மலையின் உயர்ந்த சிகரமாக விளங்குவது சேர்வராயன் மலையாகும். சேர்வராயன் மலைக்குகையில் அமைந்துள்ள இத்திருக்கோயிலில் ராமசுவாமி எழுந்தருளியுள்ளார். பக்தியில் ஆழ்ந்த சேர்வைக்காரர் ஒருவர் இங்கேயே தங்கி இறைவனுக்குத் தொண்டு செய்து முக்தி பெற்றார். அதனைத் தொடர்ந்து ராமசுவாமியையே மக்கள் 'சேர்வராயன் சுவாமி' என்று அழைக்கலாயினர்.

கருவறையையொட்டி சுரங்கப்பாதை உள்ளது. 3 கி.மீ. தொலைவில் ஒரு திருக்குளம் உள்ளது. திருக்கோயிலுக்கு எதிரே கிணறு ஒன்று உள்ளது. எண்ணியது நிறைவேற சுவாமியை நோக்கி நின்று, பின்புறம் உள்ள கிணற்றில் மூன்று கற்களை ஒன்றன் பின் ஒன்றாக போட்டு விட்டால் அவை நிறைவேறும் என்று நம்பிக்கை நிலவுகிறது.

திருவிழாக்கள்

புரட்டாசி, வைகுண்ட ஏகாதசி, வைகாசி விசாக தேர்த் திருவிழா

பூஜை, நடை திறந்திருக்கும் நேரம்
காலை **6.00** மணி – இரவு **7.00** மணி
ஒருகால பூஜை நடைபெறுகிறது.
காலசந்தி – காலை **7.00** மணி

அமைவிடம்

சேலத்தை அடுத்து உள்ள மலைப்பகுதியை சேர்வராயன் மலை என்றே அழைப்பர். சேலத்திலிருந்து **33** கி.மீ. தொலைவில் உள்ள ஏற்காடு பேருந்து நிலையத்திலிருந்து 4 கி.மீ. தொலைவில் உள்ள கடுக்காய மரம் எனும் இடத்திலிருந்து நடைப்பயணமாக 3 கி.மீ. தூரத்தில் இத்திருக்கோயில் அமைந்துள்ளது.

தொடர்பு முகவரி

செயல் அலுவலர்
அருள்மிகு சேர்வராயன் சுவாமி திருக்கோயில்
மஞ்சக்குட்டை கிராமம், ஏற்காடு வட்டம்,
சேலம் மாவட்டம் – **636 606**
தொலைபேசி எண் : 0427 – 2267845

சப்த தரிசனம்
கோபுரம், விமானம், திருவாயில், பிரகாரம், பலிபீடம், உற்சவர், மூலவர், இவர்களைப் பார்த்து வணங்குவது சப்த தரிசனம் ஆகும்.

பாஞ்ச ராத்ரம்
ஐந்து நாட்களில் ஐந்து ஆயுதங்களின் அம்சமாய்த் தோன்றிய சாண்டில்யர், ஔபசாயநர், மௌஞ்ஜாயநர், கௌசிகர், பரத்வாஜர் என்ற ஐந்து மகரிஷிகளுக்கு எம்பெருமான் உபதேசித்த ஆகமம்.

திருநீற்றின் பெருமை
தரித்த மாத்திரத்தில் எல்லாப் பாவங்களையும் போக்க வல்லதும், ஸ்மரண மாத்திரத்தில் மங்களத்தைச் செய்வதுமான இதற்கு பஸ்மா எனப் பெயருண்டாயிற்று. இது போகம், மோக்ஷம் ஆகிய இரண்டு பலன்களையும் அளிக்கவல்லது.

அருள்மிகு அங்காளம்மன் திருக்கோயில்

கல்வடங்கம்.

இறைவி	:	அங்காளம்மன்
தலவிருட்சம்	:	வேம்பு
ஆகமம்	:	சாக்தம்
இசைக்கருவி	:	பம்பை

தலச்சிறப்பு

150 ஆண்டுகளுக்கு முன்பு, ஆற்றின் கரையோரம் புற்றுவடிவமாகக் கண்டறியப்பட்ட திருக்கோயில்.

நான்கு கரங்களுடன், அக்னி சுவாலையுடன் கூடிய மகுடம் அணிந்தபடி, அமர்ந்த கோலத்தில் காட்சி தருகிறாள் அன்னை. வலது மேற்கரத்தில் நாகத்துடன் கூடிய டமருகமும், இடது முன்கரத்தில் கபாலமும் ஏந்திய கோலம்.

புற்றுவடிவமாக, தானே முளைத்தெழுந்த வடிவாய், மிகுந்த வரப்பிரசாதியாக விளங்குபவள். அங்காளபரமேஸ்வரி, பிரம்ம தேவனின் சிரத்தைக் கொய்த சிவபெருமானின் கரத்தில் ஒட்டிக் கொண்ட பிரம்மகபாலத்தை, மயானக்கொள்ளை என்ற திருவிளையாடலை நடத்தி, அவரது கரத்திலிருந்து பிடுங்கி வீசி எறிந்து, அவருக்கு நேர்ந்த பிரம்மஹத்தி சாபத்தை விலகிடச் செய்தவள் அவளே!

திருவிழாக்கள்

சித்திரையில், 13 நாட்கள் பிரம்மோற்சவம். தமிழ்ப்புத்தாண்டு தேரோட்டத்துடன் நடைபெறும். சிவராத்திரி, ஆருத்ரா தரிசனம்.

பூஜை, நடை திறந்திருக்கும் நேரம்
காலை **6.00** மணி – இரவு **8.00** மணி
மூன்றுகால பூஜை நடைபெறுகிறது.
காலசந்தி – காலை **7.00** மணி
உச்சிகாலம் – பகல் **12.00** மணி
சாயரட்சை – மாலை **6.00** மணி

அன்னதானம்

இத்திருக்கோயிலில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அன்னதானத்திட்டம் மூலம் தினமும் **50** நபர்களுக்கு அன்னதானம் வழங்கப்படுகிறது.

அமைவிடம்

சேலத்திலிருந்து 40 கி.மீ. தொலைவில் உள்ள எடப்பாடியிலிருந்து 12 கி.மீ. தொலைவில் கல்வடங்கம் என்ற ஊரில் இத்திருக்கோயில் அமைந்துள்ளது. சேலம், சங்ககிரி மற்றும் எடப்பாடியிலிருந்து பேருந்து வசதி உள்ளது.

தொடர்பு முகவரி

செயல் அலுவலர்
அருள்மிகு அங்காளம்மன் திருக்கோயில்
கல்வடங்கம், சங்ககிரி வட்டம்,
சேலம் மாவட்டம் – **637 104.**
தொலைபேசி எண். **04283–222936**
இணையதளம் : www.angalammantemple.com

அருள்மிகு குமரகுரு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்

அம்மாபேட்டை, சேலம்.

இறைவன்	: சுப்ரமணிய சுவாமி
இறைவி	: வள்ளி, தெய்வானை
ஆகமம்	: காரணம்
தலவிருட்சம்	: வள்ளி

தலச்சிறப்பு

அழகிய இராஜகோபுரத்துடன் கூடிய திருக்கோயில் வினை தீர்ப்பவராக, குமரகுருவாக, வள்ளி தெய்வானையுடன் காட்சி தருகிறார் சுப்ரமணியசுவாமி.

மூலவர் சந்நிதிக்கு வலப்புறம் ஐயப்பசுவாமி சந்நிதியும், ராஜராஜேசுவரி சந்நிதியும் உள்ளன. திருக்கோயிலில் நுழைவாயிலையொட்டி, வலதுபுறம் சொக்கநாதரும், அருகே மீனாட்சி அம்மனும் உள்ளனர். சுற்றுப்பிரகாரத்தில் கன்னிமூலையில் விநாயகரும் அடுத்து துர்க்கை அம்மன், சனீசுவரர் மற்றும் நவகிரகங்கள் சந்நிதியும் உள்ளன.

இத்திருக்கோயிலின் உபகோயில்களாக இணைந்துள்ள அருள்மிகு சித்திவிநாயகர் திருக்கோயிலும், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலும், திருக்கோயிலுக்கு வெளியே அமைந்துள்ளன.

திருவிழாக்கள்

கந்தர் சஷ்டி விழா, நவராத்திரி உற்சவம் சிறப்பாக நடைபெறுகிறது. மாரியம்மன்கோயிலில் ஆடித்திருவிழா வருட உற்சவமாக கொண்டாடப்படுகிறது. இத்திருக்கோயிலின் சிறப்பாக 63 நாயன்மார்கள் ஐம்பொன்னால் செய்யப்பட்டு பக்தர்களின் பார்வைக்கு வைக்கப்பட்டு தினந்தோறும் அர்ச்சனை செய்யப்பட்டு வருகிறது.

அன்னதானம்

இத்திருக்கோயிலில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அன்னதானத்திட்டம் மூலம் தினமும் 50 நபர்களுக்கு அன்னதானம் வழங்கப்படுகிறது.

பூஜை, நடை திறக்கும் நேரம்

காலை 7.00 மணி – பகல் 12.00 மணி
மாலை 4.00 மணி – இரவு 8.00 மணி
மூன்று கால பூஜை நடைபெறுகிறது.
காலசந்தி – காலை 8.30 மணி
உச்சிகாலம் – பகல் 12.00 மணி
சாயரட்சை – மாலை 6.00 மணி

அமைவிடம்

சேலம் மாநகர் பழைய பேருந்து நிலையத்திலிருந்து கிழக்கே 2 கி.மீ. தொலைவில் உள்ள அம்மாப்பேட்டையில் இத்திருக்கோயில் அமைந்துள்ளது.

தொடர்பு முகவரி

செயல் அலுவலர்
அருள்மிகு குமரகுரு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்
அம்மாப்பேட்டை, சேலம் வட்டம் மற்றும் மாவட்டம்.
தொலைபேசி : 0427–2253550

அருள்மிகு பிரசன்ன நஞ்சுண்டேஸ்வரர் திருக்கோயில்

எடப்பாடி.

இறைவன்	: பிரசன்ன நஞ்சுண்டேஸ்வரர்
இறைவி	: தேவகிரி அம்மன்
தலவிருட்சம்	: வன்னி மரம்
ஆகமம்	: காரண ஆகமம்

தலவரலாறு

சூரியகிரி, சந்திர கிரி எனும் இருமலைகளுக்கு இடையே பாயும் நதியே சரபங்கா. இரு மலைகளுக்கிடையே அமைந்ததால் 'இடைப்பாடி' எனப்பெயர் பெற்றது.

சேர்வராயன் மலைப்பகுதியில் உற்பத்தியான சரயூ நதிக்கரையில் சரபங்கா நதிக்கரையில் இத்திருக்கோயில் அமைந்துள்ளது. 500 ஆண்டுகளுக்கு முற்பட்ட திருக்கோயிலாகும்.

விஜய நகர மன்னர்கள் காலத்தில் பாளையத்தினர் நஞ்சன்கூடில் உள்ள திருக்கோயிலைப் போல, ஒரு பாணலிங்கத்தை கருவறையில் கொண்ட நஞ்சுண்டேசுவரர் கோயிலையும் எழுப்பினர். பாணாசுரன் என்பவன் சிறந்த பக்தன். எண்ணற்ற சிவலிங்கங்களை, அவன் கண்டகி நதியிலும், நர்மதை நதியிலும் விட்டு விட்டான். அவைதாம் பாணலிங்கம் என்று, உருண்டை வடிவம் கொண்டுள்ளன. ஆதியில் இக்கோயிலை அமைத்த முன்னோர்கள் பாணலிங்கமாக அதில் ஒன்றைக் கொணர்ந்து மூலவராக பிரதிஷ்டை செய்து வழிபட்டனர்.

பாற்கடலைக் கடைந்தபோது வெளிப்பட்ட கொடிய நஞ்சைத்தானே அருந்தி, தேவர்களைக் காத்ததால் 'நஞ்சுண்டேசுவரர்' என்று திருநாமங் கொண்டார் சர்வேசுவரன். இத்திருக்கோயிலில் தேவகிரி நாயகி எனும் பெயரோடு விளங்கும் அன்னையுடன் எழுந்தருளியுள்ளார்.

70அடி உயரங்கொண்ட 5 நிலை இராஜகோபுரத்துடன் கூடிய திருக்கோயில். முகப்பில் நான்கு கால் மண்டபம் கொடிமரமும் உள்ளன. முன்மண்டபத்தையொட்டி நவகிரகங்கள் சந்நிதியும், சென்னகேசவப் பெருமாள் சந்நிதியும் உள்ளன. நர்த்தன கணபதி, வள்ளி தேவயானையுடன் முருகப்பெருமான், அருணகிரிநாதர், பைரவர் மற்றும் ஆஞ்சநேயர் சந்நிதிகள் உள்ளன. மாதம் ஒருமுறை மூலநட்சத்திரத்தன்று ஆஞ்சநேயருக்கு சிறப்பு வழிபாடு நடைபெறுகிறது.

திருவிழாக்கள்

சித்திரையில், 13 நாட்கள் பிரம்மோற்சவம், தமிழ்ப்புத்தாண்டு தேரோட்டத்துடன் நடைபெறும். சிவராத்திரி, ஆருத்ரா தரிசனம்.

பூஜை, நடை திறந்திருக்கும் நேரம்
காலை 6.00 மணி – மதியம் 12.30 மணி
மாலை 5.00 மணி – இரவு 8.00 மணி
மூன்றுகால பூஜை நடைபெறுகிறது.
காலசந்தி – காலை 7.00 மணி
உச்சிகாலம் – பகல் 12.00 மணி
சாயரட்சை – மாலை 6.00 மணி

அன்னதானம்

இத்திருக்கோயிலில் மாண்புமிகு தமிழக முதல்வரின் திருக்கோயில் அன்னதானத்திட்டம் மூலம் தினமும் 50 நபர்களுக்கு அன்னதானம் வழங்கப்படுகிறது.

அமைவிடம்

சேலம் – ஈரோடு வழித்தடத்தில் உள்ள சங்ககிரிக்கு வடக்கே 14 கி.மீ. தொலைவில் உள்ளது. சங்ககிரியிலிருந்து நகரப்பேருந்து வசதிகள் உள்ளன.

தொடர்பு முகவரி

செயல் அலுவலர்
அருள்மிகு பிரசன்ன நஞ்சுண்டேஸ்வரர் திருக்கோயில்
எடப்பாடி நகர் மற்றும் வட்டம், சேலம் மாவட்டம்.
தொலைபேசி எண் : 04283–222936

அருள்மிகு சிதம்பரேஸ்வரர் திருக்கோயில்

தேவியாக்குறிச்சி, ஆத்தூர்.

இறைவன் : சிதம்பரேஸ்வரர்
இறைவி : சிவகாம சுந்தரி

தலச்சிறப்பு

நதிக்கரையில் தேவியமர்ந்தகுறிச்சி "தேவியாக்குறிச்சி" என்ற பெயரைப் பெற்றதாகக் கூறுவர். இக்கிராமத்தில் உள்ள வசிஷ்ட நதிக்கரையின் தென்புறம் மிகவும் இலக்கிய நயத்துடனும், மிக நுண்ணிய நூதனமான முறையிலும் பொலிவுடனும் குடியமர்ந்துள்ள ஈசன் அருள்மிகு சிதம்பரேஸ்வரர் எனும் பெயர் திருநாமத்துடனும் அழகுக்கு அழகு சேர்ப்பது போல் அதன் அருகில் இடப்பக்கத்தில் தனக்கே உரிய அழகு பொலிவுடனும், நயத்துடனும் "சிவகாம சுந்தரியம்மன்" என்ற பெயர் திருநாமத்துடன் கேட்டவர்க்கு கேட்டவரம் தந்து ரட்சித்து அருளும் அம்மனாகவும் காட்சியளிக்கின்றனர்.

சுமார் 150 வருடங்களுக்கு முன்பு குறுநில மன்னர்கள் இவ்விடத்தை மிகவும் திறமை வாய்ந்த சிற்பக்கலை, கட்டிடக்கலை, வர்ணக்கலை மற்றும் ஓவியக்கலை என தனித்தனியாக பல பிரிவுகளாக பிரித்து மிகவும் நேர்த்தியுடன் இத்திருக்கோயிலை கட்டியுள்ளார்கள். அதற்குத் தேவையான சுண்ணாம்பு, கடுக்காய்

மற்றும் ஈயம் போன்ற மூலப்பொருட்களைக் கொண்டு இத்திருக்கோயிலின் கோபுரம் மிகுந்த கலைநயத்துடன் கட்டப்பட்டுள்ளது.

இத்திருக்கோயிலில் விநாயகர், வள்ளி தெய்வானை சமேத சுப்ரமண்யர், தட்சிணாமூர்த்தி மற்றும் சண்டிகேஸ்வரரும் காண்போர் கண்ணையும், கருத்தையும் கவரும் வண்ணம் விளங்குகின்றனர். உதாரணமாக முருகன் சன்னதியில் ஆறுமுகத்துடனும், பன்னிரு கைகளுடன் அபயமளிக்கும் கோலத்துடன் மயில் மீது அமர்ந்து தம்பதி சமேதராக காட்சியளிப்பது காண்பதற்கரிய காட்சியாகும். நேரில் பார்ப்பவர்க்கே அவற்றின் சிறப்ப அழகு புலப்படும்.

நடை திறந்திருக்கும் நேரம்
காலை 7.00 மணி – பகல் 12.00 மணி
மாலை 5.00 மணி – இரவு 8.00 மணி
ஒரு கால பூஜை நடைபெறுகிறது.

அமைவிடம்

சென்னை தேசிய நெடுஞ்சாலையில் ஆத்தூரிலிருந்து 17 கி.மீ. தொலைவில் தலைவாசல் செல்லும் வழியில் தேவியாக்குறிச்சியில் இத்திருக்கோயில் உள்ளது. ஆத்தூரிலிருந்து பேருந்து வசதி உள்ளது.

தொடர்பு முகவரி

செயல் அலுவலர்
அருள்மிகு சிதம்பரேஸ்வரர் திருக்கோயில்
தேவியாக்குறிச்சி, ஆத்தூர் – 636 112.

எண்ணெயின் சிறப்பு

- நெய்த் தீபம் : வீட்டின் சுகத்தையும், நலத்தையும் அதிகரிக்கச் செய்கின்றது. மிகமிகச் சிறப்பான பலன்கள் தரவல்லது.
- எள் எண்ணெய் தீபம் : சகல பீடைப் பரிகாரங்களுக்கும் ஏற்றது. துக்கம் அகன்றிட உதவுவது.
- விளக்கெண்ணெய் தீபம் : புகழ், ஜீவன சுகம், தாம்பத்ய சுகம், உறவினர் நலம் ஆகியனவும் வளமும் விருத்தியும் தர வல்லது.

அருள்மிகு குமரன் திருக்கோயில்

குமரன் மலை, ராயர்பாளையம்.

இறைவன் : குமரன்

தலச்சிறப்பு

ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் குமரன் குன்றில் யோக நரசிம்மர் சிலை ஒன்று வைத்து பூசை செய்து வழிபாட்டு முறையும் நடந்திருக்கிறது.

பிறகு ஆங்கிலேயர் ஆட்சிகாலத்தில் இச்சிலை அகற்றப்பட்டது.

சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்னர் பெருமாள் (அருந்ததியர்) என்பவர் இக்குன்றிற்கு அருகாமையில் ஒரு அரசமரத்தின் அடியில் 3 சிலைகளை வைத்து தினமும் பூசை செய்து வந்தார். அப்பொழுது அழகு மிகுந்த சிறுவன் அம்மரத்தின் அடியிலிருந்து மேலே ஓடுவதைப் போல அவர் கண்டார். பெரும் வியப்பினை அடைந்து அச்சிறுவனை பின் தொடர்ந்து சென்றார். அச்சிறுவன் மலை உச்சியை அடைந்ததும் குறிப்பிட்ட இடத்தில் பேரொளிப் பிழம்புடன் மறைந்து விட்டான்.

இக்காட்சியைக் கண்ட அவர் மிக்க ஆச்சரியமடைந்து தங்கள் ஊர் பெரியவர்களிடம் எடுத்துக் கூறினார். அப்பெரியவர்களும் அவரோடு வந்து மறுநாள் மலை உச்சியை பார்த்த போது, வடிவமற்ற 3 சிலைகள் தோன்றியிருந்தன. மேலும் அவ்விடத்தில் தேங்காய், பழம் வெற்றிலைப்பாக்கு வைத்து வழிபட்ட அறிகுறியும் இருந்தன.

இங்கு வந்து பார்த்த பெரியவர்களும் வியந்தனர். முருகனே அச்சிறுவனாக வந்தவன். இவ்விடத்தில் கோயில் கொள்ள விரும்பியுள்ளான். நாம் அவனை வழிபட்டு அருளைப் பெற இவ்விடத்தில் கோயில் எடுப்போம் என்று எண்ணமிட்டனர். இப்பொழுதுள்ள குமரன் சன்னதி கருவறை (கர்பகிருகம்) உள்ள இடத்தில் தான் அன்று 3 சிலைகளும் தோன்றின. இன்றும் அச்சிலைகளை அங்குக் காணலாம்.

அச்சிலைகளில் பெரியது குமரன் என்றும், சிறியவை லட்சுமிநரசிம்மர் மற்றும் செல்வ வினாயகர் என்றும் மக்கள் கருதினர்.

முருகன் சன்னதி

இக்குன்றினை சுற்றியுள்ள கிராம மக்களின் முழு முயற்சியால் இச்சிறு கோயில் கட்டப்பட்டது. அச்சிலைகள் அமைந்த இடத்தில் கர்பகிருக அறை மட்டும் உடைய சிறு மண்டபம் எழுப்பினர். அதில் பெருமாள் என்பவர் மூலம் முருகன் சிலையை பிரதிஷ்டைசெய்து வணங்கி வந்தனர். திங்கள், வெள்ளிக்கிழமைகளில் மட்டுமே மக்கள் வந்து வழிபடுவது அப்பொழுது வழக்கமாயிருந்தது. ராயர்பாளையம் வீரகனூர், புனல்வாசல், இராமநாதபுரம் முதலிய பக்கத்து ஊர் மக்களும் இதன் பெருமையை அறிந்து வணங்குவதற்கு வரத் தொடங்கினர்.

இக்கோயிலின் அமைப்பு

இது மரங்களடர்ந்த செழிப்பான மலைக்கோயில் ஆகும். மலைமேல் செல்ல நல்ல படி வசதி உள்ளது. மலையைச் சுற்றி கிராமங்கள் தோப்பு, வயல்கள் சூழ்ந்த இயற்கை அழகு நிறைந்து விளங்குகிறது. கோயிலின் முன்புறம் நுழைவாயில் ஒன்று கட்டப்பட்டுள்ளது. மலை உச்சியில் முருகன் (குமரன்) அருள்

செய்கிறார். ஆலயத்தில் புறமாக லட்சுமி நரசிம்மர் சன்னதியும், கிழக்குபுறமாக செல்வ வினாயகர் சன்னதியும் அமைந்துள்ளன. மலையின் நடுவே இடும்பர், கடம்பர் என்ற இரு சன்னதிகளும் அமைந்துள்ளன.

திருவிழாக்கள்

கிருத்திகை, சஷ்டி, அமாவாசை, பங்குனி உத்திரம், தைப்பூசம்.

பூஜை, நடை திறந்திருக்கும் நேரம்
காலை 7.00 மணி – பகல் 12.00 மணி
மாலை 5.00 மணி – இரவு 7.00 மணி
ஒரு கால பூஜை நடைபெறுகிறது.

அமைவிடம்

சேலம் மாவட்டம் ஆத்தூரிலிருந்து பெரம்பலூர் செல்லும் சாலையில், வீரகனூர் என்ற கிராமத்திற்கு மேற்கே மூன்று கிலோமீட்டர் தொலைவில் இருக்கும் குன்றின்மேல் இத்திருக்கோயில் அமைந்துள்ளது.

தொடர்பு முகவரி

செயல் அலுவலர்
அருள்மிகு குமரன் திருக்கோயில்
குமரன் மலை, ராயர்பாளையம்,
கெங்கவல்லி வட்டம்,
சேலம் மாவட்டம் – 636 136.

அருள்மிகு பாலசுப்ரமணியசுவாமி மற்றும் அருள்மிகு சக்ராதேவி திருக்கோயில்

ஊத்துமலை, சேலம்.

இறைவர்	:	அருள்மிகு பாலசுப்ரமணிய சுவாமி
இறைவி	:	சக்ராதேவி
தலவிருட்சம்	:	நாவல், அரசு, வில்வம்
தீர்த்தம்	:	சப்த சாகரம்
ஆகமம்	:	காரணி
இசைக்கருவி	:	சொம்பு, ஏகவாத்தியம்

தலச்சிறப்பு

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் சிவபார்வதியின் திருமணத்தை காண அனைவரும் இமயமலை சென்ற சமயம் இறைவனின் அருளாணைப்படி அகத்தியர் பொதிகை மலைக்கு

விஜயம் செய்த சமயம் இம்மலையில் தமது மனைவி லோபாமுத்ரதேவி அவர்களுடன் ஆசிரமம் அமைத்து தங்கி ஸ்ரீ சக்ரம், பாலசுப்ரமணியர், அகத்தீஸ்வரர் மற்றும் நந்திதேவர் சுவாமிகளை பிரதிஷ்டை செய்து வழிபட்ட ஸ்தலமாகும். அகத்தியர், போகர், புலிப்பாணி, கபிலர், ரேணுகர், சுகர்லோபமுத்ர மாதாஜி முதலிய முனிவர்கள் வழிபட்ட திருத்தலமாகும். முருகபெருமானையும், அம்பிகையும், சித்தர்கள் வழிபட்டு ககண மார்கமாக செல்லும் யோக முறையை அறிந்து கொண்ட ஸ்தலம். தியான யோகம் மற்றும் ஸ்ரீவித்யா உபாசன முறை பற்றி முனிவர்களுக்கு அகத்தியர் உபதேசித்த ஸ்தலம். அகத்தியர் சிவபூஜைகளுக்காக ஏழு சுனைகளை உருவாக்கியுள்ளதாக அகஸ்தியர் மூல ஓலைச்சுவடி கூறுகிறது. இந்த ஏழு சுனை தீர்த்தங்களும் சப்தசாஹர தீர்த்தங்கள் என்றழைக்கப்படுகிறது. மூலிகை குணங்களை கொண்ட இத்தீர்த்தங்களில் நீராடமவும், பருகவும் செய்தால் சர்மநோய், மனநோய், சிறுநீரகநோய், இருதயநோய், குஷ்டரோகம், முன்வினைநோய், மூதாதையர் தோஷங்கள் நீங்குவதாக ஐதீகம்.

பாலசுப்ரமணியர்

அழகிய வடிவத்தில் மயில் வாகனத்துடன் கையில் யோகவேலுடன் பாலனாக முருகப்பெருமான் மூலவர் காணப்படுகிறார். வேல்களில் யோகவேல் தனிச்சிறப்புடையது. இது வேறெங்கும் காணப்படாத சிறப்பான தரிசனமாக முருக பக்தர்களுக்கு அமைந்துள்ளது. இதனால் இவரை மயூரநாதன் எனவும் அழைக்கப்படுகிறார். முருகருக்கு வலப்புறம் விநாயகர், இடப்புறம் ஈஸ்வரர், நவகிரகங்கள் மற்றும் இடும்பன் சுவாமிகள் அமைந்துள்ளது.

ஸ்ரீ சக்ராதேவி

அகத்தியர் இங்கு மிகவும் சக்தி வாய்ந்த 43 முக்கோணங்களைக்கொண்ட சக்தி யந்திரமான ஸ்ரீசக்ரத்தை (ஸ்ரீ சக்ராம்பிகை) இங்குள்ள பாறையில் உருவாக்கி, ஸ்ரீவித்யா பூஜை,

நவாவரண பூஜை, ஸ்ரீசக்ர மாத்ருக பூஜை செய்து ஸ்ரீ சக்ரத்தை சர்வ ரோகஹரசக்ரமாக அமைத்து வழிபட்ட ஸ்தலம் இதுவாகும். தேவி பக்தர்களுக்கும் ஸ்ரீ வித்யா உபாசகர்களுக்கும் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது இத்திருக்தலம்.

அகஸ்தீஸ்வரர் மற்றும் நந்திதேவர்

அகத்தியர் வழிபட்ட சிவபெருமான் அகஸ்தீஸ்வரர் என்றழைக்கப்படுகிறார். பிரதோஷ விழா மற்றும் மகாசிவராத்திரி சிறப்பாக வழிபடப்படுகிறது.

கபிலர் தியானகுகை

இங்கு தியான குகை ஒன்றுள்ளது. இந்த குகையில் சித்தர்களும், மகான்களும் தியானம் செய்துள்ளனர். இதனால் இதனை கபிலர் தியான குகை என்றழைக்கப்படுகிறது. தியான யோகம் தெரியாதவர்கள் கூட மிக எளிதில் தியான யோக சித்திகள் பெறவல்ல அற்புதம் நிறைந்த இடம். பௌர்ணமி தோறும் சித்தர்கள் பூஜை நடைபெறுகிறது.

ஸ்ரீ சக்ர காலபைரவர்

மிகப்பெரியதும், சக்திவாய்ந்த உருவ அமைப்பு கொண்டதும் சிலா, சிற்ப வாஸ்து சாஸ்தர மூர்த்தி நிர்ணயப்படி எட்டு திருக்கரங்களை உடையதும், வரப்பிரசாத மூர்த்தியாக அமைந்துள்ளது. ஸ்ரீசக்ரத்தில் ரத்ன கோட்டைகளுக்கு அஷ்ட பைரவர்களே ஆவர்ண தேவதைகளாக விளங்குகின்றனர். அதிலும் குறிப்பாக ஸ்ரீ சொர்ண ஆகர்ஷண மூர்த்தியாக இவர் விளங்குவதால் அஷ்ட பைரவர்களை வழிபட்ட பலன் கிடைக்கிறது..

பிரார்த்தனை தலம்

அருணகிரிநாதரின் அருள்வாக்குப்படி முருகனையும், யோகவேலினையும் வணங்க சகல செல்வ யோகமிக்க பெருவாழ்வு

வாழலாம். ஸ்ரீசக்ர காலபைரவரை வணங்குவதால் சகல தடைகளும் விலகி சனிதோஷம், குடும்ப தோஷம், கிரஹதோஷம், நாகதோஷம், திருமணத்தடை, குழந்தை செல்வம், தொழில், உத்யோக மேன்மை, மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்குதல், ஞாபகசக்தி கூடுதல், பூமி லாபம், அரசாங்க பதவி, அரசியல் யோகம், தலைமை பதவி, சத்ருக்களால் ஏற்படும் இன்னல்கள் நீங்கி சகல பாக்கியங்கள் பெறலாம்.

தனிச்சிறப்பு

அற்புத மூலிகைகளும், இயற்கை வளங்களும், மூலிகை சுனை தீர்த்தங்களும் ஆங்காங்கே ஊற்று சுனைகளில் தண்ணீர் கசிந்தவண்ணம் இருப்பது இம்மலையின் தனிச்சிறப்பு. இதனலேயே இம்மலை ஊத்து மலை என அழைக்கப்படுகிறது. இம்மலையிலிருந்து .இரவு நேரங்களில் சேலம் மாநகரை காண்பது ரம்மியமான அனுபவமாக உள்ளது..

திருவிழாக்கள்

சித்திரை விசுகனி பூஜை, வைகாசி விசாக பூஜை, ஆடிவெள்ளி, புரட்டாசி நவராத்திரி, விஜயதசமி, சண்டி ஹோமம், லலிதா சகஸ்நாம பூஜை, சுமங்கலி பூஜை, குமாரி பூஜை, ஐப்பசி கந்தர் சஷ்டி பூஜை, சத்ரு சம்ஹார திரிசதி பூஜை, சூரசம்ஹார விழா, திருக்கல்யாண உற்சவம், கார்த்திகை தீபவிழா, மார்கழி தனுர்மாத பூஜை, தைப்பூசம், சிவன் ராத்திரி பூஜை, கார்த்திகை காலபைரவர் ஜென்மாஷ்டமி பூஜை, பங்குனி உத்திர பால்காவடி விழாக்கள் நடைபெறுகிறது.

நித்தியபூஜை

பூஜா காலங்கள் நடைபெறும் நேரம்

காலசந்தி – காலை 8.00 மணி

உச்சிகாலம் – மதியம் 12.00 மணி

இராக்கால பூஜை – இரவு 8.00 மணி

நடைதிறந்திருக்கும் நேரம்

காலை 6.00 மணி – பகல் 12.00 மணி

மாலை 4.00 மணி – இரவு 9.00 மணி

அமைவிடம்

சேலத்தில் இருந்து நாமக்கல் செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் சீலநாயக்கன்பட்டியில் இடது புறமாக ஊத்துமலையில் இத்திருக்கோயில் அமைந்துள்ளது. மலைக்கு செல்ல சாலை வசதி உள்ளது. நகரிலிருந்து செல்ல பேருந்து வசதி உள்ளது. சேலம் நகரில் இருந்து 6 கிலோ மீட்டர் தொலைவில் ஊத்துமலை அமைந்துள்ளது.

தொடர்பு முகவரி

பரம்பரை அறங்காவலர்,

அருள்மிகு பாலசுப்ரமணியசுவாமி மற்றும்

அருள்மிகு சக்ராதேவி திருக்கோயில்

ஊத்துமலை, சீலநாயக்கன்பட்டி,

சேலம் வட்டம் மற்றும் மாவட்டம்.



தாயாருடன் அழகிரிநாதர்
கோட்டை, சேலம்.

திருக்கண்டேன் பொன்மேனிகண்டேன் திகழும்
அருக்கன் அணிநிறமும் கண்டேன் – செருக்கிளரும்
பொன்னாழி கண்டேன் புரிசங்கம் கைக்கண்டேன்
என்னாழி வண்ணன்பால் இன்று.

– பேயாழ்வார்

கொண்டல் வண்ணனைக் கோவலனாய் வெண்ணெய்
உண்ட வாயன் என் உள்ளம் கவர்ந்தானை
அண்டர்கோன் அணியரங்க என்அமுதினைக்
கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே.

– திருப்பாணாழ்வார்

அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தைஇடுதிரியா ? – நன்புருகி
ஞானச்சுடர் விளக்கேற்றினேன் நாரணற்கு
ஞானத்தமிழ் புரிந்த நான்.

– பூதத்தாழ்வார்

அருள்மிகு கரபுரநாதசுவாமி திருக்கோயில்

உத்தமசோழபுரம்.

இறைவன்	:	கரபுரநாதர்
இறைவி	:	பெரியநாயகி அம்மன்
தலவிருட்சம்	:	வில்வம்
ஆகமம்	:	காமீகம்
தீர்த்தம்	:	காசி தீர்த்தம்

தலச்சிறப்பு

இத்திருக்கோயில் சுமார் 1,200 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது. சுவாமியின் திருநாமம் கரபுரநாதர், சுயம்பு மூர்த்தி, அம்பாளின் பெயர் பெரிய நாயகி. இராவணன் தம்பி கரதூஷ்ணன் ஆயிரம் ஆண்டுகள் தவம் இருந்து இத்தலத்தை பூஜித்து ராஜபதவி அடைந்தார். கரதூஷ்ணன் இப்புரத்தில் பூஜித்ததால் கரபுரநாதர் எனப் பெயர் பெற்றது. சிறு பாலகன் அபிஷேகம் செய்வதற்கு ஏதுவாக சிலை சாய்ந்து கொடுத்ததால் மூலவர் சாய்ந்த நிலையில் காட்சி தருகிறார். இதனால் கரபுரநாதருக்கு முடி சாய்த்த மன்னர் என்ற பெயரும் உண்டு. நாரதரும், திருமூலரின் சீடரான கரடி சித்தரும் வழிபட்ட ஸ்தலமாகும். 48 நாட்கள் விரதம் இருந்து இறைவனைத் துதித்தால் சித்த பிரம்மைகள் நீங்குவதாக ஐதீகம்.

சுகவனத்தான், கரபுரத்தான், வீரட்டின், வீமசேனன், திருவேலிநாதன் ஆகிய ஐந்து ஸ்தலங்களும் திருமணிமுத்தாறு நதிக்கு மேற்கே சுயம்புவாக விளங்கி வருகின்றன. ஐந்து ஸ்தலங்களும் ஒரே நாளில் தரிசித்தால் சகல செல்வங்களும் பெற்று நீடுழி வாழ்வார் என்பது வரலாறு.

தனிச்சிறப்பு

இத்தலத்தில் சேர, சோழ, பாண்டியர் ஆகிய மூவேந்தர்களையும் ஒன்று சேர வைத்து ஒற்றுமையை ஏற்படுத்திய பெருமை ஔவையாரைச் சாா்ந்ததாகும். அவர் நினைவாக ஆலயத்தின் முன்புறம் ரோடு ஓரத்தில் சுமார் 6 அடி உயரத்தில் ஔவையார் சிலை நிறுவப்பட்டுள்ளது.

திருவிழாக்கள்

சித்ரா பௌர்ணமி உற்சவ தேர்த்திருவிழாவும், மாதாந்திர உற்சவங்களும் சிறப்பான முறையில் நடைபெற்று வருகிறது.

பூஜை, நடை திறந்திருக்கும் நேரம்
காலை 6.00 மணி – பகல் 12.30 மணி
மாலை 4.30 மணி – இரவு 8.00 மணி
மூன்று கால பூஜை நடைபெறுகிறது.
காலசந்தி – காலை 6.30 மணி
உச்சிகாலம் – மதியம் 12.00 மணி
சாயரட்சை – மாலை 6.00 மணி

அமைவிடம்

சேலம் நகரிலிருந்து 5 கி.மீ. தொலைவில் சேலம் – ஈரோடு செல்லும் சாலையில் திருமணிமுத்தாற்றின் மேற்கில் பெரியூர் எனப்படும் உத்தமசோழபுரத்தில் இத்திருக்கோயில் அமைந்துள்ளது.

தொடர்பு முகவரி

செயல் அலுவலர்
அருள்மிகு கரபுரநாதசுவாமி திருக்கோயில்
உத்தமசோழபுரம் – 636 010.
சேலம் வட்டம், சேலம் மாவட்டம்.

அருள்மிகு ஞானதண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்

நெத்திமேடு, சேலம்.



இறைவன்	:	ஞானதண்டாயுதபாணி
இறைவி	:	வள்ளி, தெய்வானை
தலவிருட்சம்	:	வில்வம்
ஆகமம்	:	காரணம்
தீர்த்தம்	:	சஞ்சீவி தீர்த்தம்

தலச்சிறப்பு

சுகவனம் என்னும் கிளிக்காடு என வழங்கும் சேலம் நெத்திமேடு கரிய பெருமாள் கரட்டில் வீற்றிருக்கும் அருள்மிகு ஞானதண்டாயுதபாணி சுவாமி திருத்தலம் மிகவும் பிரசித்தி பெற்ற பெருமை வாய்ந்த திருத்தலம் ஆகும். கபிலர் தகடூர் மன்னனைக் காண இவ்வழியாக வந்தபோது இங்கு முருகனை யந்திர ரூபமாக பிரதிஷ்டை செய்து வழிபட்டு உள்ளார்.

கிரி மகிமை

வள்ளிமலை சச்சிதானந்தா சுவாமிகளின் சீடர்களாகிய சுப்ரமணியம், சேதுராமன் ஆகியோர்களால் முருகனின் திருவருள்படி அருள்வாக்கு திருப்புகழ் பாடப்பெற்றது. அதன் பிறகு பன்றிமலை சுவாமிகள் இத்திருக்கோயிலுக்கு வந்து பல சித்துக்களையும் நிகழ்த்தி காட்டி உள்ளார். இம்மலையில் சித்தர்களும் இருப்பதாக பெரியோர்களின் வாயிலாக தெரிகிறது. மேலும் இம்மலையில் பல அபூர்வ மூலிகைகளும் உள்ளன.

இம்மலை அடிவாரத்தில் அருள்மிகு கல்யாண சுந்தர விநாயகர் சன்னதியும், அருள்மிகு அலமேலு மங்கை தாயார் சன்னதியும், அருள்மிகு அய்யப்பன் சன்னதியும், நடுமலையில்



அருள்மிகு ஆஞ்சநேயர் சன்னதியும், அடுத்து அருள்மிகு ஞானதண்டாயுதபாணி சுவாமி சன்னதியும், இம்மலையின் உச்சியில் அருள்மிகு உச்சிபிள்ளையார் சன்னதியும், அருள்மிகு கரியநாத சிவன் சன்னதியும், இறுதியாக அருள்மிகு கரிய பெருமாள் சன்னதியும் அமைந்திருப்பது மிகவும் சிறப்பு வாய்ந்த அம்சமாகும். மகப்பேறின்மை, திருமணத்தடை, செவ்வாய் தோஷம் போன்ற குறைகள் நீங்க பிரதி செவ்வாய்க்கிழமைதோறும் தொடர்ந்து 12 செவ்வாய்க்கிழமைகள் வணங்கினால் குறைகள் நீங்கி சுபம் பெறலாம் எனவும் இத்திருத்தலப் பாடல்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருவிழாக்கள்

இத்திருத்தலத்தில் ஆண்டு திருவிழாவாக கொண்டாடப்படும் கரிநாள் (தை மாதம்) உற்சவம் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. தைப்பூச நாளன்றும் திருவிழா போன்று வெகுசிறப்பாக நடைபெறுகின்றது.

பூஜை, நடை திறந்திருக்கும் நேரம்
காலை 7.00 மணி – பகல் 12.30 மணி
மாலை 5.00 மணி – இரவு 8.00 மணி
இரண்டு கால பூஜை நடைபெறுகிறது.
காலசந்தி – காலை 7.30 மணி
உச்சிகாலம் – மதியம் 12.00 மணி



அமைவிடம்

சேலம் பழைய பேருந்துநிலையத்திலிருந்து சேலம் – ஈரோடு செல்லும் சாலையில் 2 கிலோ மீட்டர் தூரத்தில் நெத்திமேட்டில் இத்திருக்கோயில் அமைந்துள்ளது.

தொடர்பு முகவரி

செயல் அலுவலர்
அருள்மிகு ஞானதண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்
நெத்திமேடு, சேலம் – **636 002.**

திருவிழா தத்துவம்

இறைவன் நடத்தி வரும் சிருட்டி (உண்டாக்குதல்), ஸ்திதி (காப்பாற்றுதல்) சம்ஹாரம் (அழித்தல்), திரோபவம் (மறைத்தல்) அனுக்கிரகம் (அருளல்) ஆகிய ஐந்தொழில்களும் பத்து நாள் திருவிழாக்களாக கொண்டாடப்படுகிறது.

1. மண் எடுத்தல், முளையிடுதல், கொடியேற்றம் ஆகியன சிருட்டி (உண்டாக்குதல்) ஆகும்.
2. வாகன உத்ஸவங்கள், யாகம், பலியிடுதல் ஆகியன ஸ்திதி (காப்பாற்றுதல்) ஆகும்.
3. தேர்த்திருவிழா, பரிவேட்டை, சாந்தணிதல் ஆகியன ஸம்ஹாரம்(அழித்தல்) ஆகும்.
4. சத்தமிடாமல் மௌனமாக நடத்தும் திருவிழா திரொபவம் (மறைத்தல்) ஆகும்.
5. நடராஜர் உற்சவம், மட்டையடி, திருவூடல் ஆகியன அனுக்கிரகம் (அருளல்) ஆகும்.

பத்து நாள் திருவிழாக்களில் முற்பகுதி விருத்திக்கிரம ஐந்தொழில்கள் நடக்கின்றன எனவும், பிற்பகுதி ஐந்து நாள் இலயக்கிரக ஐந்தொழில்கள் நடக்கின்றன எனவும் கூறப்படும்.

அபிஷேக பலன்கள்

எண்ணெய்	–	சுகம்
மாப்பொடி	–	கடனைப் போக்கும்
நெல்லிமுள்ளிப் பொடி	–	நோய் போக்கும்
பஞ்ச கவ்யம்	–	தூய்மை உண்டாகும்
பஞ்சாமிர்தம்	–	வெற்றியைத் தரும் (ஜயம்)
நெய்	–	வீடுபேறு
பால்	–	ஆயுளை வளர்க்கும்
தயிர்	–	மக்கட்பேறு
தேன்	–	சுகம்
கரும்புச்சாறு	–	பிணி நீக்கம்
சர்க்கரை	–	சத்துருவை அழிக்கும்
பழவர்க்கம்	–	கோபம் போக்கும்
எலுமிச்சம்பழம்	–	எமன் பயம் போக்கும்
இளநீர்	–	போகம் தரும்
சந்தனம்	–	லட்சுமி கடாட்சம்
அன்னாபிஷேகம்	–	சாம்ராஜ்யம்

புகழ்பெற்ற நைவேத்தியங்கள்

பிள்ளையார்பட்டி	–	மோதகம்
பழநி	–	பஞ்சாமிர்தம்
சிதம்பரம்	–	களி
திருப்பதி	–	லட்டு
காஞ்சிவரதர்	–	இட்டிலி
அழகர் கோயில்	–	தோசை
வைத்தீஸ்வரன் கோயில்	–	தினை மாவு
சபரி மலை	–	நெய்
திருக்கண்ணபுரம்	–	முனையதரன் பொங்கல்
ஸ்ரீரங்கம்	–	அரவணை

அருள்மிகு அம்பலவாணர் சுவாமி திருக்கோயில்

குகை, சேலம் – 636 006.

இறைவன்	: அம்பலவாணர்
இறைவி	: சிவகாமியம்மன்
ஆகமம்	: காரணம், வாதுளை
தலவிருட்சம்	: வில்வம்

தலச்சிறப்பு

திருமணி முத்தாற்றின் தென்கரையில் அருள்மிகு அம்பலவாணர் கோயில் கொண்டுள்ளார். இத்திருக்கோயில் மன்னர்கள் காலத்தில் தோற்றுவிக்கப்பட்டதாக செவிவழிச் செய்தி கூறுகின்றது. இத்திருக்கோயில் நீண்ட நெடிய மதில் சுவர்களால் சூழப்பட்டு திருக்கோயில் முழுவதும் பழங்கால கற்களால் மண்டபங்கள் அமைக்கப்பட்டு உள்ளது. இத்திருக்கோயிலில் மதில்

சுவர் மற்றும் பல இடங்களில் பொறிக்கப்பட்ட மீன், சூரியன், யானை ஆகியவை மன்னர்கள் காலத்தில் கட்டப்பட்டுள்ளதற்கான சான்று அளிக்கிறது.

அம்பலவாணர் சுவாமி

அருள்மிகு அம்பலவாணர் சுவாமி கிழக்கு நோக்கி லிங்க வடிவமாக அருள்பாலிக்கிறார். அருள்மிகு அம்பலவாணருக்கு வலப்புற வாயிலில் அனுக்ஞை கணபதியும் இடதுபுற வாயிலில் துவாரஸ்கந்தரும் உள்ளனர். இத்திருக்கோயிலைச்சுற்றி அஷ்ட (8) திக்குகளிலும் பலிபீடம் அமையப்பெற்று திருவிழாக்காலங்களில் பூஜை செய்வது சிறப்பாகும். ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், ஸத்யோஜாதம் என்று சொல்லக்கூடிய படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற பஞ்சக்ருத்யங்–களையும் படைப்பவராய், தொழில்வளம், வியாபாரம் அபிவிருத்தி, புத்ரசந்தானம், தீராத வியாதிகள், குடும்ப பிரச்சனைகள் என்று அம்பலவாண சாமியை நாடிவரும் பக்தர்களுக்கு பலவித நன்மைகள் அள்ளித்தருபவராய், வேண்டியவர்களுக்கு வேண்டிய நலனை அளிப்பவராய் திகழ்கிறார்.

அருள்மிகு சிவகாமி அம்மன்

சிவகாமி அம்மன் சன்னதியில் சுரங்கப்பாதை உள்ளதாகவும், அதன் வழியாக அம்மன் திருமணி முத்தாற்றில் நீராடச் சென்றதாகவும் செவிவழிச் செய்தி கூறுகிறது. திருமண தடைகள் நீங்க பிரதி திங்கள் தோறும் அம்மனை வழிபட்டு சிகப்பு ரட்சை கையில் கட்டினால் விரைவில் திருமணம் கைகூடும்.

பிற சன்னதிகள்

அருள்மிகு அம்பலவாண சுவாமிக்கு தென்புறம் அப்பர், சம்பந்தர், மாணிக்கவாசகர், சுந்தரர் ஆகியோரின் நால்வர் சன்னதி அமையப்பெற்று குருபூஜை நடைபெற்று வருகிறது.

அனுக்ஞைகணபதி, நர்த்தனகணபதி, பிரதானகணபதி, நாகராஜகணபதி, சக்திகணபதி ஆலயங்கள் அமையப்பெற்றுள்ளது.

ஸ்ரீகாசிவிஸ்வநாதர், ஸ்ரீவிசாலாட்சி, ஸ்ரீஆஞ்சநேயர், ஸ்ரீபாலசுப்ரமணியர் ஆலயமும், பாலசுப்ரமணியருக்கு எதிராக ஸ்ரீஅண்ணாமலையாரும், ஸ்ரீபாலசுப்ரமணியருக்கு அடுத்து பஞ்சலிங்கங்களும், பிருத்திவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் ஆகிய லிங்கங்கள் அமையப்பெற்றுள்ளன. கோயிலின் தென்மேற்கில் சரஸ்வதியும், வடமேற்கில் லட்சுமியும் குடிகொண்டு உள்ளனர். அருகில் பிரம்மா, சண்டிகேஸ்வரர் சன்னதி உள்ளது.

சனீஸ்வரர்

அருள்மிகு அம்பலவாணருக்கு வடபுறம்சனீஸ்வரர் சன்னதி அமைந்துள்ளது. சிவாலயத்தில் நீலாதேவி சமேதராக சனிபகவான் கோயில் கொண்டு இருப்பது இவ்வாலயத்தின் தனி சிறப்பாகும்.

நந்திகேஸ்வரர்

ஒவ்வொரு பிரதோசத்திற்கும் சிறப்பு வழிபாடும் நடைபெறுகிறது. பங்குனி திருவாதிரையில் நந்திகேஸ்வரர் ஜனன விழா சிறப்பாக நடைபெறும்.

அனுதினமும் அம்பலவாணரை வணங்குவோம்.
அல்லல் நீங்கி வளம்பல பெறுவோம்.

திருவிழாக்கள்

சித்திரை தமிழ்வருடப்பிறப்பு, மற்றும் ஆங்கில வருடப்பிறப்பு, ஆனித்திருமஞ்சனம், சிவன்ராத்திரி 4 கால விஷேச பூஜையும், ஆருத்ரா தரிசன விழாவும் 10 நாள் உற்சவமும், கார்த்திகை சோமவாரங்களில் சிறப்பு வழிபாடும், கடைசியில் 108 சங்காபிஷேகமும் நடைபெறுகிறது. ஆவணி மாதம் புட்டு திருவிழாவும், அக்னி நட்சத்திர சிறப்பு பூஜையும், பிரதோசம் பௌர்ணமி காலங்களில் பள்ளியறை பூஜையும் சிறப்பாக நடைபெறுகிறது.

பூஜை, நடை திறந்திருக்கும் நேரம்
காலை 6.30 மணி – பகல் 12.30 மணி
மாலை 5.00 மணி – இரவு 8.30 மணி
மூன்று கால பூஜை நடைபெறுகிறது.
காலசந்தி – காலை 7.00 மணி
உச்சிகாலம் – 12.00 மணி
சாயரட்சை – 8.00 மணி

அமைவிடம்

சேலம் பழைய பேருந்து நிலையத்திலிருந்து 2கி.மீ. தொலைவில் குகைப்பகுதியில் உள்ளது.

தொடர்பு முகவரி

செயல் அலுவலர்
அருள்மிகு அம்பலவாணர் சுவாமி திருக்கோயில்
குகை, சேலம் – 636 006.

அருள்மிகு காளியம்மன் திருக்கோயில்

அம்மாப்பேட்டை, சேலம்.

இறைவி : ஸ்ரீ காளியம்மன் திருக்கோயில்

தலச்சிறப்பு

அருள்மிகு காளியம்மன் அருள் பாலிக்கும் நான்கு திருக்கரங்களில் வலது கரங்களில் உடுக்கையும், கபாலமும் கொண்டு, வலது காலை தொங்கவிட்டும், இடது காலை மடித்தும் கருணை புரியும் இனிய முகத்துடன் அமர்ந்துள்ள எழில்மிகு திருக்கோலம், காண்போர் தம் சிக்கல்கள், பரிதிமுன் பனிபோல் பறந்து போகும் என்பது உறுதி.

இத்திருக்கோயில் சுமார் 300 வருடங்களுக்கு முந்தையது எனவும், இப்பகுதியில் உள்ளோர் காவல் தெய்வமாக காளியம்மனை பிரதிஷ்டை செய்து, சிறிய கோயில் அமைத்து, வழிபட்டு வந்தனர் என்பது செவிவழிச் செய்தியாகும். அக்காலத்தில் காவல் தெய்வம் என்பதால் உயிர்ப்பலி கொடுத்து வந்துள்ளனர். நீண்ட காலமாக மிகச் சிறிய அளவிலேயே ஒரு சில விழாக்கால பூஜைகளுடனும்

வளர்ச்சியடையாமலும் இருந்து வந்துள்ளது. இந்நிலையில் சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் இக்கோயில் அர்ச்சகர் காளியம்மனுக்கு காலை பூஜை செய்வதற்காக திருக்கதவு திறந்த போது, அன்னை ஆதிபாராசக்தியின் வடிவமான நல்ல பாம்பு அன்னையின் திருவுடலை சுற்றியும் தலைமீது படமெடுத்து இருந்ததையும் கண்டு மிகவும் பயந்தார். அன்னையை பய பக்தியுடன் வழிபட அப்பாம்பு இறங்கி சென்று விட்டது. இன்றும் அரசமரத்திற்கு கீழே விநாயகர் சிலைக்கு அருகில் பாம்பு புற்று இருப்பதும், பலரது கண்களுக்கு நல்ல பாம்பு தென்பட்டு வருவதும் உண்மை.

மணம் வேண்டுவோர், மகப்பேறு வேண்டுவோர், மனை வேண்டுவோர், மன நலம் பேணுவோர், தீராத நோய் தீர்ந்திட வேண்டுவோர், என பல்வேறு வரங்களை வேண்டி காளியம்மனின் காலைப்பற்றுவோர் ஆயிரம், ஆயிரம், பக்தர்கள் பிரார்த்தனைகள் நிறைவேறிய மகிழ்ச்சியில் துலாபாரம் மற்றும் காணிக்கைகள் செலுத்தி திருப்பணிகளில் தங்களது சக்திக்கு ஏற்ற வகையில் இக் கோயிலை வளம்பெறச் செய்து வருகின்றனர்.

அரசு – வேம்பு, ஆதி விநாயகர் தனிச்சிறப்பு

இத்திருக்கோயில் போன்று பழமை வாய்ந்ததும் தமிழகத்திலேயே எங்கும் காண இயலாத வகையில் ஒன்பது கிளைகளை உடைய (நவசக்திகளை உள்ளடக்கியது) அரசமரமும் அதனுடன் வேம்பும் இணைந்து காட்சியளிப்பது இத்தலத்தின் சிறப்பம்சம், அரசும் வேம்பும் சேர்ந்து இருக்கும் இடத்தில் உயிரியல் மின் சக்தி நிலவுகிறது என்றும், அரசு வேம்பினைச் சுற்றி ஏராளமான பக்தர்கள் தினசரி வலம் வருதல் இத்திருக்கோயிலின் தனிச்சிறப்பாகும். இவ்விநாயகருக்கு அருகில் ஆதிசக்தியின் அவதாரமான "நல்லபாம்பு" குடி கொண்டுள்ளது. நாகசதுர்த்தி தினத்தன்று ஆயிரக்கணக்கான மகளிர் இங்கு வருகை தந்து விழா எடுக்கின்றனர்.

திருவிழாக்கள்

சித்திரை தமிழ் வருடப் பிறப்பு, ஆங்கில வருடப்பிறப்பு, சிறப்பு சந்தன காப்பு அலங்காரம், மாசி அக்னி திருவிழா, சித்ரா பௌர்ணமி, நவராத்திரி உற்சவம், கார்த்திகை திருவிழா, மார்கழி சிறப்பு ஆராதனை.

பூஜை, நடை திறந்திருக்கும் நேரம்
காலை 6.00 மணி – பகல் 12.30 மணி
மாலை 4.00 மணி – இரவு 8.30 மணி
மூன்று கால பூஜை நடைபெறுகிறது.
காலசந்தி – காலை 7.00 மணி
உச்சிகாலம் – 12.00 மணி
சாயரட்சை – 8.00 மணி

அமைவிடம்

இத்திருக்கோயில் சேலம் நகரில் இருந்து கிழக்கே சுமார் இரண்டு கிலோ மீட்டர், அம்மாப்பேட்டை மெயின் ரோடு செல்லும் சாலையில் அமைந்துள்ளது.

தொடர்பு முகவரி

செயல் அலுவலர்
அருள்மிகு காளியம்மன் திருக்கோயில்
அம்மாப்பேட்டை மெயின்ரோடு,
சேலம் நகர் – 636 001.
சேலம் மாவட்டம்.

திருவுருவத் தத்துவம்

சிவலிங்கம்	பதி
நந்தி	பசு
பலிபீடம்	பாசம்
திருவாட்சி	பிரணவம்
திரைச்சீலை	மாயை
கொடிமரம்	ஆணவம்

அருள்மிகு சின்ன மாரியம்மன் திருக்கோயில்

சின்னக்கடைவீதி, சேலம்.

இறைவி : அருள்மிகு சின்ன மாரியம்மன்
ஆகமம் : கிராம தேவதை

தலச்சிறப்பு

அம்பிகையின் தீர்ப்பை ஏற்று கருணை மாரி சின்னமாரி கண் கொடுத்து தெய்வமே என அனைவரும் வியந்து புகழ்ந்தனர். இந்த நீதிமன்றம் தெய்வ நீதி மன்றம், அதனால் தான் மக்கள் ஆடிப் பெருவிழாவில் தங்களது பிரார்த்தனைகளை செலுத்தி, கருணை பிரசாதத்தை இன்றும் பெற்றுச் செல்வது வழக்கத்தில் உள்ளது.

இரு நாணங்கள் இரு அயனங்கள் ஆகும். கிழக்கு நோக்கி வரும் பக்தர்களின் குறை தீர்த்து நிறை அருள் தருவதால் அம்பிகையை சின்ன மாரியம்மன் என்று யாவரும் புகழ் மாலை சூட்டி வழிபட்டுச் செல்வது இன்றும் வழக்கத்தில் உள்ளது.

சின்ன மாரியம்மன் கிழக்கு நோக்கி, இடது கால் மடித்து, வலது கால் தொங்கவிட்டும், வலது மேல் கையில் உடுக்கையும், வலது கீழ் கையில் சூலம் வைத்து, இடது மேல் கையில் அங்குசமும், இடது

கீழ்க்கையில் கபாலமும் ஏந்தியபடி, அருள்பாலித்தவாறு சுற்றுப்புற மண்டபமும், முன்புற மண்டபமும், சன்னதி எதிரில் ஒரு வாயிலும் அமையப் பெற்றுள்ளது. வலது வாயிற்புறம் ஸ்ரீ விநாயகர் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. இடது புறம் குதிரை மீது மதுரை வீரன் சிறிய உருவம் வைக்கப்பட்டுள்ளது. இந்த ஆலயத்தில் கருவறையில் உற்சவர் அம்மன் நின்ற திருக்கோலத்தில் உள்ளது.

திருவிழாக்கள்

விஜயதசமி, அன்னாபிஷேகம், தமிழ் வருடப்பிறப்பு, விநாயகசதுர்த்தி போன்ற திருவிழாக்கள் இதர மாதாந்திர முக்கிய திருவிழாக்கள் நடைபெறுவது வழக்கத்தில் உள்ளது.

பூஜை, நடை திறந்திருக்கும் நேரம்

காலை 6.00 மணி – பகல் 12.00 மணி

மாலை 4.00 மணி – இரவு 8.00 மணி

இரண்டுகால பூஜை நடைபெறுகிறது.

காலசந்தி – காலை 7.30 மணி

சாயரட்சை – மாலை 6.00 மணி

அமைவிடம்

இத்திருக்கோயில் சேலம் நகர், நகரப்பேருந்து நிலையத்திற்கும் இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் நகரப் புகைவண்டி நிலையத்திற்கும், பட்டைக்கோயில் அருகில் அம்மாப்பேட்டை செல்லும் பிரதான சாலையில் சின்னக்கடை வீதியில் அமைந்துள்ளது.

தொடர்பு முகவரி

செயல் அலுவலர்

அருள்மிகு சின்ன மாரியம்மன் திருக்கோயில்

சின்னக்கடைவீதி, சேலம்.

சில கோவில்களில் உள்ள தனிச்சிறப்புகள்

- மூலவரே வீதிவலம் வருவது சிதம்பரம் நடராஜர்.
- கர்ப்பகிருகத்தின் மேல் உள்ள கோபுரம் மிகப் பெரிய அளவில் (இராஜகோபுரம் போல்) இருப்பது தஞ்சை பெரிய கோவிலில் மட்டுமே.
- சிவன் கோவிலில் தீர்த்தம் கொடுப்பது இராமேசுவரத்தில் உள்ள அருள்மிகு இராமநாதர் கோயிலில் மட்டும்.
- அம்மன் சந்நதி இல்லாத கோயில் காஞ்சி ஏகாம்பர நாதர் கோயில்.

அருள்மிகு வெள்ளைப்பிள்ளையார் திருக்கோயில்

ஆத்தூர் நகர்.



இறைவன் : வெள்ளைப்பிள்ளையார்

தலச்சிறப்பு

அருள்மிகு வெள்ளை விநாயகர் திருக்கோயில் வடக்கே வசிஷ்ட நதி அமைந்துள்ளது. ஒரு சமயம் வசிஷ்ட நதியில் வெள்ளம் வந்த போது சுமார் 200 ஆண்டுகளுக்கு முன் ஒரு பிள்ளையார் சிலை அடித்து வந்தது. பல சமூக பெரியோர்களும், பெண்களும் அதனை பய பக்தியுடன் எடுத்து வந்து அருள்மிகு வெள்ளைப்பிள்ளையார் திருக்கோயில் அமைந்துள்ள திருத்தலத்தில் பிரதிஷ்டை செய்து பெருவிழா எடுத்து குடமுழுக்கு விழா செய்து அது முதல் கொண்டாடி வருகின்றனர்.

வெள்ளத்தில் அடித்து வந்த பிள்ளையாருக்கு பெயர் வைக்க வேண்டுமே என்ன பெயர் கொடுக்கலாம் என யோசித்து " வெள்ளம் பிள்ளையார்" என்று பெயர் வைத்தனர் என்பர். அத்திருப்பெயரே மருவி நாளடைவில் வெள்ளைப்பிள்ளையார் என ஆயிற்று.

முக்கண்ணனின் முதல் மகன், நான்முகனின் ஆணவமறுத்த ஆறுமுகனின் அண்ணன், அந்த கஜமுகன், ஓங்கார நாதத்தின் உண்மை சொரூபர், இருகரம் கூப்பி தொழுவோர்க்கு தரம் தாழா வாழ்க்கையைத் தருபவனே அந்த ஐங்கரன், சங்கரன் மகன் ஐங்கரனின் தாள் பணிந்தால் வாழ்வின் பயங்கரம் போகும், பக்தர்களின் நேசன் – கணேசன், நாட்டுக்கொரு முதல்வர் இந்த நானிலத்தே இருப்பது போல் அகில உலகத்திற்கே முதல்வன் அவன், கங்கை மணாளனின் புதல்வன் அவன்.

திருவிழாக்கள்

ஆத்தூர் பேருந்து நிலையத்துக்கு அருகில் "அருள்மிகு வெள்ளைப்பிள்ளையார்" திருக்கோயில். இருப்பதால் மக்கள் காலை மாலை வணங்கி தொழில் செய்து நல் வாழ்வு பெறுகின்ற பிள்ளையார் சதுர்த்தி உற்சவமே பெரிய திருவிழாவாகும்.

அன்னதானம்

இத்திருக்கோயிலில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அன்னதானத்திட்டம் மூலம் தினமும் 30 நபர்களுக்கு அன்னதானம் வழங்கப்படுகிறது.

பூஜை, நடை திறந்திருக்கும் நேரம்

காலை 6.00 மணி – பகல் 12.00 மணி
மாலை 4.00 மணி – இரவு 9.00 மணி
மூன்று கால பூஜை நடைபெறுகிறது.
காலசந்தி – காலை 6.30 மணி
உச்சிகாலம் – மதியம் 12.00 மணி
சாயரட்சை – மாலை 6.00 மணி

அமைவிடம்

இத்திருக்கோயில் சேலம் – கடலூர் நெடுஞ்சாலையில் சேலத்திற்கும் நேர் கிழக்கே 50 கிலோ மீட்டர் தொலைவில் ஆத்தூர் பேருந்து நிலையத்திற்கு அருகில் அமைந்துள்ள பழங்காலப் பெருங்கோயில்.

தொடர்பு முகவரி

செயல் அலுவலர்
அருள்மிகு வெள்ளைப்பிள்ளையார் திருக்கோயில்
ஆத்தூர் நகர் – 636 102, ஆத்தூர் வட்டம், சேலம் மாவட்டம்.

அருள்மிகு பலப்பட்டரை மாரியம்மன் திருக்கோயில்

அம்மாப்பேட்டை, சேலம்.

இறைவி	:	மாரியம்மன்
தலவிருட்சம்	:	அரசமரம்
ஆகமம்	:	காரணம்

தலச்சிறப்பு

அருள்மிகு பலப்பட்டரை மாரியம்மன், ராஜகணபதி தெய்வங்கள் பக்தர்களுக்கு வேண்டிய வரம் அளித்து மிகவும் சக்தி வாய்ந்த தெய்வமாக விளங்குகிறது. இத்திருக்கோயில் சுமார் 100 ஆண்டுகளுக்கு முன் அம்மாப்பேட்டை மற்றும் சுற்றியுள்ள கிராமத்தாரால் உருவாக்கப்பட்டதாலும், பலதரப்பட்ட சமூக மக்களுக்கு பாத்தியப்பட்டதாலும் இத்திருக்கோயிலுக்கு பலப்பட்டரை மாரியம்மன் திருக்கோயில் என்று பெயர் வழங்கப்படுகிறது. இத்திருக்கோயிலின் அபிஷேக தீர்த்தம் பக்தர்களின் கண், கை, கால்,

சம்பந்தப்பட்ட நோய்களுக்கு பயன்படுத்துவதால் இந்நோய்கள் நீங்க அம்மன் அருள்பாலித்து, பக்தர்களின் குறை தீர்த்து வருவதால் அம்மனை இன்றும் வழிபட்டு தீர்த்தம் பெற்றுச் செல்வது வழக்கத்தில் உள்ளது.

திருவிழாக்கள்

இத்திருக்கோயிலின் முக்கிய வருடாந்திர திருவிழா ஆடித்திருவிழா 22 நாட்கள் மிகவும் சிறப்பான முறையில் நடத்தப்பட்டு வருகிறது. ஆடிப்பிறப்பு, விநாயகர்சதுர்த்தி, ஆயுதபூஜை, நவராத்திரி, தீபாவளி, திருக்கார்த்திகை, தனுர்மாதம், தைப்பொங்கல், பங்குனிஉத்திரம், தமிழ்வருடப்பிறப்பு போன்ற மாத உற்சவங்களும். பிரதி ஒவ்வொரு செவ்வாய்க்கிழமை, வெள்ளிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைதோறும் இராகுகால பூஜையும் , பிரதி மாதம் முதல் வெள்ளிக்கிழமை திருவிளக்கு பூஜையும், இராஜகணபதி சன்னதியில் சங்கடஹர சதுர்த்திவிழாவும், முருகனுக்கு கிருத்திகை, சஷ்டி, விழாக்கள் மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

பூஜை நேரம்

காலை 6.00 மணி – பகல் 12.00 மணி
மாலை 4.00 மணி – இரவு 8.00 மணி
ஒருகால பூஜை நடைபெறுகிறது.
காலசந்தி – காலை 7.30 மணி

அமைவிடம்

இத்திருக்கோயில் சேலம் நகரப் பேருந்து நிலையத்திலிருந்து மூன்று கிலோ மீட்டர் தொலைவில் உள்ள அம்மாப்பேட்டையில் அமைந்துள்ளது.

தொடர்பு முகவரி

செயல் அலுவலர்
அருள்மிகு பலப்பட்டரை மாரியம்மன் திருக்கோயில்
அம்மாப்பேட்டை, சேலம் – 636 003.
தொலைபேசி : 0427–2250383

அருள்மிகு கதலி லட்சுமி நரசிம்மப்பெருமாள் திருக்கோயில்

தம்மம்பட்டி.

தலச்சிறப்பு

மலை வாழ்மக்கள் தங்களின் விளை பொருளாகிய காய், கனி, வாசனாதி திரவியங்கள் விற்று செல்வது வழக்கம். அவர்களுள், கொல்லிமலை சார்ந்த லட்சுமியும் ஒருவள். அவள் தான் கொண்டு வரும் கனிகளை ஓர் இடத்தில் இரவு தங்கி மறுநாள் விற்றுச்செல்வது வழக்கம். அவள் கொண்டு வரும் கதலி (வாழை) பழம் தினம் காணாமல் போகவே, ஊர் பெரிய மனிதரிடம் முறையிட்டாள். அவரும் விசாரணை செய்து விடை தெரியாமல் தவித்தார். அன்று இரவு அயர்ந்து உறங்கும் பொழுது கனவில் ஸ்ரீமன் நாராயணன் தோன்றி கதலி காணாமல் போவதற்கு யாமே காரணம் என்றும், மலைச் சாதியினர் இரவு தங்கும் இடத்தில் கதலி வடிவத்தில் இருக்கிறேன், எனக்கு ஆலயம் எழுப்பி வழிபட்டு வர நல்லருள் புரிவதாய் கூறி மறைந்தார். மறுநாள் ஊர் மக்கள் கூடி அவ்விடத்தில் தோண்ட கதலி வடிவ சுயம்புவாக இறைவன் காட்சி கொடுத்தார். அந்த சுயம்பு கிடைத்த ஆண்டு, 1526–ஆம் ஆண்டு இதற்கு ஆதாரம் கோயில் கல்வெட்டில் இன்றும் உள்ளது.

திருவிழாக்கள்

சித்ரா பௌர்ணமியன்று தேர் நடத்துவார்கள். சுற்றுப்புற கிராமங்களில் தம்மம்பட்டி தேர் மிகவும் சிறப்பு வாய்ந்தது.

பூஜை, நடை திறந்திருக்கும் நேரம்
காலை 7.00 மணி – பகல் 12.00 மணி
மாலை 5.00 மணி – இரவு 8.00 மணி
ஒருகால பூஜை நடைபெறுகிறது.
காலசந்தி – காலை 7.30 மணி

அமைவிடம்

சேலம் மாவட்டம், கெங்கவல்லி வட்டம் தம்மம்பட்டியில் உள்ளது. ஆத்தூரிலிருந்து சுமார் 27 கி.மீ. தொலைவில் உள்ளது. தம்மம்பட்டி செல்ல இருவேறு வழித்தடங்களில் கெங்கவல்லி, மல்லியகரை வழியாக எண்ணற்ற பேருந்துகள் உள்ளன.

தொடர்பு முகவரி

செயல் அலுவலர்
அருள்மிகு கதலி லட்சுமி நரசிம்மப்பெருமாள் காசிவிஸ்வநாதர் திருக்கோயில்
தம்மம்பட்டி, கெங்கவல்லி வட்டம்,

அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில்

செவ்வாய்ப்பேட்டை, சேலம்.

இறைவன்	: சுந்தரேஸ்வரர்
இறைவி	: மீனாட்சி அம்மன்

தலச்சிறப்பு

இத்திருக்கோயில் சுமார் 300 ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும். வியாபார பெருமக்கள் மிகுந்த செவ்வாய்ப்பேட்டை பகுதியில் அமைந்துள்ளதால் வியாபார பெருமக்களும், பொது மக்களும் வழிபட்டு வருகின்றனர்.

அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் பிரசித்தி பெற்ற பழமை வாய்ந்த திருக்கோயில் ஆகும். பக்தகோடிகளுக்கு வேண்டியவரங்களை வழங்கி அருள் பாலித்து வருகின்றனர்.

இத்திருக்கோயிலில் சுந்தரேஸ்வரர், அம்மன் மீனாட்சி, விநாயகர், 63 நாயன்மார்கள், லட்சுமி நாராயண சுவாமி, வள்ளி தெய்வானையுடன் சுப்ரமணியர் சன்னதி, பஞ்சலிங்க சன்னதி, சண்டிகேஸ்வரர், சரஸ்வதி, லட்சுமி, நவகிரக சன்னதி, பைரவர் சன்னதி, சூரியன், சந்திரன் சன்னதி மற்றும் மதுரை வீரன் சுவாமி ஆகியவைகள் உள்ளன.

பழமையும் தொன்மையும் வாய்ந்த இத்திருத்தலத்தில் 63 நாயன்மார்களின் புராண வரலாற்றை சித்தரிக்கும் அழகிய வர்ணம் தீட்டப்பட்ட படங்களுடன், அதற்குரிய விளக்கத்துடன் ஆலய முன் மண்டபத்தின் மேல் பகுதியில் சித்தரிக்கப்பட்டு உள்ளது. பார்ப்பதற்கும், படிப்பதற்கும் விபரங்கள் தெரிந்து கொள்வதற்கும் மிகவும் அருமையான கதை அம்சம் மிக்கவையாகும். இத்திருத்தலம் சிவன் ஆலயம், வைணவ ஆலயம் இரண்டும் அமையப்பெற்ற முக்கிய பிரார்த்தனை ஸ்தலமாகும்.

திருவிழாக்கள்

சித்ரா பௌர்ணமி, நவராத்திரி கந்தசஷ்டி கார்த்திகை தீபம், ஆருத்திரா தரிசனம் முதலிய விழாக்கள் நடைபெற்று வருகின்றன. ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி சிறப்பு பூஜையும், பிரதோச பூஜையும் நடைபெற்று வருகின்றன.

பூஜை, நடை திறந்திருக்கும் நேரம்

காலை 7.00 மணி – பகல் 12.00 மணி

மாலை 4.00 மணி – இரவு 8.00 மணி

ஒருகால பூஜை நடைபெறுகிறது.

காலசந்தி – காலை 8.00 மணி

அமைவிடம்

சேலம் மாநகர் செவ்வாய்ப்பேட்டை திருமணிமுத்தாறு நதிக்கரையின் அருகில் அருள்மிகு மீனாட்சி சுந்தரரேஸ்வரர் திருக்கோயில் அமைந்துள்ளது.

தொடர்பு முகவரி

செயல் அலுவலர்

அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில்

செவ்வாய்ப்பேட்டை, சேலம் நகர்.

அருள்மிகு காவேட்டி அரங்கநாதர் திருக்கோயில்

கோனாகாபாடி, K.R. தோப்பூர்

இறைவன்	:	ரங்கநாதர்
இறைவி	:	ஸ்ரீதேவி, பூதேவி
ஆகமம்	:	பாஞ்சராத்ர ஆகமம்
தீர்த்தம்	:	லட்சுமண தீர்த்தம்

தலச்சிறப்பு

சரபங்கா நதிக்கரையில் வானுறவோங்கிய சோலைகளும், சுற்றிலும் தென்னந்தோப்புகளும் வளம் நிறைந்த வயல்களும் சூழ்ந்து கிழக்கு, மேற்காக வியாபித்துள்ள 250 அடி உயரமுள்ள சர்ப்பகிரகம் (எ) சர்ப்பசிகராலயம் மரஞ்செடி, கொடிகளால் சூழப் பெற்று இயற்கையோடிசைந்து காண்போருக்கு தூரத்தில் இருந்தபடியே தெய்வ உணர்ச்சியைத் தூண்டுகிறது. இதன் மேலுள்ள சிகரத்தில்தான் அருள்மிகு காவேட்டி அரங்கநாதர் திருக்கோயில் அமைந்துள்ளது. காய் வெட்டி கறை பெற்றதால் காய் வெட்டிரங்கன் எனப்பட்டார். அப்பெயரே காவேட்டிரங்கன் என்று மருவியதாக கூறப்படுகிறது.

மலைச்சிறப்பு

இம்மலை கிழக்கு மேற்கில் வியாபித்து மேற்கில் தலைப்பக்கம் உயர்ந்தும், கிழக்கில் வால் பக்கம் சிறிது சிறிதாக தாழ்ந்தும் ஒரு சர்ப்பம் படுத்திருப்பது போல் காட்சியளிக்கிறது. இதன் அடிவாரத்தில் தென்புறத்தில் பிரசித்தி பெற்ற தும்பிக்கை ஆழ்வார் சன்னதி அமைந்துள்ளது.

இம்மலையின் விஸ்தீரணம் 30 ஏக்கர். திருக்கோயில் சுமார் 300 ச.அடி. தோற்றமோ ஆதிசேடன் தென்திசையை நோக்கி ஆடுவது போல் உள்ளது. சர்ப்பம் தெற்கு நோக்கித் தன் ரேகைகளைக் காட்டியுள்ள தோற்றம் தெற்கிலிருந்து வரும் எமதூதர்களிடமிருந்து அடியார்களை நான் காப்பேன் என அரங்கன் அபயமளிக்கும் குறிப்பை புலப்படுத்துவது போன்றுள்ளது.

இந்த சர்ப்பக்கிரியின் உச்சியில் அர்ச்சை மூர்த்தியாக ஸ்ரீமன்நாராயணன் உபயநாச்சியார் கோதாவரிரங்கநாயகி சமேதராக நின்றகோலத்தில் காட்சி அளிக்கிறார். அரங்கநாதனை கோதாவரி, அரங்கநாயகி என்ற இரு உபயநாச்சியார்கள் அழகுபடுத்தி வருகிறார்கள். அரங்கநாதர் நின்றகோலத்தில் சேவை தருகிறார். காவேட்டி ரங்கனுக்கு தீவட்டி ரங்கன் என்று மற்றொரு பெயரும் உண்டு. சர்ப்பங்களுக்கு இயற்கையாகவே நாமங்கள் அமைந்து இருக்கின்றன, என்பதற்கிணங்க, இந்த சர்ப்பகிரியில் சுமார் 100 அடி நீளமுள்ள மூன்று வெண்கோடுகள் ஒன்றுக்கொன்று ஐம்பதடி இடைவெளியில் அமைந்திருப்பதால் இதற்கு சர்ப்பகிரி என்ற காரணப் பெயர் மிகவும் பொருத்தமாகவும், இயற்கையாகவும் உள்ளது. காவேட்டி ரங்கனுக்கு தீவட்டி ரங்கம் என்ற பெயரும் உண்டு.

திருவிழாக்கள்

புரட்டாசி சனிக்கிழமைகளில் சிறப்புப் பூஜைகள் நடைபெறும்.

பூஜை, நடை திறந்திருக்கும் நேரம்
காலை 7.00 மணி – பகல் 12.00 மணி
மாலை 4.00 மணி – இரவு 7.00 மணி
ஒருகால பூஜை நடைபெறுகிறது.
காலசந்தி – காலை 9.00 மணி

அமைவிடம்

சேலம் சந்திப்பிலிருந்து புகழ்பெற்ற தாரமங்கலம் செல்லும் மேற்குப் பாதையில் 7கி.மீ. தொலைவிலும், தாரமங்கலத்தில் இருந்து கிழக்கில் 3–வது கி.மீ. தொலைவிலும் உள்ளது.

தொடர்பு முகவரி

செயல் அலுவலர்
அருள்மிகு காவேட்டி அரங்கநாதர் திருக்கோயில்
கோனாகாபாடி, K.R. தோப்பூர், ஓமலூர் வட்டம் – 636 507.

அருள்மிகு கோட்டை மாரியம்மன் திருக்கோயில்

ஓமலூர்.

இறைவி : மாரியம்மன்
ஆகமம் : காரணம்

தலச்சிறப்பு

வானுற ஓங்கிய சோலைகளும், சுற்றிலும் தென்னந்–தோப்புகளும், வளம் நிறைந்த வயல்களும் சூழ்ந்த இயற்கையோடு இயைந்து காண்போருக்கு தெய்வ உணர்ச்சியைத் தூண்டும் வகையில் அருள்மிகு கோட்டை மாரியம்மன் திருக்கோயில் அமைந்துள்ளது.

சுமார் 250 ஆண்டுகட்கு முன் வோமலூர் எனப்பட்ட இவ்வூர் ஆங்கிலப்படைத் தளபதியாக இருந்த சர் தாமஸ் மன்றோ என்பவரது மனங்கவர்ந்த இடமாக விளங்கியது. சுமார் 400 ஆண்டுகட்கு முன்பு கெட்டி அரசர்களால் கட்டப்பட்ட கோட்டை ஒன்றும் சரபங்கா நதியின் மேற்கு புறத்தில் இருந்தது. கி.பி. 1644 ஆம் ஆண்டுகளில் இப்பகுதியில் இருந்த சிவன் விஷ்ணு ஆலயங்கள் பராமரிக்கப்படாமல் புறக்கணிக்கப்பட்டது. இப்பகுதியில் இருந்த பழமையான கோட்டை சூதாடும் இடமாகவும், சமூக விரோதிகளின் கூடாரமாகவும் மாறி மிகவும் சிதைந்து காணப்பட்டது. கி.பி. 1667–இல் இப்பகுதி தொட்டதேவராஜன் என்ற மைசூர் அரசரின் ஆளுகைக்குட்பட்டது. கி.பி. 1767–இல் இப்பகுதியை ஆங்கிலேய கர்னர்வுட் என்பவர் முகமதுவின் படைகளை முறியடித்து அக்கோட்டையைக் கைப்பற்றினார்.

திடீரென்று ஒரு நாள் பெருத்த இடியோசையுடன் மழை பொழிந்தது. அவ்வாறு பெய்த மழை இரண்டு மூன்று நாட்களுக்குப்பிறகு அந்த படைப்பிரிவில் உள்ள துருப்புகளுக்கு பெரியம்மையும், காலராவும் தாக்கியது, துருப்புகள் அனைவரும படுத்த படுக்கையாயினர்.

நிலைமை இவ்வாறிருக்க ஒரு வழிப்போக்கன் சார்ஜெண்ட் ஹோரியின் மனைவியிடம், அந்தக் கோயிலின் கோபுரத்தைத் தொட்டால் தான் இவ்வாறு நேரிட்டது என்றும், மேலும் இந்நோய் உனக்கும், உனது குழந்தைகளுக்கும் இன்றோ, நாளையோ வந்து விடும் என்றும் ஆதலால் கணவரிடத்தில் சொல்லி அப்பகுதி துருப்புகளை கோட்டையை விட்டு அகன்று செல்லும்படி செய்துவிடுமாறு கூறினாள்.

சார்ஜெண்ட்டின் மனைவி பயத்தினாலும், பீதியினாலும் குழம்பி இருந்த தருவாயில் பெரியம்மை நோய் அவர்களுக்கும், அவர்களது குழந்தைக்கும் தொற்றிக் கொண்டுவிட்டது.

இச்சூழ்நிலையில் சில துருப்புகள் பெரியம்மை நோயின் கடுமை தாங்காமல் இறந்து விட்டனர். நோய் வெகுவாகப் பரவ ஆரம்பித்திருந்தது. இந்நிலையில் குறிகூறும் பெண்மணி ஒருவர், இந்த இடத்தில் ஒரு மாரியம்மன் கோயில் கட்டினால் நீயும், உனது மனைவி, மகனும் மற்றும் துருப்புகளும் எல்லா துன்பங்களும் நீங்கி பாதுகாக்கப்படுவீர்கள், ஆதலால் உடனே மாரியம்மன் கோயில் கட்டுங்கள் என்றாள். அதற்கு சார்ஜண்ட் நிரூபணம் செய்தால் கோயில் கட்டுவதாகக் கூறினார். அதற்கு அப்பெண்மணி பாதுகாப்பு அலுவலர் இருக்கும் ஒரு மூலையைத் தோண்டினால் கோயில் கட்டப் பணம் கிடைக்கும் என்று கூறினாள்.

ஹோரி அப்பெண்மணி காட்டிய இடத்தில் குழி வெட்டிய போது ஒரு கைப்பிடி அளவு மைசூர் மகாராஜாவின் தங்க நாணயங்களைக் கண்டு எடுத்தார். உடனே தான் இப்பகுதியில் மாரியம்மன் திருக்கோயிலை கட்டப்போவதாகவும் பிரகடனப்படுத்தினார்.

சார்ஜெண்ட் அவ்வாறு கூறிய மாத்திரத்திலேயே நோயின் கடுமை குறைய ஆரம்பித்தது, அதிசயமாக முற்றிலும் நீங்கிவிட்டது. அவரின் ஆண்குழந்தையின் கண்கள் மலர்போலவே முன்பிருந்தது போல விரிந்தன. எல்லா நோயும் அகன்று ஒரு புத்துணர்ச்சி

பெருக்கெடுத்து ஓடியது, போல் கதிரவன் வந்தான். இதைக் கேள்விப்பட்ட அக்கம்பக்கத்து கிராமமக்கள் அனைவரும் வந்திருந்து மாரியம்மன் திருக்கோயிலைக்கட்ட தங்களால் ஆன இயன்ற உதவிகளைச் செய்தனர். அப்பெண்மணி சொன்னது போல் சில தங்க நாணயங்களே கோயில் கட்ட போதுமானதாக இருந்தன.

அருள்மிகு மாரியம்மனை பிரதிஷ்டை செய்தான். அப்பிராமணப்பெண்மணியால் தொன்றுதொட்டு கடைப்பிடித்து வந்த பழமையான மரபுப்பழக்கப்படி யோக வேட்டியையும், கமல மண்டலத்தையும் சன்மார்க்கமாக கொடுத்து அத்திருக்கோயிலின் பூஜாகாரண, காரியங்களை செய்துவர ஏற்பாடுகள் செய்து தனது பரிவாரங்களுடன் விடைபெற்றுச் சென்றுவிட்டான்.

இரண்டு பழமையான கோட்டைகளுக்கு நடுவே அமைந்த இத்திருத்தலம் சரபங்கா நதிக்கரையில் இன்றும் புகழ் வாய்ந்த பிரார்த்தனை ஸ்தலமாகவும், அம்மாரியம்மன் கண்கண்ட தெய்வமாகவும் போற்றப்படுகிறார். பழைய கோட்டையைத் தள்ளி எகிப்தின் பிரமிடுகள் போல் அமைந்த இத்திருக்கோயில் ஏராளமான மக்களைக்கவர்ந்து கண்கொடுக்கும் தெய்வமாக இப்பகுதியில் அருள்பாலித்து வருகிறாள் என்பது வரலாறு.

திருவிழாக்கள்

மாசித்திருவிழா 5 நாட்கள்

பூஜை, நடை திறந்திருக்கும் நேரம்
காலை 6.00 மணி – பகல் 12.00 மணி
மாலை 4.00 மணி – இரவு 8.00 மணி
இருகால பூஜை நடைபெறுகிறது.
காலசந்தி – காலை 6.30 மணி
சாயரட்சை – மாலை 6.00 மணி

அமைவிடம்

சேலத்திலிருந்து 15 கி.மீ தொலைவிலும், புகழ்பெற்ற தாரமங்கலத்திலிருந்து 9.கி.மீ தொலைவிலும் இத்திருக்கோயில் உள்ளது.

தொடர்பு முகவரி

செயல் அலுவலர்
அருள்மிகு கோட்டைமாரியம்மன் திருக்கோயில்
ஓமலூர் நகர் & வட்டம், சேலம் மாவட்டம் – 636 455.

அருள்மிகு கைலாசநாதர், வரதராஜப் பெருமாள் மற்றும் முக்கிய பிராணசாமி திருக்கோயில்கள்

பூலாம்பட்டி.

இறைவன்	: கைலாசநாதர்
இறைவி	: சிவகாமசுந்தரி
தலவிருட்சம்	: வில்வம்
ஆகமம்	: காரண ஆகமம்

தலச்சிறப்பு

சைவ வைணவத் தலங்கள் மிகுந்த நம் தமிழகத்தில் சேலம் மாநகரம் "கொங்குநாடு" எனச் சிறப்புடையதாகும். மலைகள் நிறைந்த பகுதி "சைலம்" ஆகும். சந்திரகிரி என்ற மலை ஆதியிலிருந்து சிறப்புற்று பல சித்தர்களும், உயிர்காக்கும் மூலிகைகளும் நிறைந்த மலையாகும். இதிலே புனித காவேரி தென்வடலாக பவானி நோக்கி ஓடி, கூடுதுறையில் சங்கமம் ஆகிறது. மேற்கு பார்த்து உக்கர கலையாக நமது அருள்மிகு கைலாசநாதர் சுவாமியும், கிழக்கு பார்த்து சாந்தசொரூபியாக சிவகாமி அம்மையும் அமர்ந்து நாளும் வழிபடும் பக்தர்களுக்கு நல்ல அருள்பாலித்து வருவது கண்கூடாகும்.

தனிச்சிறப்பு

சேலம் மாவட்டத்தில் தாரமங்கலம் சிற்பக்கலை நிறைந்த திருக்கோயில் என்பது தமிழகம் அறியும். இதைக் கட்டுவித்த சிவனருள் கெட்டி முதலி காவிரி நதி நீராட இந்த மண்ணுக்கு வந்து தங்கியிருந்தார். அப்போது தாம் வழிபடும் அருள்மிகு

கைலாசநாதரையே காவிரி நதிக்கரையில் எழுந்தருளச் செய்தார் என்ற செவி வழிச்செய்தி அறிவிக்கிறது.

சிவாலயங்களில் மூல மூர்த்தியும், பரிவாரக் கடவுளும் அமையும் நிலையில் பாளைய திருக்கோயில் முறையில் சிவலிங்கம் பாசுபத அமைப்பில் விளங்கி வருவது சுவாமியினுடைய உக்கிரத்தை புலனாக்கும்.

சிவபெருமான்கைலாசநாதர் என்ற பெயரில் அமைந்து ஞானமூர்த்தியாக அருள்பாலிக்கிறார். மேற்படி திருக்கோயில் காவிரிக்கரையில் அமைந்த புண்ணிய நதி நீராடி சிவ வழிபாடு செய்வதற்கும், பாவ நிவர்த்திக்கும் சிறந்த இடமாகும்.

இங்கு அருள்மிகு நடராஜப் பெருமான் மிகவும் பிரசித்தி பெற்றவர். அருள்மிகு கைலாசநாதர் சந்நிதி வலப்புறத்தில் கிழக்கு பார்த்து மற்றும் முக்கிய புராண சாமியும் வீற்றிருந்து அருள்பாலிக்கின்றனர். சிவ ஆலயங்களில் தட்சிணாமூர்த்தி அமைப்பு போல வரதராஜ பெருமாளுக்கு விகனஸ ஆச்சாரியார் ஞானமூர்த்தியாக அருள்பாலிக்கிறார். அருள்மிகு வரதராஜப் பெருமாள் தனி சந்நிதி கொண்டு அருள்பாலிக்கிறார்.

திருவிழாக்கள்

திருவாதிரை, நடராஜர் உற்சவம், மகா சிவராத்திரி, அன்னாபிஷேகம்

பூஜை, நடை திறந்திருக்கும் நேரம்
காலை 6.00 மணி – பகல் 12.00 மணி
மாலை 5.00 மணி – இரவு 8.00 மணி
இருகால பூஜை நடைபெறுகிறது.
காலசந்தி – காலை 7.30 மணி
சாயரட்சை – மாலை 6.00 மணி

அமைவிடம்

சேலத்தில் இருந்து மேற்காக 50 கி.மீ. தொலைவிலும், மேட்டூர் அணையிலிருந்து 15 கி.மீ. தொலைவிலும், பவானியிலிருந்து காவிரி மார்க்கமாக 25 கி.மீ. வடக்கிலும், இத்திருக்கோயில் அமைந்துள்ளதாகும்.

தொடர்பு முகவரி
செயல் அலுவலர்
அருள்மிகு கைலாசநாதர், வரதராஜப் பெருமாள்
மற்றும் முக்கிய பிராணசாமி திருக்கோயில்கள்
பூலாம்பட்டி, இடைப்பாடி வட்டம், சேலம் மாவட்டம் –636 107.
தொலைபேசி எண் : 04283–222936

அருள்மிகு கண்ணனூர் மாரியம்மன் திருக்கோயில்

தாரமங்கலம், ஓமலூர்.



இறைவி	:	மாரியம்மன்
ஆகமம்	:	காரண ஆகமம்

தலவரலாறு

அருள்மிகு கண்ணனூர் மாரியம்மன் தாரமங்கலத்திலிருந்து சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு கண்ணனூரிலிருந்து இரட்டை மாட்டு வண்டியில் வந்ததாகவும், வண்டியில் வரும்போது, வண்டிக்காரன் வண்டிக்கு பாரமாக இருப்பதாக நினைத்து மாரியம்மன் சிலையை வண்டியில் இருந்து கீழே தூக்கி போட்டபிறகு மறுபடியும் பார்த்தால் வண்டியிலேயே இருந்ததாகவும், தாரமங்கலத்திற்கு வண்டி ஓட்டி வந்தவன் தாரமங்கலத்தை அடைந்ததும் மாரியம்மன் கண்ணனூரில் இருந்து என் வண்டியில் வந்து கொண்டே இருக்கிறது என கூறி, இங்கு உள்ள பெரியவர்களை கூப்பிட்டு, அம்மன் கண்ணனூரிலிருந்து வந்த வரலாற்றை எடுத்துக் கூறிவிட்டு சென்றதாகவும், அதன்பின் பெரியவர்கள் தாரமங்கலத்தில் அம்மாவை பிரதிஷ்டை செய்து வழிபட்டு வந்ததாகவும் வரலாறு கூறுகிறது.

அருள்மிகு மாரியம்மன் கோயில் முன் சாவடி கட்ட ஊர் பொதுமக்கள் முயற்சி செய்து, கோவிலுக்கு அருகில் உள்ள தண்ணீர்

நிற்கும் குட்டையில் ஒரு வேலமரம் இருந்தது. வேலமரத்தை வெட்டி எடுத்தால் கட்டிடத்திற்கு பயன்படும் என்று ஊர் பொதுமக்கள் மரத்தை வெட்ட அதற்கு தாரமங்கலம் கிராம அதிகாரி தாரமங்கலம் பொது ஜனங்கள் அதாவது முக்கிய நபர்கள் நாட்டாண்மைக்காரர், காரியக்காரர், பிராதானக்காரர் என்று ஊர் பெரியவர்கள் பேரில் கோர்ட்டில் வழக்கு தாக்கல் செய்து கோர்ட் மூலம் ஆஜராக வேண்டி நோட்டீஸ் வந்தது. தாரமங்கலத்தில் உள்ள அனைவரும் வீட்டுக்கு ஒருவராக வண்டி வாகன போக்குவரத்து இல்லாத அந்தக் காலத்தில் ஆயிரக்கணக்கான நபர்கள் நடந்தே, சேலம் புறப்பட்டு சென்று கொண்டு இருந்தனர். ஸ்ரீ கண்ணனூர் மாரியம்மன் பொதுமக்களுக்கு முன்பாக வெள்ளை குதிரை வாகனத்தில் சென்றது. செல்லும் வழியில் பவளத்தானூருக்கு அடுத்ததாகவுள்ள அணைமேடு என்ற இடத்தில் செம்மறி ஆடு மேய்த்துக் கொண்டிருந்த சுமார் 10 வயதுள்ள சிறுமி பொதுமக்களிடம் ஒரு அம்மன் வெள்ளை புடவை உடுத்திக் கொண்டு வெள்ளை குதிரை மேல் ஏறிச் சென்றதாகவும், அந்த அம்மாள் தன்னிடம் என் மக்கள் பின்தொடர்ந்து வந்து கொண்டு இருக்கிறார்கள். அவர்களை பயப்படாமல் வரச்சொல்லு என்று கூறிவிட்டு சென்றதாகவும் கூறினாள்.

சேலம் கோர்ட்டில் தாரமங்கலத்திலுள்ள தண்ணீர் குட்டையில் வேலமரம் வெட்டிய வழக்கில் கோர்ட் நீதிபதி கூப்பிடும் போது நீதிபதி கண்ணுக்கு ஒரு சிறிய வேலஞ்செடியாக காணப்பட்டது. கிராம அதிகாரி ஊர்ப்பொதுமக்கள் பேரில் பொய் வழக்கு போட்டது தவறு என்ற எண்ணத்துடன் நீதிபதி வழக்கை தள்ளுபடி செய்ததாகவும் வரலாறு கூறுகிறது.

தலச்சிறப்பு

இன்றுவரை அருள்மிகு கண்ணனூர் மாரியம்மன் கோவிலுக்கு வந்த ஆயிரக்கணக்கானவர்களுக்கு கண் பார்வை கொடுத்துள்ளார். வரலாற்றிலேயே இல்லாத அளவு பொதுஜனங்கள் திருவிழாக் காலங்களில் அக்னி ஏந்தி அக்னியில் இறங்குவது வழக்கம். அருள்மிகு கண்ணனூர் மாரியம்மன் இங்குள்ள மக்களுக்கு டாக்டராகவும் உள்ளார். டாக்டரால் முடியாத வியாதிகளை எல்லாம் நம்பிக்கை மேல் சொஸ்தம் ஆய்க்கொண்டு உள்ளது. ஒரே பீடத்தில் வலதுபுறத்தில் மாரியம்மனும், இடதுபுறத்தில் காளியம்மனும் இருக்கின்றது.

அருள்மிகு கண்ணனூர் மாரியம்மன் ஆலயத்தில் சுமார் 50 ஆண்டுகளுக்கு முன் ஒமலூரில் வெற்றிலை விற்கும் சோலியபிள்ளை ஆறுமுகம் என்பவருக்கு பெரிய அம்மை வார்த்து இரண்டு கண்களிலும் முத்து வைத்து கண்கள் தெரியாமல் போனது.

தாரமங்கலம் அருள்மிகு கண்ணனூர் மாரியம்மன் ஆலயத்தில் படுத்து தங்கி வந்தால் கண்பார்வை வந்துவிடும் என்று பொதுஜனங்கள் நம்பிக்கையுடன் கூற, அதை நம்பி ஆறுமுகம் மாரியம்மன் ஆலயத்திற்கு வந்தார். ஒரு வாரம் தங்கி இருந்தார், அப்படியிருக்க பாதி நாக்கை அறுத்து கீழே போட்டு விட்டு கீழே கவிழ்ந்து படுத்தவர் 24 நாட்கள் கழித்து எழுந்தபோது அறுந்த நாக்கு கூடிவிட்டது. கண்பார்வையும் வந்து விட்டது. ஆறுமுகம் கண் பார்வையுடன் ஓமலூருக்கு மகிழ்வுடன் திரும்பச் சென்றுள்ளார் என்பதும் வரலாறு.

திருவிழாக்கள்

ஆடித்திருவிழா, தமிழ் வருடப்பிறப்பு, கார்த்திகை தீபம்

பூஜை, நடை திறந்திருக்கும் நேரம்
காலை 6.00 மணி – பகல் 12.30 மணி
மாலை 4.00 மணி – இரவு 8.00 மணி
இருகால பூஜை நடைபெறுகிறது.
காலசந்தி – காலை 7.00 மணி
சாயரட்சை – மாலை 6.00 மணி

அமைவிடம்

சேலத்திருந்து 20 கி.மீ. தொலைவில் உள்ள தாரமங்கலத்தில் இத்திருக்கோயில் அமைந்துள்ளது.

தொடர்பு முகவரி

செயல் அலுவலர்
அருள்மிகு கண்ணனூர் மாரியம்மன் திருக்கோயில்
தாரமங்கலம், ஓமலூர் வட்டம், சேலம் மாவட்டம் – 636 502.

திரு விளக்கு

திரு விளக்கு மும்மூர்த்தி வடிவம். ஆசனமாகிய அடிப்பாகம் பிரம்ம அம்சம், நெடித்தண்டாகிய நடுப்பாகம் விஷ்ணு அம்சம், நெய் ஏந்தும் அகல் பகுதி சிவன், அதன் மேலுள்ள பகுதி மகேஸ்வரன், சிகரமாகிய உச்சிப்பகுதி சதாசிவன், நெய் – நாதம், திரி – பிந்து, சுடர்–திருமகள், பிழம்பு– கலைமகள், தீ–சக்தி.

அருள்மிகு மாரியம்மன், பிடாரியம்மன், விநாயகர் திருக்கோயில்

அஸ்தம்பட்டி, சேலம்.

இறைவன்	: விநாயகர்
இறைவி	: மாரியம்மன், பிடாரியம்மன்

தலச்சிறப்பு

"சேலம் மாநகரம்" தற்போதைய நடைமுறையில் வழங்கி வரும் பெயராகும். இதன் முற்கால பெயர் சைலம். சைலம் என்றால் மலை. மலைகளால் சூழப்பட்ட நகரம் என்று பெயர். நாளடைவில் அதுமருவி சேலம் என்றழைக்கப்படுகிறது. இந்த சேலம் மாநகருக்கு மாங்கனி நகரம் என்ற பெயரும் உண்டு. காரணம் இங்கு நல்ல சுவையுள்ள மாம்பழங்கள் விளைகின்றன. இவ்வளவு சிறப்பு பெற்ற இந்த நகரத்தின் மையப்பகுதியில் இருந்து சுமார் எட்டு கிலோமீட்டர் வடபுறமாகச் சென்றால் சேலத்திற்கு மேலும் புகழ் சேர்க்கும் கோடை வாசஸ்தலமான ஏற்காடு மலை அடிவாரம் உள்ளது. இந்த இடைப்பட்ட தூரத்தை இணைக்கும் ரோட்டிற்கு பழைய கால பெயர் சேரராஜன் ரோடு என்பதாகும். இந்தப் பெயரும் காலப் போக்கில் மருவி செரிரோடு என்று தற்போது அழைக்கப்படுகிறது. இங்குதான் அருள்மிகு மாரியம்மன் அமைந்து அருள்பாலித்து வருகிறாள். வந்து வணங்குவோரை வாழவைக்கும் தெய்வமாக வருவோர்க்கெல்லாம் வரம் வழங்கி வருகிறாள் அன்னை.

இச்சீர்மிகு அன்னைக்கு முக்கிய திருவிழாவாக மாரியம்மன் திருவிழா ஒவ்வொரு வருடமும் சித்திரை மாதம் சீரும் சிறப்புமாய்

காண்போர் வியக்கும் வண்ணம் நடைபெற்று வருகிறது. திருவிழாவின் போது மாரியம்மன் வீதி உலா வரும் காட்சி கண்கொள்ளா காட்சியாகும். அப்போது அன்னையை அனைவரும் பணிந்து வணங்கி அருள் வேண்டும் காட்சி மெய்சிலிர்க்க வைப்பதாக இருக்கும்.

"சத்தாபரணம்" இத்திருவிழாவின் போது நடைபெறும் மற்றொரு சிறப்பான நிகழ்ச்சியாகும். பொதுமக்களும் சேவார்த்திகளும் மிகுந்த உற்சாகத்துடன் சத்தாபரணம் காட்சியினை கண்டு களிப்பர்.

அன்னையின் மனம் குளிர ஒவ்வொரு வருடமும் இவ்வாறு சீரும் சிறப்புமாக விழா நடைபெற்று வருகிறது. அன்னையும் அனைவரையும் காத்தருளி வருகிறாள்.

இத்திருக்கோயிலின் உபகோயிலாகிய பிடாரியம்மன் திருக்கோயிலும் உள்ளது. இத்திருக்கோயிலிலும் திருவிழா காலங்களில் மிகச்சிறப்பாக உற்சவங்கள் நடைபெறும்.

இத்திருக்கோயிலின் வளாகத்திலேயே அருள்மிகு விநாயகர் சன்னதி அமைந்துள்ளது. வருடந்தோறும் விநாயகர் சதுர்த்தியன்று மிகச்சிறப்பான முறையில் விநாயகர் சதுர்த்தி உற்வசம் கொண்டாடப்பட்டு வருகிறது.

திருவிழாக்கள்

சித்திரைத் திருவிழா, விநாயகர் சதுர்த்தி, நவராத்திரி

பூஜை, நடை திறந்திருக்கும் நேரம்
காலை **6.00** மணி – பகல் **12.00** மணி
மாலை **5.00** மணி – இரவு **8.00** மணி
இருகால பூஜை நடைபெறுகிறது.
காலசந்தி – காலை **7.00** மணி
சாயரட்சை – மாலை **6.00** மணி

அமைவிடம்

சேலம் மாநகரில் அஸ்தம்பட்டி என்ற பகுதியில் உள்ளது.

தொடர்பு முகவரி

செயல் அலுவலர்
அருள்மிகு மாரியம்மன், பிடாரியம்மன், விநாயகர் திருக்கோயில்
அஸ்தம்பட்டி, சேலம் – **636 007.**

அருள்மிகு குமரகிரி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்

அம்மாப்பேட்டை, சேலம்.

இறைவன் : தண்டாயுதபாணி

தலச்சிறப்பு

ஸ்ரீலஸ்ரீ கருப்பண்ணசுவாமி என்ற துறவி இத்திருக்கோயில் அமைந்துள்ள குன்றின்மீது திருமுருகனின் திருப்பாதங்களை வைத்து தொழுது, அன்றாடம் யாசகம் எடுத்து அதன்மூலம் கிடைக்கும் உணவுப் பொருட்களை பணியாட்களுக்கு கொடுத்து இந்த ஆலயத்தை 1932–ஆம் ஆண்டில் கட்டி முடித்து குடமுழுக்கு செய்துள்ளார்.

அருள்மிகு குமரகிரி தண்டாயுதபாணி சுவாமியை வணங்கும் பக்தர்களுக்கு எத்துயர் ஏற்பட்டாலும் அதனை தக்க சமயத்தில் நீக்கி திருவருள் வழங்கும் தெய்வமாகும். எத்தகைய கொடிய குணம் உள்ளவராயினும் இத்திருக்கோயில் திருமுருகனின் திருமுகம் கண்டு தரிசித்தால் கொடிய குணங்கள் நீங்கி ஒரு தூய மனிதராக மாற்றும் சக்தி உள்ள குமரக்கடவுள் ஆவார். இத்திருக்கோயில் முருகக்கடவுளை தரிசித்தால் அறுபடை வீட்டையே தரிசித்த பாக்கியம் கிட்டும். இம்முருகன் சிலை பழனிமலை முருகனின் பிரதிபலிப்பாக அமையப்பெற்றுள்ளது.

மூர்த்தங்கள்

திருக்கோயிலின் மூலவர் திருமுருகன் வடக்கு நோக்கி இடதுகாலை சிறிது மடக்கி, வலதுகாலை நன்கு ஊன்றி வலதுகையில் சக்திவேல் ஏந்தி அருள்பாலித்தபடி நின்று காட்சி தருகிறார்.

இவ்வாலய சுற்றுப்புற மண்டபமும், முன்புற மண்டபமும், சன்னதி எதிரில் ஒரு வாயிலும் அமையப்பெற்றுள்ளது. வாயிலுக்கு முன்புறமும், சுற்றுப்புறமும், பிரகாரமும் உள்ளது. திருக்கோயிலின் கீழ் சேவார்த்திகள் தங்கி உணவருந்த பெரிய அளவில் மண்டபம் அமைந்துள்ளது.

திருவிழாக்கள்

இத்திருக்கோயிலின் முக்கியப் பெருவிழா பங்குனி உத்திர பெருவிழா மார்ச் – ஏப்ரல் மாதங்களில் 12 தினங்கள் மிகச்சிறப்பாக நடத்தப்படுகிறது. மற்றும் தைப்பூசம், மாசி மாதம் திருப்படித்திருவிழா, சித்திரை பௌர்ணமி, ஆடிக்கிருத்திகை, விநாயகர் சதுர்த்தி, கந்தர் சஷ்டி, கார்த்திகை தீபம் முதலியன முக்கிய திருவிழாக்கள் ஆகும்.

தனிச்சிறப்பு

இத்திருக்கோயில் ஒரு மலைக்கோயிலாகும். ஏறத்தாழ பழனிமலையைப்போன்று தோற்றம் உடையது. சுமார் 650 படிகள் கொண்ட ஆலயமாகும். இத்திருக்கோயில் மலைமேல் சென்று மாநகரின் சுற்றுப்புறங்களை தொலைதூரம் காணலாம். இது இரவில் கண்கொள்ளாக்காட்சியாகும்.



பூஜை, நடை திறந்திருக்கும் நேரம்
காலை 7.00 மணி – பகல் 12.30 மணி
மாலை 4.00 மணி – இரவு 7.30 மணி
மூன்றுகால பூஜை நடைபெறுகிறது.
காலசந்தி – காலை 8.00 மணி
உச்சிகாலம் – மதியம் 12.00 மணி
சாயரட்சை – மாலை 6.00 மணி

அமைவிடம்

இத்திருக்கோயில் சேலம் நகர பேருந்து நிலையத்திற்கும் நகர புகைவண்டி நிலையத்திற்கும் 4 கிலோ மீட்டர் தொலைவில் அம்மாப்பேட்டையில் (சென்னை தேசிய நெடுஞ்சாலையில்) அமையப்பெற்ற மலைக்கோயில்.

தொடர்பு முகவரி

செயல் அலுவலர்
அருள்மிகு குமரகிரி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்
சன்னியாசிகுண்டு அஞ்சல், சேலம் – **636 015.**



திருக்கோயில்களில் தவிர்க்கவேண்டியவைகள் :

1) சமய சின்னங்களை அணியாமல் ஆலயத்திற்குள் செல்லுதல்.
2) கோயிலில் உள்ள தெய்வங்களுக்கு முன்னால் நாம் நமது பின்புறம் காட்டி உட்காருதல்.
3) தீப ஆராதனை நடக்கும் போது குறுக்கும், நெடுக்குமாக செல்லுதல்.
4) சந்நிதிக்கு நேராக நின்று கொண்டு மற்றவர்கள் தரிசனம் செய்ய இடையூறு செய்தல்.
5) பிரகாரம் சுற்றி வரும்போது அரசியல் / வீட்டுக் கதைகளை மற்றவர்களிடம் பேசிக் கொண்டு செல்லுதல்.
6) பிரசாதத்தை சாப்பிட்டுவிட்டு கோயிலில் உள்ள கலை வேலைப்பாடுகள் மிகுந்த தூண்களில் கைகளைத் துடைத்தல்.
7) கோயிலை அசுத்தம் செய்தல்.
8) லுங்கி அணிந்து செல்லுதல்

ஆகியவைகளை திருக்கோயில்களில் தவிர்த்தல் வேண்டும்.

அருள்மிகு கொப்புகொண்ட பெருமாள் திருக்கோயில்

பெத்தநாயக்கன் பாளையம்.

இறைவன்	: கொப்புகொண்டபெருமாள்
ஆகமம்	: வைணவம்

தலச்சிறப்பு

சுமார் 400வருடங்களுக்கு முன்பு எங்கள் மூதாதையர் எங்களுக்கு சொந்தமான வயலுக்கு தழை அறுப்பதற்காக மூதாதையர் வீட்டு பெண்கள் இந்த மலைக்கு வந்தார்கள். இப்பொழுது உள்ள மூலவர் இடத்தில் புற்றாங்கண் இருந்திருக்கின்றது. புற்றாங்கண்ணிற்குமேல் இருந்த தழையை அறுக்கும்போது மூதாதையரின் காதில் இருந்த (கொப்பு) கழண்டு புற்றாங்கண்ணில் விழுந்து விட்டது. அதன்பிறகு அந்த இடத்தில் தேடினார், கொப்புகை அகப்படவில்லை. பிறகு மாலை வீட்டிற்கு சென்று தன் கணவனிடம் மலையில் தழை அறுக்கும்போது கொப்பு கழண்டு விழுந்துவிட்டது. நான் தேடிப் பார்த்தேன், தென்படவில்லை என்று சொன்னார்.

மறுநாள் காலையில் அந்த அம்மாவின் கணவர் தழை அறுத்த இடத்தில் வந்து தேடினார். புற்றாங்கண்ணில் விழுந்து விட்டது என்று புற்றாங்கண்ணை வெட்டினார். உடனே புற்றாங்கண்ணில் இருந்து ரத்தம் வந்ததாம், ரத்தத்தை பார்த்தவுடன் பயந்து ஓடி விட்டார். அன்று

இரவு (கொப்பு கொண்ட பெருமாள்) கனவில் வந்து ஒரு பெரியவர் போல காட்சியளித்து நான் கொப்புக்கொண்ட பெருமாள் குடி கொண்டுள்ளேன் நீ எனக்கு பச்சபந்தல் அமைத்து, சனிக்கிழமை தோறும் எனக்கு வழிபாடு செய்து வா, என்று கூறினார்.

அதன் பிறகு அந்தப் பெரியவர் சனிக்கிழமை தோறும் புற்றாங்கண் இருந்த இடத்தில் சுத்தம் செய்து பச்ச பந்தல் அமைத்து வழிபட்டு வந்தார்.

தனக்கு நீண்ட நாட்களாக குழந்தை பாக்கியம் இல்லாததால் தனக்கு பிறகு இந்த கோயிலில் பூஜை செய்வதற்கு வாரிசு இல்லாததால் கொப்புகொண்ட பெருமாள் இடமே வேண்டிக்கொண்டார். எனக்கு குழந்தை பிறந்தால் எனக்கு சொந்தமான நிலத்தில் சரிபாதி விற்று உனக்கு கோயில் அமைக்கிறேன் என்று வேண்டிக்கொண்டார். சில வருடங்களுக்கு பிறகு ஒரு ஆண்குழந்தை பிறந்தது.

அதன்பிறகு தனக்கு சொந்தமான வயல்களை தனக்கு பாதியை வைத்துக்கொண்டு மீதியை விற்றுவிட்டு அதில் இத்திரு கோயிலை நிர்வாகம் செய்து கொண்டு வருகிறார்கள்.

இப்படி இத்திருக்கோயிலில் பூஜை செய்து கொண்டு இருக்கும் வேளையில் ஆடு மேய்த்துக்கொண்டு இருந்த இடையர் ஒருவர் பெரியவரை கேலி செய்தார். கொப்பு கொண்ட பெருமாளாம் இங்கு தெய்வம் இருப்பது உண்மையென்றால் கொப்புகொண்ட பெருமாளே எனக்கு உப்புக் கண்டம் தா என்று கேட்டார். உடனே ஆடுகள் அனைத்தும் மயக்கம்போட்டு கீழே விழுந்தன. இடையனுக்கு மனதில் பயம் ஏற்பட்டு கோயிலில் பூஜை செய்து கொண்டிருந்த பெரியவரிடம் வந்து சொன்னதெல்லாம் தவறு என்று மன்னிப்பு கேட்டார். பெரியவரே! ஆடுகளை எல்லாம் பிழைக்க வைத்துவிடு உன் கோயிலுக்கு பக்தர்கள் வருவதற்கு படிகள் கட்டித் தருகிறேன் என்று வேண்டிக்கொண்டாராம். உடனே பெரியவர் மயங்கி கிடந்த ஆடுகளின்மேல் துளசி தீர்த்தம் தெளித்தார். ஆடுகள் எல்லாம் எழுந்து நன்றாக மேய்ந்தன. பிறகு இடையனுக்கு பெருமாள் மேல் முழு பக்தியாகி தினமும் ஆடுமேய்க்க வரும் போதெல்லாம் அவரால் முடிந்தவரை தினமும் 2 மீட்டர் அளவுக்கு படிகளை அமைத்துவந்து படிகளை கட்டிமுடித்தார். இவ்வாறாக கோயில் தோன்றிய விதம் எங்கள் மூதாதையர் மூலம் அறிந்து தெரிவித்துள்ளோம்.

திருவிழாக்கள்

இத்திருக்கோயிலில் சனிக்கிழமை தோறும் அபிஷேக பூஜை நடைபெறுகிறது. வருடத்தில் புரட்டாசி மாதம் சிறப்பு ஆராதனை நடைபெறுகிறது. புரட்டாசி மாதத்தில் ஒவ்வொரு சனிக்கிழமையும் பக்தர்கள் இறைவனை தரிசித்து செல்கின்றனர். ஏகாதசி, மார்கழி வைகுண்ட ஏகாதசி, கார்த்திகை தீபம் போன்ற நாட்களில் சிறப்பாக பூஜை நடைபெறுகிறது.

பூஜை, நடை திறந்திருக்கும் நேரம்
காலை 8.00 மணி – பகல் 2.00 மணி
ஒருகால பூஜை நடைபெறுகிறது.
உச்சிகாலம் – மதியம் 12.00 மணி

அமைவிடம்

சேலம் – ஆத்தூர் நெடுஞ்சாலையில் உள்ள பெத்தநாயக்கன் பாளையத்திற்கு வடக்கு திசையில் இருந்து 4 கி.மீட்டர் தொலைவில் கொப்பு கொண்ட மலையில் எழுந்தருளி அருள் பாலித்து வருகிறார் கொப்பு கொண்ட பெருமாள்.

தொடர்பு முகவரி

பரம்பரை அறங்காவலர்
அருள்மிகு கொப்புகொண்ட பெருமாள் திருக்கோயில்
பெத்தநாயக்கன் பாளையம். ஆத்தூர் வட்டம்.
சேலம் மாவட்டம் – 636 117.

ஒன்பது வகையான பக்தி மார்க்கங்கள்

1) கேட்டல்
2) பாடுதல்
3) நினைத்தல்
4) பாதங்களை சேவித்தல்
5) பூசித்தல்
6) வணங்குதல்
7) தொண்டு செய்தல்
8) நட்பு கொள்ளுதல்
9) தன்னையே அர்ப்பணித்துக் கொள்ளுதல்

அருள்மிகு பிரசன்ன வெங்கட்டரமண சுவாமி திருக்கோயில்

சின்ன திருப்பதி, காருவள்ளி.

இறைவன்	: ஸ்ரீ பிரசன்ன வெங்கடரமண சுவாமி
இறைவி	: ஸ்ரீ பத்மாவதி
தலவிருட்சம்	: ஊஞ்சமரம்
ஆகமம்	: பாஞ்சராத்ர ஆகமம்
தீர்த்தம்	: சரபங்கா தீர்த்தம்

தலச்சிறப்பு

கோவிந்தா! கோவிந்தா! என்று உள்ளங்குளிரக் கூறிகொண்டே சுமார் 300 படிகள் ஏறிச் சென்றால் மலையில் உள்ள கோவிலை அடையலாம். கிழக்குப்புறமாக பிரதான நுழைவாயில் ஒன்றும் வடபுறமான ஒரு திருவாயிலும் அமைந்துள்ளது.

திருப்பதி திருமலையில் கோயில் கொண்டுள்ள வெங்கடேசப்பெருமாளே சேலம் மாவட்டத்திலுள்ள இந்த "சின்னத்திருப்பதியில் எழுந்தருளியுள்ளதால் இத்திருத்தலம் அக்காலந்தொட்டு "சின்னத்திருப்பதி" என்றே அழைக்கப்படுகிறது.

திருமாலின் தசாவதாரக் காட்சிகள், பரந்தாமன் பனிக்கடலாம் பாற்கடலில் பள்ளி கொண்டுள்ள காட்சி, பெரிய

திருவடியாம் கருடாழ்வார். சிறிய திருவடியாம் ஆஞ்சநேயர், தேவர்கள், முனிவர்கள் இறைவனை வழிபடும் காட்சி ஆகியன கண்கொள்ளக் காட்சியாகும்! அர்த்த மண்டபக் கற்றூண்களில் செதுக்கப்பட்டுள்ள சிறிய சிற்பங்கள் பாண்டிய மன்னன், பாண்டிமாதேவி, நாகக் கன்னிகையர் என்பர். அழகிய கயல்மீன் வடிவங்களும் உள்ளன.

வைகுண்டத்தில் வீற்றிருக்கும் வைகுண்டநாதனைத் தரிசிக்க வாயுதேவன் விரைந்து வந்தார். திருத்தல காவலர் ஆதிசேடன் அவரை உள் நுழைய விடாது தடுத்தார். இருவருக்குள் யார் பலசாலி என்ற போட்டியெழுந்தது. ஆதிசேடனோ மேருமலையின் குமாரரான ஆனந்த பர்வதத்தைச் சுற்றிக் கொண்டு நிலை நின்றார். வாயு பலமாக வீசி அம்மலையைப் பெயர்த்திட முயன்றார். சுற்றிச் சுழன்றடிக்கும் கடும் சூறாவளியைக் கண்டு அனைத்து உயிர்களும் அஞ்சி நடுங்கின. தேவர்கள் ஓடிச் சென்று இருவரையும் சமாதானம் செய்து சமரசம் கொள்ளும்படி வேண்டினர்.

தேவர்கள் வேண்டுகோளைச் செவி மடுத்த ஆதிசேடன் தன் ஆயிரம் தலைகளில் ஒன்றை மட்டும் சற்றே நகர்த்தினார். காற்றின் வேகத்தால் ஆனந்த பர்வதத்தின் ஒரு பகுதி பிளந்து வீசி எறியப்பட்டது. அது இரு துண்டுகளாகிப் பூமியில் விழுந்தது. அதில் ஒன்றே தொண்டை நாட்டுப் பெரிய திருப்பதி! மற்றொன்றே கொங்கு நாட்டில் விழுந்த இச்சின்னதிருப்பதி மலையாகும்.

இவ்வாறு தோன்றிய மலையில் ஒரு புற்றில் மகாவிஷ்ணு தங்கி இருந்தார். சிவபிரானும், பிரம்மதேவனும் திருமாலுக்கு அமுது படைக்கப் பசுக்கூட்டங்களோடு சேர்ந்தனர். புற்றில் இருந்த திருமாலுக்குத் தினமும் தனித்து வந்து உருமாறிய பசுமாடு பாலைப் பொழிந்தது. இப்பசுவின் மடியில் மட்டும் பால் இல்லையே என்று ஐயப்பட்ட இடையன் இப்பசுவின் போக்கைத் தனியாகக் கவனித்தான். ஒருநாள் மறைந்திருந்து கவனித்து அதன் மர்மத்தைப் புரிந்து கொண்டான். குன்றின் மீதேறி குளிர்தலை வாசலுக்குப் பசுபால் சொரியும் அதிசயத்தைக் கண்டு வியந்தான். அப்போது அக்குன்றின் மீது ஒரு சிறிய அழகிய கோவில்

உருவாகியிருந்ததையும் கண்டு அவன் அதிசயப்பட்டான். இக்காட்சியைக் கண்ட அவனுக்கு மலைக்கண்டான் என்னும் பெயர் வந்தது. அவ்வம்சத்தினரே சுவாமி காரியங்களைச் செய்து வந்தனர். மலைக்கண்டான்

மக்களிடம் அறிவித்தான், திரண்டு வந்த மக்கள் அர்ச்சாவதார மூர்த்தியாகிய வெங்கட்டரமண சுவாமி சுயம்பு மூர்த்தியாகி அக்குன்றில் நிற்பதைக் கண்டு பேரானந்தங்கொண்டனர். குன்றெடுத்துப் பசுக்கூட்டங்களை குளிர் மலையினின்று காத்த தெய்வம், பசுவாலேயே அடையாளம் காட்டப்பட்டு அன்பர்களுக்கு தரிசனந்தரும் தலம், இந்தப் திருத்தலமாகிய சின்னத்திருப்பதியே ஆகும்!

திருமாலின் திருமார்பில் வீற்றிருக்கும் அன்னை திருமகள் கருத்து வேறுபட்டால் அவரைப் பிரிந்திருந்தார். பத்மாவதித் தாயார் தனக்கு வாழ்வு கொடுத்த இலட்சுமி அம்மையை மறக்காது தம்முடன் சேர்ந்திருக்க அழைத்து வரச் சொன்னார்.கபிலமாமுனிவர் சென்று அன்னை ஸ்ரீதேவியை அழைத்து வந்தார். இருப்பக்கமும் இரு தேவியர் நிற்க வெங்கட்டரமண சுவாமி நடுவே நின்று அருள்காட்சி வழங்குகின்றார்.

பிணி தீர்க்கும் மாமருந்து !

இத்திருக்கோவிலில் வழங்கும் பிரசாதப் பொருள்கள், தீர்த்தம், துளபம், மற்றும் சுக்குப்பொடி கலந்த நாட்டுச் சர்க்கரையுமாகும்! துளசி மார்புக்கு உகந்தது. சுக்குப்பொடி வயிற்றுக்கு உகந்தது. திருக்கோயில்களில் வைத்தியம் எந்த அளவுக்கு மக்களுக்கு இறைவழியாகச் சேவை புரிகின்றது என்பதை நன்கு எண்ணிப் பாருங்கள் !

இம்மலையிலும் மலையைச் சூழ்ந்துள்ள காடுகளிலும் பிணி தீர்க்கும் மூலிகைகள் நிறைந்து காணப்படுகின்றன ! கோவிந்த நாம சங்கீர்த்தனம் ஒலிக்கும் இக்கோயிலும் சுற்றியுள்ள மூலிகைக்

காடுகளும் எதிர்காலத்தில் சிறந்த சித்த வைத்திய கேந்திரமாய்த் திகழும் என்பதில் ஐயமில்லை !

ஆண்டவன் செய்த அற்புதங்கள்

ஆவிலிப்பிள்ளை என்பவர் அருங்குணச் செல்வர். இறை பக்தி மிக்கவர். குளத்தில் நீராடி கோவிந்தனைத் தரிசிக்க வந்தவர். தவறிப்போய் குளத்தில் அவர் விழுந்து மூர்ச்சையானார். வழிப்போக்கன் உருவில் ஓடிவந்த இறைவன் அவரை எடுத்து மீண்டும் உயிர்ப்பித்தார் ! காத்து இரட்சித்தார் !

வெங்கட்டரமண ஐயங்கார் தீர்த்தம் கொண்டுவர தெப்பக் குளம் சென்றார். கள்வன் ஒருவன் கோவிலுக்குள் நுழைந்து சுவாமியின் ஆடைகளைக் களவாடிச் சென்றான். அதுகண்ட அர்ச்சகர் மீண்டும் ஆடை கிடைக்கும் வரை அன்ன ஆகாரம் உண்ணேன்" என்றார். மூன்றாம் நாள் காலையிலேயே குளத்தூரிலிருந்த ஆசாரி ஒருவர் (கனவின் மூலம்) நிகழ்ந்ததையறிந்து எம்பெருமானுக்குப் புத்தாடை அணிவித்துப் பூசையும் செய்தார் என்பது உண்மை நிகழ்ச்சி !

இறைவனின் அணிகலன்களைத் திருடவந்த கள்வன் தனது இரு கண்விழிகளையும் இழந்து கதறினான். பதறினான். தன் பிழைகளை உணர்ந்து நாற்பத்தெட்டு நாட்கள் கடுமையாக இறைவனை பிரார்த்தனை செய்து கண்ணொளி பெற்றான் !

அர்ச்சகர் கோபாலையங்கார், தாராபுரத்தைச் சேர்ந்தவர்; அவர் இரவு பூசையை முடித்து நடந்து செல்லும் போது பனைமர உயரத்திற்கு பேய் ஒன்று வந்து அவரை வழிமறித்தது; வெங்கட்டரமணரின் திருப்பெயரைக் கூறியழைக்கவே அப்பேய் அஞ்சியலறி ஓடிப்போய்விட்டது !

இது போன்ற எண்ணற்ற லீலைகளை இறைவன் செய்தருளியுள்ளார் ! இன்றும் பேய் பிசாசு, பில்லி சூனியம் போன்ற துஷ்ட தேவதைகளாம் தீய சக்திகளையும், உளப்பிணி உடற்பிணி, ஆகியவற்றையும் சுவாமி தன் திருவருட்பார்வை ஒன்றாலேயே ஓட்டி வருகிறார் என்பதும் சுற்றுவட்டார மக்களின் அசைக்க முடியாத உறுதியான நம்பிக்கையாகும்.

"மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையாய் வணங்கினோர்க்கு வார்த்தை, சொல், சற்குருவும் வாய்க்கும் பராபரமே" என்பது அடிகள்

தாயுமானவர் திருவாக்கு! மூர்த்தியின் பெருமையையும் தலத்தின் சிறப்பையும் கண்டோம்.

தீர்த்தம்

சின்னத்திருப்பதித் திருக்கோயிலின் மலை அடிவாரத்தில் ஓர் அழகிய பெரிய தெப்பக்குளம் உள்ளது. இதன் பெயர் "சந்திர புஷ்கரணி" என்பதாம். இத்திருக்குளத்தை மைசூர் மன்னன் ஒருவன் வெட்டியதாகக் கூறுகின்றனர். புரட்டாசி மாதத்தில் இத்திருக்குளத்தில் தெப்பத்திருவிழா வெகுவிமரிசையாக நடைபெறும். இத்திருமலையில் இருந்த அருவிகள் இயற்கையின் மாறுபாட்டால் ஊற்றுக்கண்கள் அடைபட்டுத் தடைபட்டு வற்றிப் போய்விட்டன. மூலிகைகள் நிறைந்த மலையடிவாரத்திலுள்ள இத்திருக்குளத்தில் மக்களின் சகல பாபங்களும் தீராத உடற்பிணிகளும் நீங்கிப்போகும் என்பது பக்த கோடிகளின் அசைக்க முடியாத நம்பிக்கையாகும் !

திருவிழாக்கள்

சித்திரைப் பௌர்ணமித் திருவிழா, தமிழ்ப்புத்தாண்டு திருவிழா, வைகாசி வசந்தோற்சவத்திருவிழா, ஆனித்திருமஞ்சனம், ஆடிப் பெருக்குத் திருவிழா, ஆவணி அவிட்ட விழா, ஸ்ரீஜெயந்தி விழா உரியடித் திருவிழா, புரட்டாசி சனிக்கிழமைகள், ஐப்பசி தீபாவளித்திருவிழா, கார்த்திகை தீபம், தை உழவர் திருநாள், மாசி மகாமகம், பங்குனி ஸ்ரீராமநவமி மற்றும் யுகாதித்திருவிழா.

பூஜை, நடை திறந்திருக்கும் நேரம்
காலை 5.00 மணி – பகல் 1.30 மணி
மாலை 3.00 மணி – மாலை 6.00 மணி
மூன்றுகால பூஜை நடைபெறுகிறது.
காலசந்தி – காலை 6.00 மணி
உச்சிகாலம் – மதியம் 12.00 மணி
சாயரட்சை – மாலை 5.00 மணி

அன்னதானம்

இத்திருக்கோயிலில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அன்னதானத்திட்டம் மூலம் தினமும் 100 நபர்களுக்கு அன்னதானம் வழங்கப்படுகிறது.

அமைவிடம்

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், மரக்கோட்டைக் கிராமத்தில் காருவள்ளிக்கு அருகே வளஞ்சார்ந்த சின்னஞ்சிறிய அழகான மலைமீது முன்னூறு அடி உயரத்தில் அமைந்துள்ளது தான் சின்னத்திருப்பதித் திருக்கோயில்! இரயில் மூலமாக சென்றால் சேலம் சந்திப்பிலிருந்து பெங்களூர் மார்க்கத்தில் காருவள்ளி இரயில் நிலையத்தில் இறங்கியும் கோயிலை அடையலாம்.

தொடர்பு முகவரி

செயல் அலுவலர்
அருள்மிகு பிரசன்ன வெங்கட்டரமண சுவாமி திருக்கோயில்
சின்ன திருப்பதி, காருவள்ளி. ஓமலூர் வட்டம், சேலம் மாவட்டம்.

அருள்மிகு இலட்சுமிநாராயண சுவாமி திருக்கோயில்

சேலம் நகர்.



இறைவன் : நாராயண சுவாமி
இறைவி : இலட்சுமி

தலச்சிறப்பு

இலட்சுமி நாராயண பெருமாள் பெரிய பிராட்டியான மஹாலட்சுமியை தன் மடியில் அமரவைத்து ஸ்ரீ லட்சுமி நாராயண சுவாமியாக, நித்ய கல்யாண கோலத்தில் திவ்ய தம்பதியராக காட்சியளித்து அருள்பாலிக்கும் திருகோயில் சேலம் மாநகரில் இது ஒன்றே ஆகும்.

மேலும் சக்கரத்தாழ்வார் இணைந்த மூர்த்தியாக இங்கு அருள்பாலித்து வருவது சிறப்பம்சமாகும்.

ஸ்ரீயப்பதியான பகவான் திருநாட்டில் இருந்த வண்ணமேதாழ வந்து உறையும் பதிகளில் ஒன்றானதும், ஐம்பெரும் பதிகளில் இரண்டாவதுமான ஸ்ரீசைலபுரம் என்னும் இச்சேலம் மாங்கனி மாநகரில் ஜகதாச்சாரியரான ஸ்ரீவிகநஸ மஹரிஷியின் சீடர்களில்

ஒருவரான சாதாதபர் என்னும் ரிஷி அனுதினமும் திருமணிமுத்தாற்றில் நீராடிவிட்டு ஆற்றின் மேற்கு கரையில் (கோட்டையில்) திருக்கோயில் கொண்டு எழுந்தருளி அருள்பாலித்து வரும் திருவருள்மிகு அழகிய வல்லி உடனுறை அழகிரிநாத பெருமாளை வழிபட்டு வாழ்ந்து வந்தார். ரிஷியின் வயது முதிர்வின் காரணமாக திருக்கோயிலுக்கு வந்து அழகிரிநாதரை வழிபட இயலாமல் போனது. அப்பொழுது அந்த ரிஷி பெருமாளிடம் அடியேனுக்கு யான் இருக்கும் இடத்திலேயே தாங்கள் இருவரும் தம்பதி சமேதராக வந்து அருள்பாலித்து இங்கேயே நித்யவாஸம் செய்ய வேண்டும் என்று பிரார்த்தனை செய்தார். அந்த ரிஷியின் பிரார்த்தனைக்கு இணங்கி பெரிய பிராட்டியை தனது இடது தொடையில் அமரவைத்துக் கொண்டு, சங்கு, சக்கரத்தோடு சதுர்புஜதாரியாய் என்றும் நித்ய கல்யாண கோலத்தோடு அருள்மிகு லக்ஷ்மி நாராயண சுவாமி என்ற சிறப்பு நாமத்தோடு கிழக்கு நோக்கி அமர்ந்த கோலத்தில் சேவை செய்து வருகிறார்.

தனிச்சிறப்பு

நாராயணப் பெருமாள் ஐந்து நிலை ராஜகோபுரத்தோடும், மூலஸ்தானம் ஆனந்த நிலைய விமானத்தோடும் கம்பீரமாக சேவை சாதிக்கும் திருக்கோயில் சேலம் மாநகரிலே இத்திருக்கோயில் ஒன்று மட்டுமே.

ஒரே பீடத்தில் சக்கரத்தாழ்வார் முன்பக்கமும், சங்காழ்வார் பின்பக்கமும் (அதாவது சுதர்சன பாஞ்சஜன்னியம்) என்று சிறப்பான

திருக்கோலத்தோடு சேவை சாதிப்பது எங்கும் காணக்கிடைக்காத சிறப்பு அம்சமாகும்.

திருவிழாக்கள்

ஸ்ரீ வைகுண்ட ஏகாதசி சொர்க்கவாசல் திறப்பு மற்றும் புரட்டாசி சனிக்கிழமைகள்

பிரார்த்தனை ஸ்தலம்

அருள்மிகு இலட்சுமிநாராயணப் பெருமாளை சனிக்கிழமை தோறும் 21 முறை வலம் வந்து நெய் தீபமேற்றி 7 வாரம் அர்ச்சனை செய்தால் சுக்ர தோஷங்கள், களத்திர தோஷம் போன்ற தோஷங்கள் விலகி வெகு விரைவில் திருமணம் ஆகும் என்பது ஐதீகம்.

நடை திறந்திருக்கும் நேரம்
காலை **6.30** மணி முதல் **11.30** மணி
மாலை **5.30** மணி முதல் **8.30** மணி
மூன்று கால பூஜைகள்
காலசந்தி – காலை **9.00** மணி
உச்சிகால – மதியம் **11.00** மணி
இராக்கால பூஜை – இரவு **8.00** மணி

அமைவிடம்

சேலம் மாநகரின் மையப்பகுதியான இரண்டாவது அக்ரஹாரத்தில் கிழக்கு நோக்கி இலட்சுமி நாராயண பெருமாள் திருக்கோயில் ஐந்து நிலை ராஜகோபுரத்தோடு அமைந்துள்ளது.

தொடர்பு முகவரி
செயல் அலுவலர்,
அருள்மிகு இலட்சுமி நாராயணசுவாமி திருக்கோயில்
2வது அக்ரஹாரம், சேலம்.
மின்னஞ்சல் : lakshminarayanakovil@gmail.com
தொலைபேசி எண் : 0427–2221577

1008 சிவாலய கைலாயம்

சேலம்.

ஸ்ரீ அருணாச்சல சங்கேஸ்வரர் சுவாமி.

ஸ்ரீ உமையாம்பிகை அம்பாள்,

சேலம் மாவட்டம் மற்றும் வட்டம், அரியானூர், சங்ககிரி பிரதான சாலையில் (சேலத்திலிருந்து 12 கிலோ மீட்டர் தொலைவில்) மலையின் மேல் உலகெங்கும் இல்லாத வகையில் தனித்தனி சன்னதிகளில் 1008 சிவலிங்கங்கள் நந்தி தேவருடன் அமைந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கும் வகையில் அமைந்துள்ள திருத்தலம் ஆகும்.

1008 சிவன் கோவில் முகப்புத்தோற்றம்

ஸ்ரீ அஷ்டலட்சுமிகள்

இந்து சமய அறநிலையத்துறையின் நலத்திட்டங்கள்

ஒருகால பூஜை நிதியுதவித் திட்டம்

ஒரு காலத்திற்குக் கூட பூஜை செய்ய இயலாத நிலையில் உள்ள கோயில்களுக்கு ஒரு காலமாவது பூஜை நடைபெற வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 2002ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்படி அரசு பங்களிப்பு ரூ. 90,000ம் பொதுமக்கள் பங்களிப்பு ரூ. 10,000 ஆக மொத்தம் ரூ. 1 லட்சம் முதலீடு செய்யப்பட்டு அதில் பெறப்படும் வட்டியைக்கொண்டு இத்திட்டம் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

சேலம் மாவட்டத்தில் 271 திருக்கோயில்களில் ஒரு காலபூஜை திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தில் இணைய விரும்பும் திருக்கோயில்கள் ரூ. 10,000–க்கான வரைவோலையை இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பெயருக்கு எடுத்து, சரக ஆய்வர் பரிந்துரையுடன் உரிய உதவி ஆணையரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

கிராமப்புற திருப்பணி நிதியுதவித் திட்டம்

இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள கிராமப்புறங்களில் அமைந்துள்ள ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் திருப்பணி செய்யும் பொருட்டு ரூ. 50,000 வீதம் நிதியுதவி மாண்புமிகு தமிழக முதல்வர் ஆணைப்படி வழங்கப்பட்டு வருகிறது.

ஆதி திராவிடர், பழங்குடியினர் வசிக்கும் பகுதி திருக்கோயில்கள் திருப்பணி நிதியுதவித் திட்டம்

இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத ஆதி திராவிடர், பழங்குடியினர் மக்கள் வசிக்கும் பகுதியில் அமைந்துள்ள திருக்கோயில்களுக்கு திருப்பணி செய்யும் பொருட்டு ரூபாய் 50,000 வீதம் நிதியுதவி, மாண்புமிகு தமிழக முதல்வர் ஆணைப்படி வழங்கப்பட்டு வருகிறது.

கிராமக்கோயில் பூசாரிகள் ஓய்வூதியத்திட்டம்

அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் இல்லாத திருக்கோயில்களில் 10 வருடம் பணிபுரிந்து 60 வயது பூர்த்தி அடைந்திருக்கும் பூசாரிகளுக்கு மாதந்தோறும் ரூ. 1,000 ஓய்வூதியம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆணைப்படி வழங்கப்பட்டு வருகிறது.

மனம் கவரும் கற்சிற்பங்கள்

ஹயர்கிரீவர் நினைவாற்றல்
பெருக்கும் கடவுள்

பிட்சாடனர்
ரிஷிபத்தினியை மயக்கிய வசீகரர்

ஊர்த்தவதாண்டவர்
நடனப்போட்டியின் முடிவு

சிவசக்தி சாந்தம்
சிவன் பார்வதி கூடல் காட்சி

மன்மதன்
இறைவனையும் மயக்கும்
அழகுக்கடவுள்

ரதி
நவயௌவன சௌந்தரி

ரிஷிபத்தினி
எல்லாம் அவன் நினைவு, நிகழ்வை
மறந்த நிலை, என்றும் அழகான ரிஷிபத்தினி

மகாவிஷ்ணு மோகினி கோலம்
முனிவர்கள் கையொன்று செய்ய
கருத்தொன்று நாட என்ற நிலையில்

இராஜகோபுரம்

இராஜகோபுரத்தை இழுக்கும் யானையும், குதிரையும்

ஊத்துவத்தாண்டவர்

சித்தர்
கல் யானைக்கு கரும்பு கொடுத்தவர்

வாலி சுக்ரீவன் வதம்
இராமன் பார்க்கும் போது வாலி மட்டும் தெரியும், வாலி பார்க்கும் நிலையில் இராமர் தெரியாது.

யாழி
யாழி வாயில்
கல் உருண்டை உருளும்.

குதிரை கால் முன் மண்டபம்
கல் சிற்பங்கள் அழகு இங்கு தோன்றும் காட்சி

கல் சங்கிலி
ஒரே கல்லால் செய்யப்பட்ட
8 கல் வளையங்கள் 3 அடுக்கு கல் தாமரை, 8 கல் கிளிகள்,



வேதகாலத்தில் ரிஷிகள் இறைவனை
பூஜை செய்த காட்சி

சீதையை கண்டுவந்த அனுமன்
இராமனிடத்தில் சீதையின் கணையாளியை சமர்ப்பித்தார்.

பாலையும், தண்ணீரையும்
தனியாகப்பிரித்து
பாலை மட்டும்
உறிஞ்சும் அன்னபட்சி

கொஞ்சும் கிளி

சங்கீத தூண்கள்:
மூன்று தூண்கள் உள்ளன.
ஒவ்வொரு தூணும்
ஒவ்வொரு ஸ்வரங்களை தரவல்லது.

யாழி: யாழிமேல் வீரன்
அமர்ந்து துஷ்ட
மிருகங்களையும், எதிரிகளையும்
கொன்று நாட்டை
பாதுகாக்கின்றான்.

வீர பராக்ரமம்:
யாழிமேல் வீரன் அமர்ந்து
போர் புரிகையில், தன் காலுக்கடியில்
யானை கொல்ல முயற்சி செய்கின்றது,
ஆனால் தன் கால் பலத்தால்
யானையை அடக்கும் காட்சி.

இரண்ய சம்ஹாரம்:
ஹரிநாம சப்தத்தை
வெறுத்த இரண்யாக்ஷனை
தன் மடியில்
வைத்து பிரதோஷ வேளையில்
வதம் செய்தார்.

இராமானுஜர்:
தான் ஒருவனே நரகத்திற்கு
சென்றாலும், அனைவரும்
பரமபதத்திற்கு செல்ல வேண்டுமென
எட்டெழுத்து மந்திரத்தை
உச்சரித்த இராமானுஜர்.

வால் கோட்டை ஆஞ்சநேயர்:
இராவணனுடைய சபையில்
இராவணனுக்கு
நிகராக தனது வாலால் சிம்மாசனம்
அமைத்து அவனுக்கு
சமமாக அமர்ந்தார்.

முதலையும் யானையும்:
கும்பகோணம்
பட்டீஸ்வரத்தில் காளையுடன்
நட்புறவு கொண்ட யானை
இங்கு முதலையுடன்
நட்புறவு கொண்டது.

கிருஷ்ணர்:
புல்லாங்குழல் இசையால்
அகிலத்தை தன்வசப்படுத்திய
கிருஷ்ணன்.

ராஜசபையில் பசுபோல் வேடமணிந்த
தெனாலிராமனுக்கு இடையன்
பரிசளித்த கிழிந்த சாக்கினை
பெருமையாக
ஏற்றுக்கொண்ட காட்சி

உலகளந்த பெருமாள்:
முதலடி விண்ணுக்கும், இரண்டாம் அடி
மண்ணுக்கும், மூன்றாவது அடி
பலிசக்ரவர்த்தி தலையில் காலை வைத்து
பாதாளலோகத்திற்கு அமிழ்த்தினார்.

கருடசேவை: நான்கு வேதங்களின்
பிரதிநிதியான கருடபகவான் மேல்
திருமால் அமர்ந்து காட்சியளிக்கிறார்.

நங்கை: இராஜசபையில் தன் கையையே
கண்ணாடியாக்கி திலகமிடும் நங்கை.

அமர்ந்த கருடன்: எப்பொழுதும் எம்பெருமான் பிரயாணம் செய்யும் பொருட்டு தயார் நிலையில் அமர்ந்திருக்கும் கருடன்.

ஸ்ரீநிவாசர்: கலியுகத்தில் வெங்கடேசப் பெருமாள் நிலைத்திருக்கிறார்.

வீர ஆஞ்சநேயர்: சஞ்சீவி மலையை தன் கரத்தால் தூக்கியதால் வீர ஆஞ்சநேயர் என பெயர் பெற்றார்.

கல் ஜன்னல்:கல்லால் கலைநயமிக்க ஜன்னல்.

ஓவியங்கள்

ஜலகிரீடை :
என்னை
தெய்வம் என்று
வணங்கினால் தான்
ஆடைகளை தருவதாக
பெண்களிடம் கண்ணன்
கூறிய ஜலகிரீடை
காட்சி.

கஜேந்திர மோட்சம் :
திருமாலையே
சரணாகதியடைந்து
கஜேந்திர ஆழ்வாரை
காக்கும் பொருட்டு
தன்னுடைய சக்கரத்தால்
முதலையை வதம்
செய்தார்.

கால சக்கரம் :
மனிதனுடைய
வாழ்வில் இன்பம், துன்பம்
சமநிலையிருக்கும்
பொருட்டு கால சக்கரம்
சுழன்று
கொண்டிருக்கிறது.

பேளூர்

ஒரே கல் தூணில் உள்ள யாழி

ஒரே கல் தூணில் உள்ள குதிரை

தமிழ்நாடு அரசு
இந்து சமய அறநிலையத்துறை
திருக்கோயில்களின் அன்னதானத் திட்டம்

சேலம் இணை ஆணையரின் மண்டலத்தில் சேலம் மாவட்டத்தில் அன்னதான திட்டம் நடைபெறும் கோயில்களின் விபரம்

1 அருள்மிகு கோட்டை மாரியம்மன் திருக்கோயில், கோட்டை, சேலம் நகர்
2 அருள்மிகு சுகவனேசுவரர் சுவாமி திருக்கோயில், சேலம் நகர்
3 அருள்மிகு காசிவிஸ்வநாதர் சுவாமி திருக்கோயில், சேலம் நகர்
4 அருள்மிகு தான்தோன்றீஸ்வரர் மற்றும் ஸ்ரீ அஷ்டபுஜ பாலமதன வேணுகோபாலசுவாமி திருக்கோயில், பேளூர், வாழப்பாடி
5 அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில், தாரமங்கலம், ஓமலூர்
6 அருள்மிகு அழகிரிநாதசுவாமி திருக்கோயில், கோட்டை, சேலம் நகர்.
7 அருள்மிகு வெண்ணங்கொடி முனியப்ப சுவாமி திருக்கோயில், ஜாகீர் அம்மாபாளையம், சேலம்
8 அருள்மிகு வெங்கடேசப்பெருமாள் திருக்கோயில், சின்னதிருப்பதி, சேலம்
9 அருள்மிகு வரதராஜப்பெருமாள் திருக்கோயில், ஒருக்காமலை, சங்ககிரி
10 அருள்மிகு சித்தேஸ்வரசுவாமி திருக்கோயில், கஞ்சமலை
11 அருள்மிகு பத்ரகாளியம்மன் திருக்கோயில், மேச்சேரி
12 அருள்மிகு பிரசன்ன வெங்கடரமணசுவாமி திருக்கோயில், சின்னதிருப்பதி, காருவள்ளி
13 அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயில், சித்திரைச்சாவடி, சேலம்
14 அருள்மிகு கன்னிகாபரமேஸ்வரி அம்மன் திருக்கோயில், சேலம்
15 அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், இளம்பிள்ளை, சேலம்
16 அருள்மிகு பாலசுப்ரமணியசுவாமி திருக்கோயில், வடசென்னிமலை, ஆத்தூர்
17 அருள்மிகு வெள்ளைபிள்ளையார் திருக்கோயில், ஆத்தூர்
18 அருள்மிகு அங்காளம்மன் திருக்கோயில், கல்வடங்கம்
19 அருள்மிகு பிரசன்ன நஞ்சுண்டேஸ்வரர் திருக்கோயில், எடப்பாடி நகர்
20 அருள்மிகு லட்சுமி நரசிம்மசுவாமி திருக்கோயில், நங்கவள்ளி, மேட்டூர்
21 அருள்மிகு மாரியம்மன், திரௌபதியம்மன் திருக்கோயில், செவ்வாய்ப்பேட்டை, சேலம் நகர்
22 அருள்மிகு குமரகுரு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், அம்மாப்பேட்டை, சேலம்

மேலே குறிப்பிட்டுள்ள திருக்கோயில்களில் பக்தர்கள் தாங்கள் குறிப்பிடும் தினத்தில் அன்னதானம் செய்வதற்கு குறிப்பிட்ட தொகை செலுத்தினால் அந்த தினத்தில் அன்னதானம் வழங்கப்படும்.
அன்னதான நன்கொடை செலுத்துபவர்கள் வருமானவரிச்சட்டம் **80G** ன் கீழ் வருமான வரிவிலக்கு பெறலாம்.

இணை ஆணையர்,
இந்து சமய அறநிலையத்துறை, சேலம் மண்டலம்.

சேலம் மாவட்ட திருக்கோயில்கள் வரைபடம்

1) அருள்மிகு சுகவனேசுவரர் சுவாமி திருக்கோயில், சேலம் நகர்
4) அருள்மிகு கோட்டை மாரியம்மன் திருக்கோயில், கோட்டை, சேலம் நகர்
5) அருள்மிகு தான்தோன்றீஸ்வரர் மற்றும் ஸ்ரீ அஷ்டபுஜ பாலமதன வேணுகோபாலசுவாமி திருக்கோயில், பேளூர், வாழப்பாடி
7) அருள்மிகு காயநிர்மலேஸ்வரர், பிரசன்ன வெங்கடேச பெருமாள், கைலாசநாதர் திருக்கோயில்கள், ஆத்தூர் நகர்
8) அருள்மிகு காமநாதீஸ்வரர் திருக்கோயில், ஆறகழூர், ஆத்தூர்
11) அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில், தாரமங்கலம், ஓமலூர்
14) அருள்மிகு மாரியம்மன் திரௌபதியம்மன் திருக்கோயில், செவ்வாய்ப்பேட்டை, சேலம் நகர்
18) அருள்மிகு வெங்கடேசப்பெருமாள் திருக்கோயில், சின்னதிருப்பதி, சேலம்
21) அருள்மிகு சோமேஸ்வரர் திருக்கோயில், சங்ககிரி
23) அருள்மிகு வரதராஜப்பெருமாள் திருக்கோயில், ஒருக்காமலை, சங்ககிரி
25) அருள்மிகு செல்லாண்டியம்மன், மாரியம்மன் திருக்கோயில், வைகுந்தம், சங்ககிரி
26) அருள்மிகு கோதண்டராமசுவாமி திருக்கோயில், அயோத்தியாப்பட்டணம், சேலம்
27) அருள்மிகு சித்தேஸ்வரசுவாமி திருக்கோயில், கஞ்சமலை
28) அருள்மிகு பத்ரகாளியம்மன் திருக்கோயில், மேச்சேரி
29) அருள்மிகு காசிவிஸ்வநாதர் திருக்கோயில், வாழப்பாடி
30) அருள்மிகு லட்சுமி நரசிம்மசுவாமி திருக்கோயில், நங்கவள்ளி, மேட்டூர்
31) அருள்மிகு பாலசுப்ரமணியசுவாமி திருக்கோயில், வடசென்னிமலை, ஆத்தூர்
34) அருள்மிகு சேர்வராயன் சுவாமி திருக்கோயில், மஞ்சக்குட்டை, ஏற்காடு
36) அருள்மிகு குமரகுரு சுப்ரமணியசுவாமி திருக்கோயில், அம்மாபேட்டை, சேலம்
37) அருள்மிகு பிரசன்ன நஞ்சுண்டேஸ்வரர் திருக்கோயில், எடப்பாடி நகர்
46) அருள்மிகு வெள்ளைபிள்ளையார் திருக்கோயில், ஆத்தூர் நகர்
48) அருள்மிகு கதலி லட்சுமி நரசிம்மப்பெருமாள் திருக்கோயில், தம்மம்பட்டி
52) அருள்மிகு கைலாசநாதர் வரதராஜப்பெருமாள் மற்றும் முக்கிய பிராணசாமி திருக்கோயில்கள், பூலாம்பட்டி